

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 25th April 1960.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAO) in the Chair.

I.—QUESTIONS ANSWERS.

STARRED QUESTIONS.

Mica

* 798 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருவண்ணமலை தாலுக்கா, துரிஞ்சாபுரம் பிர்க்கா, வடகரும்பலூரில் மைக்கா கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டதா ?

(ஆ) அப்படியாயின் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is no record of the occurrence of mica of economic value in Vadakarumbalur village. The Superintending Geologist, Southern Circle, Madras, has however been requested to furnish particulars of any recent investigation in the area.

(*b*) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த வடாற்காடு மாவட்டத்தில் மைக்கா, சாதாரணமாக இரும்புக் கனிகள், கந்தகம் போன்ற பொருள்கள் கிடைப்பதால், ஜியாலாஜிகல் சர்வே ஆரம்பிப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : That will be considered, Sir.

SRI T. T. DANIEL : May I know whether any economic survey to find out the existence of mica on an all-State basis has been conducted by our Government ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI K. VINAYAKAM : In view of the fact that these veins of mica are found to a large extent in Gudur, Nellore district, and contiguous areas like Tiruttani and these veins come up to the borders of our State, will the Government consider the question of conducting a geological survey at least in the border area of our State, viz., in Tiruttani ?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a suggestion which the Government will consider.

SRI A. VEDARATHNAM : ஸார், மைக்கா இங்கே லாபகரமான முறையிலே போதிய அளவு இல்லாது போனாலும் சிறிதளவாவிலும் இருக்கிறதா ? நம் நாட்டின் மைக்கா தேவை எவ்வளவு ? அப்படி பற்றுக்குறை இருப்பதிலிருந்து சிக்கனமான முறையில் உபயோகிக்க சர்க்கார் முன்வருவார்களா ?

[25th April 1960

The Hon. Sri R. VENKATARAMAN : 1,000 ரூபாய் செலவழித்தால் 5 ரூபாய்க்கு மைக்கா எடுப்பது பொருத்தமல்ல. இது கட்டுபடியாகக் கூடியதாக இருந்தால் சர்க்கார் இந்த வேலையை எடுத்துக்கொள்ளுமே தவிர, கொஞ்சம் கொஞ்சம் அங்கங்கே கனிப்பொருள்கள் இருக்கிறதென்ற காரணத்தால் ஜியாலாஜிகல் சர்வே எடுக்க முடியாது.

Sri T. T. DANIEL : What is the difficulty in undertaking an economic survey on an all-India basis? May I know whether the Government will be pleased to conduct a re-survey in the Kanyakumari district in view of the fact that mica is available there and is visible even to the naked eye? We are able to see with the naked eye the existence of mica in the hilly tracts of the Kanyakumari district.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, what we see with the naked eye is an optical illusion. Very often, when we see such occurrences, we begin to imagine that there are mining deposits. There are priorities which the State Government have fixed for the purpose of undertaking geological survey and I do not think mica has a very high priority.

Allotment of houses by the City Improvement Trust

*** 799 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சென்னையில் "**City Improvement Trust**" மூலமாகக் கட்டப்படும் வீடுகள், கட்டி முடித்து, விளம்பரம் செய்த பிறகு வீடுகளை யார் யாருக்குத் தேவையோ, அதை எழுதிக் கேட்பதற்குப் பதிலாக, விளம்பரத்திற்கு முன்னாலேயே ட்ரஸ்ட் அங்கத்தினர்களின் சிபார்சுகளின் பேரில் ரிஜிஸ்டர் செய்யப்படுவது உண்மையா ?

(ஆ) இப்போது சமீபகாலத்தில் அந்த முறை மாற்றிக்கொள்ளப் பட்டதா ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) No, Sir. Allotments of houses are made by the Trust only with reference to the applications received in response to advertisements in the press.

The selection of allottees from the applications received for allotment of houses is made by the Chairman and the Trustees jointly and individually.

(*b*) Does not arise.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், பத்திரிகைகளில் விளம்பரம் எத்தனை தினங்களுக்கு முன்பு செய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : எந்தத் தேதியிலிருந்து என்று சொன்னால் எத்தனை தினங்களுக்கு முன்னால் என்று சொல்ல முடியும்.

Sri V. K. KOTHANDARAMAN : வீடுகள் யார் யாருக்கு அலாட்மென்ட் செய்யவேண்டுமென்று இருக்கிறது ? விளம்பரம் செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு யார் யாருக்கு விடவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது ? எந்தத் தேதியிலிருந்து எத்தனை தினங்களுக்கு காலம் கொடுக்கப்படுகிறது ?

25th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இது சம்பந்தமான ப்ரொவீஜரை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. முதலில் ஸ்கீம் போடப்படுகிறது. அந்த இடத்தில் வீடுகள் கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு மனைகள் எல்லாம் பிரிக்கப்பட வேண்டும். அதன் பிறகு ப்ளூ பிரிண்ட் எடுக்கப்படுகிறது. எடுத்த பிறகு எந்தவிதமான மனைகள் கிடைக்கும் அதற்கு வேண்டிய மனு கொடுக்கலாம் என்று அச்சடித்த புஸ்தகம் ஒன்றை இரண்டு ரூபாய்க்கு விற்கிறார்கள். அந்தப் புஸ்தகத்திலுள்ள குறிப்புகள் பிரகாரம் மனுக்கள் போடவேண்டும். தனக்குச் சொந்தமாகவோ அல்லது உறவினருக்கோ வீடு இருக்கக் கூடாது. அந்த விதமான தகுதி உடையவர்கள் அப்ளிகேஷன் போட வேண்டும். அத்துடன் 100 ரூபாய் பணம் கட்டுவதற்கு தேதி குறிப்பிட்டிருப்பார்கள். பணம் கட்டிய பிறகு மனுவைக் கொடுக்க வேண்டும். அதன் பிறகு டிரஸ்ட் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும். சி.ஐ.டி. ஒரு அடானமஸ் பாடி. இது முடிவு செய்வது நியாயமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Sir, is it not an erroneous conception that buildings are given away for the mere asking by some individuals to some other individuals—by either the Chairman of the City Improvement Trust or the Trustees—by private negotiation ? Is it also not a fact that sites or houses are allotted only on the basis of the needs of the applicants and they are given only to those who deserve the same and who do not possess a house or plot in the City of Madras and on verifying the fact whether the income of the applicant was adequate enough to pay back the rates fixed by the Trust ? Is it not a fact that all these formalities are regularly and properly observed ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, that is exactly what I said just now. The hon. Member has given some additional information.

SRI M. K. SOMASUNDARAM : 1959-ம் வருஷத்திலே எத்தனை அப்ளிகேஷன் வரப்பெற்றது ? எத்தனை பேருக்கு அல்லாட்மெண்ட் கொடுக்கப்பட்டது ? மொத்தத் தொகை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : 2,000, 3,000 வீடுகளுக்கு அப்ளிகேஷன் கொடுத்திருந்தார்கள். ஒன்றுக்கு 10 மடங்கு அப்ளிகேஷன்கள் வந்திருந்தன.

SRI V. K. KOTHANDARAMAN : குறிப்பிட்ட நபர் பேரிலோ அல்லது குடும்பத்தில் உள்ளவர்கள் பேரிலோ ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் கட்டுகிறார்களே அப்படி கட்டப்பட்டு வாங்கியிருக்கக்கூடிய வீடுகள் வாடகைக்கு விடப்படுவது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : விதிகள் பிரகாரம் அப்படிக் கட்ட முடியாது. யாராவது ஏமாற்றியிருக்கலாம். யாருக்கும் நாம் முன்பு சொன்னதுபோல் எக்ஸ்ரே வைத்துப் பார்ப்பது கிடையாது. அப்ளிகேஷனில் அவர்கள் என்ன தகவல் கொடுக்கிறார்களோ அதை வைத்துத்தான் முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. விதிகளின்படி கொடுக்க முடியாது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : In view of the fact that heavy congestion is caused by the allotment of so many houses, and sites to private individuals, in view of the fact that scarcity conditions prevail and also in view of the fact that there is such a large demand for the houses from the public, may I know whether there is any proposal to acquire some more areas in the suburbs and allot the same to the large number of applicants ?

[25th April 1960

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, we are now thinking of developing two neighbourhoods on the type of Thyagarayanagar which was developed some thirty years ago. One is in West Madras area between the Avadi Road-Integral Coach Factory and the Poonamallee High Road. That would be 1,000 to 1,200 acres. There is another neighbourhood which we want to develop and that is in North Madras, Vyasarpadi, where also we have acquired about 1,000 acres. When these two suburban townships come up, there may be some relief to the congestion in the city.

Sri A. VEDARATHNAM : வீடுகளுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் தங்களுக்கோ, உறவினர்களுக்கோ வீடுகள் இருப்பது கூடாது என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். உறவினர்களுக்கு வீடு இருப்பது தவறு ? அவர்களுக்கு இடம் இல்லை என்ற காரணத்தால் விண்ணப்பம் செய்கிறார்கள். இதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நெருங்கிய உறவினர் அதாவது கணவன் மனைவி, தகப்பனார், பிள்ளையாகவோ இருந்தால் சாதாரணமாகக் கொடுப்பதில்லை.

Houses for the employees of the Nellikuppam Sugar-Factory

*800 *Q.*—Sri S. THANGAVELU : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் வேலை செய்துவரும் ஆலைத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

(இ) இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) The workers of the East India Distilleries and Sugar Factory, Nellikuppam, organized a Co-operative Housing Society for the construction of houses for the workers under the Subsidised Industrial Housing Scheme. The Society formulated a project for the construction of houses at a cost of Rs. 6,300 each against the ceiling limit of Rs. 3,850 fixed by the Government of India. The project was dropped eventually, as it was not possible for the Society to construct houses within the ceiling cost, and for the workers to meet the extra cost.

Mr. SPEAKER : இந்த நேரத்தில் ஒன்று சொல்ல வேண்டும். கேள்வி கேட்க விரும்பினால் இடத்தில் எழுந்து நின்று. கேள்வி போடுகிறேன் என்று சொல்ல வேண்டும். சும்மா இடத்தில் உட்கார்ந்து இருந்தாலோ அல்லது சபையை விட்டு வெளியே சென்றுவிட்டாலோ அவர் கேள்வி போட விரும்பவில்லை என்றுதான் எண்ணிக்கொள்ளக் கூடும்.

Sri S. THANGAVELU : அமைச்சர் அவர்கள் தயவு செய்து மேற்கூறிய பதிலைத் தமிழில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒரு கோவாப்ரேடிவ் ஹவுசிங் சொசைடியை அமைத்து முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் போட்ட திட்டப்படி வீடு ஒன்றுக்கு 6,300 ரூபாய் செலவு ஆயிற்று. ஆனால் இந்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டு இருப்பது வீடு ஒன்றுக்கு 3,850 ரூபாய்தான். ஆகவே இதற்கு மேல் பணம் வேண்டி இருந்த காரணத்தினால் அவர்கள் அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.

25th April 1960]

Mosquito nuisance in the City

* 801 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI · } Will the Hon. the
SRI A. A. RASHEED : }
Minister for Revenue be pleased to state—

(*a*) the steps taken by the Government to eradicate the mosquito nuisance in the city of Madras;

(*b*) the steps taken by the Government to get rid of the mosquito troubles in the city's Government Hospitals; and

(*c*) the steps taken by the Government to clean the Cooum river and Buckingham Canal portions so as to avoid these becoming sources for mosquito breeding ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) A statement [a] is placed on the table of the House.

(*b*) The premises of the Government hospitals in the City are kept clean and under hygienic conditions. The mosquito nuisance is not peculiar to the hospitals alone but is common to the City as a whole.

(*c*) The question of flushing the Cooum river and Buckingham Canal so as to make them clean and tidal and the connected problems are under consideration of the High Power Committee constitued by the Government and the Committee's Report is awaited.

SRI S. PAKKIRISAMI PILLAI : கவர்ண்மெண்டு ஜெனரல் ஆஸ்பத்திரி, அதற்குப் பக்கத்தில் இருக்கும்படியான சென்ட்ரல் ஜெயில் இந்த இரண்டு இடங்களிலும் கொசு உபத்திரவம் பொறுக்க முடியாமல் இப்போதும் இருந்துகொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் பக்கத்திலுள்ள பக்கிங்ஹாம் கெனால்தான். அது இருப்பதன் விளைவாகத்தான் அங்கே கொசுக்கள் உற்பத்தியாகி பெருகுகின்றன. ஆகவே, நிவர்த்திக்கும் திட்டத்தைப் பற்றிப் பழைய மாதிரி சொல்லி சொல்லிப் பயன் இல்லை. அதைக் கூடிய சீக்கிரமாக முடிவு செய்து கொசு உபத்திரவத்தில் இருந்து நிவாரணம் கொடுக்கும்படியான நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த உபத்திரவம் ஒரு மாதத்திற்கு முன்பு இருந்ததைவிட இப்போது மிகக் குறைந்திருக்கிறது. கானாலை சுத்தப்படுத்துவது என்றால் சமுத்திர ஜலத்தை உள்ளே செலுத்தித்தான் செய்ய வேண்டும். சமுத்திரம் பூமியை விடக் கீழே இருக்கிறது. ஆகவே உயர்ந்த அலைகள் வருகிற காலத்தில் தான் அதைச் செய்ய முடியும். இது கொஞ்சம் சிக்கலானது. கமிட்டி அறிக்கையையும் பார்த்துக்கொண்டு செய்யப்படும்.

SRI K. VINAYAKAM : Is it not a fact that in spite of these preventive measures, the Madras mosquitoes have defied the process and have become in fact larger in number as well as in size and, therefore, a greater nuisance in the City ? They are said to be breeding in the extended areas like Kodambakkam and Saidapet where about 9,000 cess-pool pits that are supposed to be cleaned daily are not properly cleaned. Will the Government, therefore, take steps to get the underground drainage system extended to these areas and thus put an end to this mosquito nuisance ?

---

a Printed as Appendix I on page 874 infra.

[25th April 1960

THE HON. SRI M. A. MANICKAVELU: It is not only the Madras mosquitoes that defy, but other mosquitoes also. So, we are finding out new ways of combating this nuisance. We are using new disinfectants that will kill them. So, we go on altering the old and the new methods. About the cess-pool and other things referred to by the hon. Member, special staff has been arranged to look after this work. Mechanical sprayers also have been sanctioned and I think we will be able to bring down the nuisance considerably.

SRI K. ANBAZHAGAN: இப்போது இந்தக் கொசுத் தொல்லையை ஒழிப்பதற்கு மிகப் பெரிய இயந்திரங்கள் இரண்டு வாங்க வேண்டும் என்று நகரசபையார் அரசாங்கத்திடம் உதவி கோரி விண்ணப்பித்துக் கொண்டு இருக்கிறார்களா ? அப்படியென்றால் அந்தத் தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த மாதிரி கேட்டிருக்கலாம். நான் கொடுத்த குறிப்பிலேயே மெக்கானிகல் ஸ்ப்ரேயர் கொடுப்பது பற்றிச் சொன்னேன். இது பற்றி அவர்கள் எழுதியிருந்தால் அதன் மேல் என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI P. G. MANICKAM: சட்டசபை ஹாஸ்டலில் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. மேலும் வருகிற விருந்தாளிகள் தனிப்பட்ட ஹோட்டல்களில் தங்கிக்கொண்டு படுகிற தொல்லை கணக்கு வழக்கு இல்லை. ஆகவே எங்கெங்கு அதிகமாகக் கொசுக்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி உடனடியாகச் சர்வே செய்து அவ்விடங்களிலாவது அதை ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கையை சர்க்கார் மேற்கொள்ளுவார்களா ? அல்லது கார்ப்பரேஷன் மூலமாகவாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த வேலை தான் செய்யப்பட்டு வருகிறது. ஒரு மாதத்திற்கு முன்பு நானும் கூடக் கொசு வலை கட்டிக்கொண்டுதான் தூங்கினேன். இப்போது கொசு வலையை எடுத்து விட்டேன்.

SRI N. K. PALANISAMI: சென்னை நகரத்தில் கொசுவைப் போக்குவதற்கு சர்க்காரும் கார்ப்பரேஷனும் சேர்ந்து ஒரு திட்டம் தயாரிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் விவரம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்தக் கமிட்டி ரிபோர்ட் இன்னும் வரவில்லை. அது வந்தபின்தான் முடிவு செய்யப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN: சுகாதாரத் தொழிலாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால்தான் இந்த உபத்திரவம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு அதிகப்படியான தொழிலாளர்களை நியமித்துக்கொள்ள அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று கார்ப்பரேஷனிடமிருந்து சர்க்காருக்குக் கடிதம் வந்திருக்கிறதா ? ஆகவே அதை உடனடியாக அங்கீகாரம் செய்து அதிகப்படியான தொழிலாளர்களை நியமிக்க அனுமதிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அந்த மாதிரித்தான் அதிகப்படியாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கொசு ஒழிக்க 100 தொழிலாளர்களும், சுத்தம் செய்ய 50 தொழிலாளர்களும் நியமிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

SRI K. ANBAZHAGAN: சென்னை மகப்பேறு நிலையம், ஜெயில் ஆகிய இரண்டு இடத்தில் இருந்தும் சாக்கடை நீர் பக்கிங்ஹாம் கெனலில் கலந்துவிடப்படுவதனால் தான் கொசுக்கள் வளருகின்றன என்ற காரணத்தினால் அதனை நிறுத்துவதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்ய இருக்கிறது ?

25th April 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : கமிட்டி ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவர்கள் ரிப்போர்ட் செய்தால் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI M. K. SOMASUNDARAM : மஸ்கிடோ எராடிகேஷன் ஸ்கீம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? அது ஆரம்பிக்கப்பட்ட பிறகு எவ்வளவு தூரம் வளர்ந்து இருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்வி சென்னையை மட்டும் பொறுத்தது. மஸ்கிடோ எராடிகேஷன் ஸ்கீம் என்பது ராஜ்யம் பூராவும் மலேரியா ஜுர ஒழிப்பு சம்பந்தமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் கண்ட்ரோல் ஸ்கீமாக இருந்தது. இப்போது எராடிகேஷன் ஸ்கீமாக இருக்கிறது. அது பெரிய அளவில் மாகாணம் பூராவும் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : சென்னை நகரசபை சுத்தி செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தப் போவதாகக் கூறப்படுகிறது. அப்படியே இதர நகரங்களின் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தந்த நகரசபைகளிலிருந்து கோரிக்கை வந்தால் அவை அவ்வப்போது யோசிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : இந்த மேஜையின்மீது வைக்கப் பட்டிருக்கிற அறிக்கையைப் பார்த்தால் இந்த வேலைகள் சரிவர நடைபெற்றுவந்தால் இங்கே கொசுக்கள் இருக்க நியாயம் இல்லை. ஆனால் கொசுக்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் அந்த வேலைகள் சரிவர நடைபெறவில்லை என்று கருதப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த வேலைகளைச் சரிவர நடைபெறச் செய்யத்தான் கொஞ்சம் அதிகமாக ஆட்களை நியமிக்க உத்தேசித்திருக்கிறது. அதிகமான திட்டம் போடப்பட்டிருக்கிறது. இனிமேல் தான் முடிவு தெரியும்.

SRI S. RANGANATHA MUDALIYAR : May we have the information whether the Entomologist has submitted his report, and if so will the Government place copies of the report on the table of the House ?

THE HON. SRI M. A. MANICKAVELU : It does not arise out of this question. This is only about the nuisance of mosquito. The other mosquito which causes fever is a different thing. Under the Malaria eradication scheme they only concentrate on such mosquitoes that cause fever.

SRI V. K. KOTHANDARAMAN : நான் கேட்டது, இந்த ட்ரெயினேஜை சுத்தம் செய்வதற்கு மீனியல்ஸை அதிகப்படுத்த வேண்டுமென்று. ஆனால் இந்த ஸ்டேட்மென்டில் சொல்லப்பட்டிருப்பது அது பற்றியல்ல. ஆகவே, அதை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுக்கவில்லை இதுவரையிலும். ஆகவே அதற்கு வேண்டியது செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மஸ்கிட்டோவை ஒழிப்பதற்கு 100 தொழிலாளர்களும், 50 தொழிலாளர்கள் ட்ரெயினேஜை சுத்தப்படுத்துவதற்காகவுந்தான். உத்திரவு ஒன்றும் வேண்டியதில்லை. பணம்தான் ஜாஸ்தியாக வேண்டும். அது எந்த நிலையில் இருக்கிறது என்று இப்போது சொல்ல முடியாது.

SRI S. RANGANATHA MUDALIYAR : Sir, my question refers to item 6 in the statement placed on the table of the House. Has that report been received by the Government, and if so, can we have copies of that report ?

[25th April 1960

The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, at this stage I cannot state categorically anything. I do not know whether the report has come. I think if the hon. Member renews his question after the report is received by the Government, we will look into it.

* Sri K. B. S. MANI : சென்னையிலிருக்கிற கொசுக்களுக்கு ஏதாவது விசேஷ பவர் இருக்கிறதா ? அதனால் எந்தெந்த வியாதிகள் வருமென்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இங்கு ஜனத்தொகை அதிகம். ஆகவே கொசுக்களுக்கெல்லாம் ஓவர் பீடிங் அதிகமாக இருக்கும்.

Levy of Income-tax on Co-operatives

* 802 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not representing to the Central Government to drop the proposed levy of income-tax on co-operatives ?

The Hon. Sri R. VENKATARAMAN : The assumption contained in the question is not correct.

Sri N. K. PALANISAMI : கூட்டுறவு சங்கங்களுக்கு இன்கம் டாக்ஸ் போடுவதால் கூட்டுறவு முறையே பாதிக்கப்படுமாகையால் சர்க்கார் இதைப் போடக் கூடாதென்று மத்திய சர்க்காரை வற்புறுத்தினார்களா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN: அந்த மாதிரி எழுதி அனுப்பியிருக்கிறது.

Mr. SPEAKER: Questions Nos. 803 and 805 are postponed as the Hon. Minister is not in the city and Question No. 804 is postponed as the Hon. Minister wants postponement of the question to a later date.

Supply of electricity to villages

* 806 *Q.*—Sri T. K. SUBBIAH : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தென் சென்னை எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன்காரர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் எத்தனை கிராமங்களில் மின்சாரம் விஸ்தரித்தார்கள் ?

(ஆ) உடையார்பாளையம் தாலுக்காவில் எந்தெந்தக் கிராமங்கள் ?

(இ) அவர்கள் திட்டமிட்ட கிராமங்கள் எத்தனை ?

(ஈ) திட்டமிட்டப்படி நிறைவேற்றாத காரணம் என்ன ?

(உ) இனிமேலாவது நிறைவேற்றப்படுமா ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) 258 villages.

(*b*) Ariyalur.
Kilapalur.
Kokkudi.
Keelaiyur.

(*c*) The particulars of the programme for the past years are not available.

25th April 1960]

(*d*) & (*e*) Our information is that the South Madras Electric Supply Corporation, Limited, has chalked out a programme to electrify 115 villages in the six taluks in Tiruchirappalli district during the next three years.

SRI T. K. SUBBIAH: உடையார்பாளையம் தாலுகா மிகவும் பின்தங்கிய பகுதியாக இருந்தும் குறிப்பாக இரண்டு பஞ்சாயத்தில் தான் இந்த விஸ்தரிப்பு நடந்திருக்கிறது பத்து ஆண்டுகளில். அதிக கிராமங்களுக்கு அது விஸ்தரிக்கப்படாமல் இருப்பதை சர்க்கார் வற்புறுத்தி விரைவில் பல கிராமங்களுக்கும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI V. RAMAIAH: உடையார்பாளையம் தாலுகாவில், நான் கொடுத்திருக்கிற விவரப்படி 4 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். அந்த தாலுக்கா மிகவும் பிற்போக்கான தாலுக்கா. அதற்கு ஒரு விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்பது என் ஆசை. அந்த தாலுகாவில் லைசென்சுதாரிடமிருந்து அவர்கள் கையிலிருந்து அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாமா என்ற பரிசீலனை இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் கைக்கு வந்தால் இன்னும் துரிதமாக இன்னும் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்துவிடலாம். குறிப்பாக அந்தத் தாலுக்கா தலைநகரத்திற்கே இன்னும் மின்சாரம் இல்லை. அது கண்டு உண்மையிலேயே எனக்கு மனக்கஷ்டந்தான் ஏற்படுகிறது. அந்தக் குறை நீண்ட காலத்திற்கு இருக்கக் கூடாதென்று என் அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். கூடிய விரைவில் மின்சாரம் அத்தாலுக்கா தலைநகரத்திற்கு வந்துவிடும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI K. R. VISWANATHAN: மின்சாரக் கம்பெனியிடமிருந்து மின்சாரம் பரவாத எல்லைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சி நடந்துகொண்டிருப்பதாக அறிகிறேன். அதற்காக சட்ட அபிப்பிராயம் கேட்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. அதன் முடிவு என்ன? அப்படிப் பரவாத இடங்களில் இந்த ஆண்டு எந்தெந்த இடங்களில் சர்க்கார் சார்பில் மின்சாரம் கொடுப்பதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH: பொதுவாக லைசென்சுதார் எங்கெங்கு விஸ்தரிப்பு செய்வதற்கு கஷ்டமிருக்கிறதோ அந்தப் பகுதிகளை அரசாங்கத்தினரிடம் கொடுத்துவிட்டால், நிபந்தனை இல்லாமல் கொடுத்துவிட்டால், அந்தப் பகுதிகளுக்கு அரசாங்கம் விஸ்தரிப்பு செய்வதில் கஷ்டம் இராது. ஆனால் சில இடங்களில் லைசென்சுதார் கொடுக்க மறுத்தாலும் கூட அங்குள்ள மக்களைக் குறிப்பாக விவசாயிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு மிகவும் இடையூறாக இருப்பதால் அந்தப் பகுதிகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாமா என்று சட்டப் பிரச்னையிலிருந்து ஒரு முடிவிற்கு அரசாங்கம் வந்திருக்கிறது. விரைவில் அந்த முடிவு விவசாயிகளுக்கு நன்மை தரும் முறையில் அமுலுக்குக் கொண்டுவர முடியும் என்று நம்புகிறேன்.

SRI S. THANGAVELU: மின்சார வெட்டு வருவதற்கு முன்னால் பணம் கட்டிய விவசாயிகளுக்கு பம்ப் செட்களுக்கு மின்சார சப்ளை கொடுக்க வேண்டுமென்று உத்திரவு இட்டிருந்தும் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன?

MR. SPEAKER: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மந்திரிக்கு ஆட்சேபணை இல்லை என்றால் பதில் சொல்லலாம்.

THE HON. SRI V. RAMAIAH: தனிக் கேள்வி இதற்கு வேண்டுமென்றிருந்தாலும், கனம் அங்கத்தினர் அவர்கள் முதன்முதலாகப் போட்டிருக்கக்கூடிய காரணத்தினால் என்னால் முடிந்த வரையில் பதில் சொல்லுகிறேன். மின்சார வெட்டு இருப்பதாகவும், அதனால் மின்சார

[25th April 1960

சப்ளை கொடுக்கவில்லை என்றும், ஒரு தப்பான எண்ணம் அங்கத்தினர் அவர்களுக்கு இருக்கிறது. சபைக்கு நன்கு தெரியும், வெட்டு இப்பொது கிடையாது என்பது. அப்படி இல்லை என்று நான் பல கேள்விகளுக்கு இந்தச் சபையில் பல தடவை பல கேள்விகளுக்கு பதில் சொல்லியிருக்கிறேன். அங்கத்தினர் அவர்கள் சொன்ன இந்தக் கஷ்டத்தைப் பற்றி எனக்குத் தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பினால் அதைப் பரிசீலனை செய்து அவர்களது கஷ்டத்தை நீக்க எல்லா முயற்சிகளும் செய்கிறேன்.

SRI P. G. MANICKAM : தாலுகா ஆபீஸ்களில் மின்சார விளக்குகள் இல்லாதது பற்றி சர்க்கார் கவனித்து அதில் வேண்டிய கவனம் செலுத்தப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அனேகமாக எல்லாத் தாலுகாக்களிலும் இந்த மாதிரி நிலை இருப்பதால் இதற்கு என்று ஒரு ஸ்பெஷல் உத்திரவு போட்டு இதை உடனடியாகக் கவனிப்பதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் சொன்ன பதிலை அங்கத்தினர் அவர்கள் அவர்களுக்குத் தகுந்த முறையில் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். இந்த மாகாணத்தில் ஒரே ஒரு தாலுகா தலைநகரத்தில் மட்டும்தான் மின்சாரம் இல்லை. அவர்களது கோரிக்கை தாலுகா ஆபீஸ்களுக்கு மின்சார விளக்குகள் போடவேண்டும் என்பது. அதற்கு எனது சகாக்கள் ரெவின்யூ அமைச்சர் அவர்களும் மராமத்து இலாகா அமைச்சர் அவர்களும் போதுமான பணம் கொடுத்தால் எனது இலாகா உடனடியாக மின்சாரம் போட்டுக் கொடுத்துவிடும்.

SRI S. RAMALINGA PADAYACHI : உடையார்பாளையம் தாலுகா மட்டுமல்ல, பெரம்பலூர் தாலுகா தலைநகரத்திற்கு மட்டும்தான் மின்சாரம் இருக்கிறது. மற்றவிடங்களுக்கு இல்லை. அங்கு இறைக்கும் கேணிகள் அதிகமிருக்கிறது. ஆகவே, மின்சாரம் அங்கு கொடுப்பது பற்றி சவுத் இந்தியா கார்ப்பரேஷனிடமிருந்து அரசாங்கம் எடுத்து மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : பெரம்பலூர் தாலுகாவும் மிகவும் பிற்பட்ட தாலுகாதான். அங்கு வினியோகம் லைசென்சுதார்களிடம் இருப்பதால் அங்கத்தினர் விரும்புமளவு அந்த வேகத்தில் மின்சாரத்தை அங்கு பரப்ப முடியவில்லை. இருந்தாலும் அங்குள்ள லைசென்சுதார் ஒத்துழைப்புக் கொடுப்பதால், அவர்களுக்கு அரசாங்கம் போதுமான அளவு ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுத்து எங்கெங்கு விஸ்தரிப்புத் தேவையோ அதை விரைவில் செய்ய வேண்டுமென்பது என் ஆசை. இந்தச் சபையில் 25 லட்ச ரூபாய் கடன், இது போன்ற லைசென்சுதார்களுக்கு கொடுக்க முன் வந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். அதைப் பயன்படுத்தி அதிகப்படியான கிராமங்களுக்கு விஸ்தரிப்பு செய்யப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Even if the schemes are sanctioned, in certain areas it takes some months ordinarily and even a year to put the work into execution. Is it because of the fact that lot of red-tapism is there and if so will the Government consider the desirability of putting an end to the red-tapism and see that the works are started immediately after the schemes are sanctioned ?

THE HON. SRI V. RAMAIAH: The hon. the Leader of the Opposition well knows that it is not purely red-tapism that stands in the way. If it is only red-tapism, I won't untie it but cut it out. In preparing the schemes and sanctioning them, we do them without any hitch. But unfortunately when the real execution comes in, materials are required. I cannot just take electrical energy and dip it in the village. Electrical energy will have to be taken through conductors, through poles, etc., and so many other materials are required and many of them will have to be imported into this country.

25th April 1960]

Sri J. MATHA GOWDER : ஸார், மின்சார வெட்டு இப்போது எங்குமே கிடையாது என்று அமைச்சர் அவர்கள் ஊர்ஜிதமாக தெரிவித்தார்கள். ஆனால், இந்த மாதம் 21-ம் தேதி நீலகிரியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக உத்தரவு போடப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தந்தி வந்தது. அதை அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அப்படியானால் இம் மாதிரியான மின்சார வெட்டு ஏற்படுவதற்குக் காரணம் அங்குள்ள உத்தியோகஸ்தர்கள்தானா ? அப்படியென்றால் சர்க்கார் இதில் என்ன செய்யப்போகிறார்கள் ? 9 a.m.

The Hon. Sri V. RAMAIAH : மின்சார வெட்டு இப்போது இல்லை என்பதை இப்போதும் நான் மீண்டும் ஊர்ஜிதமாகச் சொல்கிறேன், ஏதோ மின்சார வெட்டு ஏற்பட்டிருப்பதாக கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தந்தி வந்திருக்கலாம். சில இடங்களில் மின்சார வினியோகத்தில் இருக்கின்ற கஷ்டங்களைப் பற்றி நான் இதற்கு முன்னால் சொல்லியிருக்கிறேன். அதாவது சில இடங்களில் இரண்டு விதமான உத்தரவு மாறி மாறிப் போனதின் காரணமாக சில இடங்களில் சிக்கல்கள் ஏற்பட்டன. குறிப்பாகக் கனம் அங்கத்தினர் அவர்கள் வரக்கூடிய நீலகிரி தொகுதியில் பச்சைத் தேயிலைக்கு எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக தனியாக வேண்டிய உத்தரவுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன.

Sri K. S. ARDHANAREESWARA GOUNDER : ஸார், கம்பெனிகளை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கக் கூடிய நேரத்தில் மேற்கொண்டும் கம்பெனிகளுக்குக் கடன் கொடுத்துக்கொண்டு போவதை விட கம்பெனியார் விஸ்தரிக்க வேண்டிய இடங்களில் எல்லாம் சர்க்காரே விஸ்தரிக்கும் ஏற்பாட்டை ஏன் செய்யக் கூடாது என்பதைக் கேட்க விரும்புகிறேன்?

The Hon. Sri V. RAMAIAH : இந்தக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இருந்தாலும் பதில் சொல்லுகிறேன். இப்போது எங்கெல்லாம் மின்சார போர்டின் கையில் இருக்கிறதோ, அந்த இடங்களில் எல்லாம் மின்சார விஸ்தரிப்பு நடந்துகொண்டிருக்கிறது. அதே சமயத்தில் இப்போது கம்பெனியார் அல்லது லைசென்ஸார் கையில் இருக்கும் இடங்களில் விஸ்தரிப்புச் செய்யப்படாமல் இருக்கிறது. இதைப் பார்க்கின்ற மக்களுக்கு மன வருத்தம் ஏற்படுகிறது. ஆகவே, லைசென்ஸார் இடங்களை அரசாங்கம் எடுப்பதற்கு முன்னால், அரசாங்கம் ஏதேனும் செய்ய முடியுமா அதாவது இடைக்கால நிவாரணம் என்கின்ற முறையில் ஏதாவது வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற முறையில் மின்சார விஸ்தரிப்புக்காக 25 லட்சம் ரூபாய் லைசென்ஸார்களுக்குக் கொடுத்திருக்கிறோம். பின்னால் சர்க்கார் இதை எடுத்துக்கொள்ளும்போது இதனால் எந்த விதமான நஷ்டமோ, பாதகமோ ஏற்படாது என்பதுதான் என்னுடைய கருத்து.

Sri K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, 1960-61-ல் உடையார்பாளையம் தாலுகாவில் ஆண்டி மடம் என்கிற பகுதியில் சர்க்கார் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது. இவ்விதம் இந்த இடத்தில் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு அங்குள்ள கம்பெனியார் அனுமதி கொடுத்துவிட்டார்களா, அப்படியென்றால் அதே முறையில் ஜெயங்கொண்டான் தாலுகா தலைநகருக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு, மற்ற இரு அமைச்சர்களின் உதவியோடு இந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri V. RAMAIAH : ஜெயங்கொண்டபுரம் தாலுகா தலைநகரத்திற்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு மற்ற அமைச்சர்களின் உதவி தேவையில்லை. தாலுகா தலைநகரிலுள்ள காரியாலயங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்குத்தான் மற்ற அமைச்சர்களின் உதவி தேவை என்று சொன்னேன். தாலுகா தலைநகருக்கு விஸ்தரிப்பதற்கு

என்றாலேயே நடவடிக்கை எடுக்க முடியும். அதிலும் குறிப்பாக இந்த வருடத்திற்குள்ளாக எல்லா தாலுகா தலைநகரங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு அதன்படி வேலை செய்து முன்னேறியும் இருக்கிறோம். அதில் கடைசியாக இருப்பதுதான் உடையார்பாளையம் தாலுகா. இதில் உடையார்பாளையம் பகுதி பூராவையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளலாமா என்கின்ற பிரச்னை இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இதன் பேரில் ஒரு முடிவும் செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பற்றித் தனியாகக் கேள்வி போடுவதாக இருந்தால் மேல் உள்ள விவரங்கள் எல்லாம் சொல்லுகிறேன்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : ஸார், சாதாரணமாக மின்சாரம் செல்லும் வழியில் இருக்கின்ற அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாகச் சில இடங்களில், பஞ்சாயத்து போர்டு இருக்கக் கூடிய இடங்களில் அங்கு இருக்கக் கூடிய ஜாதி இந்துக்கள் வசதிக்குத் தக்க மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் பக்கத்தில் இருக்கக் கூடிய அரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கிடைப்பதில்லை. ஆகவே இப்படிப்பட்ட அரிஜன காலனிகளை எல்லாம் கணக்கெடுத்து, அவைகளுக்கு எல்லாம் மின்சார வசதி கிடைப்பதற்கு ஏதாவது அரசாங்கம் நல்ல முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri V. RAMAIAH : இந்தப் பிரச்னையைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பிரச்னையைக்கூடிய மட்டும் உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக நான் இந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்ட உடனேயே அரிஜன இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் எந்தக் கிராமங்களுக்கு எல்லாம் மின்சார வசதி விஸ்தரிப்பு நடைபெற்றிருக்கிறதோ, அந்தக் கிராமத்தின் சுற்றுப்புறத்திலுள்ள அரிஜன காலனிகளுக்கு மின்சாரம் போகாமல் இருந்தால் அவைகளுக்கு எல்லாம் மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதாக அரிஜன நல மானியத்திலிருந்து கொஞ்சம் உதவிகொடுத்தால், அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரம் கொடுத்துவிடலாம் என்று தீர்மானம் செய்தோம். இதற்காக அரிஜன மானியத்திலிருந்து 14 அல்லது 15 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். இதை உடனடியாகத் தந்திருந்தால் இப்போது இந்தப் பிரச்னை வந்திருக்காது. ஆனால், அரிஜன நல இலாகாவினர் கொஞ்சம் தீவிர கண்ணோட்டத்துடன் பார்க்காமல், இதைப் படிப்படியாகக் கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாய் தந்து ஐந்து வருடத்திற்குள் முடிக்கலாம் என்று சொன்னார்கள். அதன்படி இப்போது எல்லா வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதோடு எந்த இடத்திற்கு மின்சாரம் கொண்டுபோவதாக இருந்தாலும், சரி, பக்கத்தில் அரிஜனங்களின் காலனிகள் இருந்தால், அந்த ஸ்கீமில் அரிஜன காலனியையும் சேர்த்துக் கணக்கெடுத்தால்தான் விஸ்தரிப்பு நடக்கும், இல்லாவிட்டால் ஸ்கீம்கள் இருக்காது என்ற முறையில் கூட இருந்து வருகிறது. அதல்லாமல் அரிஜன காலனிகள் உட்படுத்தாமல் ஸ்கீம்கள் இருக்க வேண்டும் என்றால் அதற்கு கலெக்டர் அவர்களிடத்தில் கேட்டு, ஸ்கீம் தாமதம்ஆகக் கூடாத நிலையில் அனுமதி கொடுத்து வருகிறோம். ஆனால் எங்கெல்லாம் அரிஜன காலனிகளுக்கு வசதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் வேகமாக மின்சார வசதி கொடுத்து வருகிறோம்.

Sales tax on bread and biscuits

* 807 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to remove the disparity in the rates of sales tax levied for bread and biscuits ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

25th April 1960]

Co-operative farm

* 808 SRI S. THANGAVELU : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) கடலூர் தாலுகாவில் திருவாமூர் கிராம ஹரிஜன விவசாயி களைக்கொண்டு கூட்டுப் பண்ணை நடத்தத் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் அதற்கான நடவடிக்கைகள் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

(இ) சர்க்கார் மேற்படிக் கூட்டுப் பண்ணைக்கு எடுக்கப்போகும் நிலத் தின் விஸ்தீர்ணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) & (ஆ) Proposals have been received from the Registrar of Co-operative Societies. They are under the consideration of the Government.

(இ) 107.87 acres.

SRI S. THANGAVELU : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது எடுக்கப்போகும் இடங்கள் நூறு ஏக்கர்களுக்கு மேலாக இருப்ப தால், இந்த நிலங்களை சர்க்காரிலிருந்து டிராக்டர் மூலமாக மராமத்து செய்யப்படுமா அல்லது ஏழை விவசாயிகளை வைத்து மராமத்து செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கூட்டுறவு விவசாயம் அமைக்கும் போது அரசாங்கத்தின் மூலமாக எல்லா உதவிகளும் செய்து கொடுப்ப தற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் அரிஜன மக்கள் கூட்டுறவுப் பண்ணைக்கு அரசாங்கம் என்னென்ன நன்மைகள் உதவிகள் செய்து கொடுக்கப்போகிறது என்பதை நான் வாசிக்கப்போகும் விவரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

1. ஷேர் காப்பிடல்—(மூலதனத்திற்காக) வகையில் 10 ரூபாய் வீதம் 25 பேர்களுக்குக் கொடுக்கலாம் என்பது.

2. விதை வாங்குவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வீதம் 100 ஏக்கர்களுக்கு வரை கொடுப்பது.

3. ஒரு ஏக்கருக்கு ஐந்து ரூபாய் வீதம் உரம் வாங்குவதற்கு 100 ஏக்கர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

4. மாடுகள் வாங்குவதற்கு ஒரு ஜோடிக்கு 400 ரூபாய் வீதம் 25 ஜோடிகளுக்குக் கொடுப்பது. இதில் பாதி கடனாகவும், பாதி இனா மாகவும் கொடுக்கப்படும்.

5. நிலங்களைச் செப்பனிடுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் 100 ஏக்கர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

6. பம்பு செட்டு வைத்துக்கொள்ளுவதற்கும் கிணறு வெட்டுவதற் கும் சேர்ந்து கிணறு ஒன்றுக்கு 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இதில் பாதி கடனாகவும், பாதி இனாமாகவும் கொடுக்கிறார்கள்.

7. விவசாய சாமான்கள், கலப்பைகள் முதலியவைகள் வாங்கு வதற்கு நபர் ஒன்றுக்கு 50 ரூபாய் கடனாகக் கொடுக்கிறார்கள்.

8. அங்கிருந்து வேலை செய்வதற்காக நிதி உதவியாக நபர் ஒன் றுக்கு 180 ரூபாய் வீதம் ஆறு மாதத்திற்குக் கொடுக்கிறார்கள். இதில் பாதி இனாமாகவும், பாதி கடனாகவும் கொடுக்கிறார்கள்.

9. வீடுகள் கட்டிக்கொள்வதற்காக வீடு ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் கொடுக்கிறார்கள்.

[25th April 1960

10. மாட்டுக் கொட்டகை (காட்டில் ஷெட்) கட்டுவதற்காக ஷெட் ஒன்றுக்கு 25 ரூபாய் கொடுக்கிறுர்கள்.

11. கூட்டுப் பண்ணை நடத்தும்போது, அங்கு ஒரு மேனஜர் நியமிக்க வேண்டியிருக்கும். அவருக்கு சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம், மூன்று வருடங்களுக்குக் கொடுக்கிறுர்கள்.

இவ்விதமான பல உதவிகளைச் சர்க்கார் செய்து கொடுப்பார்கள்.

SRI R. KRISHNASAMI NAIDU: கூட்டுறவு நிலக் குடியேற்றப் பண்ணை கள் அமைப்பதற்குரிய நல்ல நிலங்கள், நூற்றுக்கணக்கான ஏக்கர்கள், தனியார் வசம் அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்றன. அப்படிப் பட்ட இடங்களில் ஹரிஜனங்களைக் குடியேற்றி கூட்டுப் பண்ணைகளையும் அமைக்கலாம். எனவே அந்த நிலங்களை ஹரிஜனங்களுக்காக விலைக்கு வாங்குவதற்காக அதற்கு வேண்டிய தொகையை ஹரிஜனங்களுக்கு நீண்ட காலக் கடனுகவோ, மானியமாகவோ ஒரு பகுதியையோ கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN: நான் சிறிது நேரத்திற்கு முன்பு சொன்ன திட்டம்; ஏற்கனவே சர்க்கார் நிலங்கள் வீணுகக் கிடந்தால் அவைகளில் நல்ல முறையில் கூட்டுறவுப் பண்ணைகள் அமைப்பதுதான். நிலங்களைக் கனம் அங்கத்தினர் கூறியது போல ஹரிஜனங்களுக்காகக் கிர யத்திற்கு வாங்கும் திட்டம் ஹரிஜன இலாகாவில் இல்லை.

SRIMATHI A. S. PONNAMMAL: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் குறிப்பிட்ட 100 ஏக்கரிலும் 8 கிணறுகள் வெட்ட ,கிணறு ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம் பணம் கொடுக்கப்படுவதாக அவர் சொன் ஞர். அந்த 2,000 ரூபாயும் மானியமாகக் கொடுக்கப்படுகிறதா, அல்லது கடனுகக் கொடுக்கப்படுகிறதா? அதே மாதிரி வீடுகள் கட்டுவதற்கும் பணம் கொடுக்கப்படுவதாக கனம் அமைச்சர் சொன்ஞர். அந்தப் பண மும் மானியமாகக் கொடுக்கப்படுகிறதா, அல்லது கடனுகக் கொடுக்கப் படுகிறதா, மானியமானுல், எவ்வளவு பணம் மானியமாகக் கொடுக்கப் படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: கிணறுகள் வெட்டுவதற்குக் கொடுக்கப் படும் 2,000 ரூபாயில் பாதித் தொகை கடனுகவும், பாதித் தொகை இனுமாகவும் கொடுக்கப்படுகிறது. அதே மாதிரி வீடுகள் கட்டுவதற்கு கடனுகவும், 50 ரூபாய் இனுமாகவும் கொடுக்கப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: இப்போது ஃபார்ம் ஒன்றுக்கு சர்க்கார் செலவிட நினைத்திருக்கும் தொகையை அந்த ஃபார்மின் உற்பத்தி யின் மூலமாக எத்தனை வருடங்களில் திரும்பப் பெற முடியும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN: அந்தத் தகவல் என்னிடம் இல்லை. அதற்கு அனேகமாக 20 வருஷங்கள் ஆகும் என்று நான் நினைக்கி கிறேன்.

SRI T. T. DANIEL: Sir, may I know whether this is a Union sponsored scheme or State sponsored scheme? May I also know the number of such co-operative farms which have already been organized in the State?

THE HON. SRI P. KAKKAN: இது மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்து நடத்தும் திட்டம். கனம் அங்கத்தினர் போட்டுள்ள இன்னெரு கேள்விக்கான விவரம் என்னிடம் இப்போது இல்லை. அந்த விவரத்திற்குத் தனிக் கேள்வி போட்டால், எத்தனை காலனிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்ற இந்த விவரத்தைச் சொல்வேன்.

25th April 1960]

Drinking water-supply scheme for Cuddalore

* 809 *Q.*—SRI S. THANGAVELU : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) கடலூர் தாலுகாவில், காடாம்புலியூர், நடுக்குப்பம், மருங்கூர் இந்தக் கிராமங்களுக்கு குடி தண்ணீர் திட்டம் ஒன்று சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் எத்தனை கிணறுகள் முடிவாகியிருக்கிறது ?

(இ) அதற்கான ஆன செலவுகள் எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) (ஆ) & (இ) The Government have no ready information and they have called for a report.

Sir, since this answer has been furnished, I have the following information to give :—

காடாம்புலியூரைப் பொறுத்த வரையில் அங்கே ஒரு போரிங் கிணறு அமைத்து ஒவர்ஹெட் டாங்க் வைப்பதற்கு 54,000 சில்லரை ரூபாய் ஸாங்ஷன் ஆனது. அதில் சென்ற மாத முடிவு வரையில் 52,000 ரூபாய் செலவாகி அந்த வேலை முடிவாகியிருக்கிறது. நடுக்குப்பத்தில் அந்தத் திட்டத்திற்கு 44,000 ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் சுமார் 10,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. மீதி வேலைகள் இனிமேல் நடக்கும். மருங்கூரில் அந்தத் திட்டத்திற்குள்ள எஸ்டிமேட் 2,000 சில்லரை ரூபாய். அதில் இப்போது கான்ட்ரிப்யூஷன் கொஞ்சம் வரவேண்டியிருக்கிறது. கொஞ்சம் கான்ட்ரிப்யூஷன் வந்திருக்கிறது. அதாவது 3,400 ரூபாய் வந்திருக்கிறது. இன்னும் கொஞ்சம் தொகை வரவேண்டியிருக்கிறது. இப்போது அந்தத் திட்டத்திற்கு 40,000 ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டதால், அதற்கு போர்டார் மூலம் வர வேண்டிய பணத்திற்கு அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். குடி தண்ணீர் வசதிக்கு அங்கே இந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

SRI S. THANGAVELU : இந்த சர்க்கார் இம்மாதிரி ஆயிரக் கணக்காக ரூபாய்கள் செலவழித்து மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்திருந்த போதிலும், ஒரு சிலர், சிந்திரி, முந்திரி என்றெல்லாம் பேசுகிறார்களே. சர்க்கார் இம்மாதிரியான காரியங்களைச் செய்வது அவர்களுக்கெல்லாம் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அப்படி எல்லாம் பேசுகிறார்கள். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால், அப்படிப் பேசுகிறவர்களை கனம் அங்கத்தினர் இம்மாதிரியான வசதிகள் செய்து தரப்பட்டுள்ள இடங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவர்களுக்கு அவைகளைக் காட்டலாம். (சிரிப்பு)

Excise duty on Coffee, Vegetable oil, Kerosine, etc.

* 810 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 31–8–59–ல் நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 103–க்கு அளித்த பதிலை யொட்டி காப்பி தாவர எண்ணெய் மண் எண்ணெய்

போன்றவைகளின் மீது மத்திய எக்ஸைஸ் வரி விதிப்பு குறித்து மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வந்துவிட்டதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The matter is still under the consideration of the Government of India.

SRI S. M. ANNAMALAI : மாநிலத்திலுள்ள விற்பனை வரியை நீக்கிவிட்டு இது போன்ற சுங்க வரிகளைப் போடும் யோசனை மத்திய சர்க்காரின் ஆலோசனையில் இருக்கிறதா ? மத்திய சர்க்கார் அது சம்பந்தமாக மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கோரியதா ? அப்படி யானால், அதற்கு இந்த சர்க்கார் கொடுத்த பதில் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, communications between the Government of India and the Madras Government are confidential.

MR. SPEAKER : Question No. 811 is postponed, as the Hon. Minister is not in town.

SRI N. K. PALANISAMI : Sir, question No. 812 may be postponed for some days.

MR. SPEAKER : The question is on the order paper. The Hon. Minister will answer it. The hon. Member should either withdraw his question, or the Hon. Minister will answer it.

Attack on a fisherman by the Ceylon Police

* 812 *Q.*—SRI N. K. PALANISAMI :
SRI V. K. KOTHANDARAMAN : } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Director of Fisheries, Madras, has received any report from the fishermen from Katcha Theevu, near Rameswaram during March 1960 regarding the attack on a fisherman in Katcha Theevu by advance Ceylon Police parties who came by steam launch;

(*b*) whether the Police had threatened them by shooting in the air;

(*c*) whether any enquiry has been conducted in the matter; and

(*d*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) The Director of Fisheries, who was consulted has reported that he has not received any such report so far and that he has called for a report from the Assistant Director of Fisheries, Sivaganga and it is awaited.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

25th April 1960]

UNSTARRED QUESTIONS

Scales of pay to Graduate teachers in Kanyakumari district and Shencottah taluk

361 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) Whether it is a fact that Graduate teachers recruited to Government service after States Reorganisation and posted in Kanyakumari district and Shencottah taluk are given lesser scale than the Graduate teachers in Madras service; and

(*b*) if so, the reasons for the same ?

A.—(*a*) No, Sir.

(*b*) Does not arise.

Local Libraries

362 Q.—**திரு. என். ஆர். தியாகராசன்:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) லோகல் லைப்ரரி அதாரிட்டி என்ற பெயரால் நமது ராஜ்யத்தில் எத்தனை ஸ்தாபனங்கள் இருக்கின்றன?

(ஆ) அதில் யார் யார் அங்கத்தினர்கள் ?

(இ) எத்தனை கிளை நூலகங்கள் உள்ளன, ஜில்லாவாரியாக ?

(ஈ) அதில் ஒவ்வொன்றிலும் உள்ள புத்தகங்கள் எத்தனை ?

(உ) ஜில்லா வாரியாக வரும் வருமானம் என்ன? செலவென்ன ?

A.—(அ) 12.

(ஆ) to (உ) Statements are placed in the Legislature Library for reference.

363 Q.—**திரு. அ. வேதரத்னம்:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ல் நூல் நிலயங்களுக்கு லைப்ரரி செஸ் மூலம் வருமானம் எவ்வளவு ?

(ஆ) 1957–58-ல் ஆன செலவு எவ்வளவு?

(இ) இம்மாநிலத்தில் மொத்தம் எத்தனை நூல் நிலயங்கள் இருக்கின்றன ?

(ஈ) ஒவ்வொரு ஜில்லாவிலும் எத்தனை நூல் நிலையங்கள் யார் நிர்வாகத்தில் இருக்கின்றன ?

(உ) இந்த நூல் நிலயங்களில் நிர்வாகத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஊ) அப்படியாயின், அதன் விவரம் என்ன ?

A.—(அ) *to* (ஈ) Statements are given below.

(உ) & (ஊ) The attention of the member is invited to Question No. 90 answered on 2nd September 1959.

[25th April 1960

Serial number and name of the Local Library Authority.	Library cess collected during 1957–58.	Income during 1957–58.	Expenditure during 1957–58.
	RS.	RS.	RS.
1 Local Library Authority, Madras City.	5,67,926	5,97,991	2,42,056
2 Local Library Authority, Chingleput.	16,707	57,000	84,475
3 Local Library Authority, North Arcot.	38,388	2,85,170	1,19,492
4 Local Library Authority, South Arcot.	12,014	38,959	76,384
5 Local Library Authority, Thanjavoor.	57,358	97,995	83,062
6 Local Library Authority, Tiruchirappalli.	98,015	1,70,000	96,868
7 Local Library Authority, Madurai ..	2,03,198	3,98,730	3,47,906
8 Local Library Authority, Ramanathapuram.	43,280	84,656	94,085
9 Local Library Authority, Tirunelveli.	52,317	1,52,203	1,75,141
10 Local Library Authority, Salem ..	9,590	73,831	1,41,398
11 Local Library Authority, Coimbatore.	1,14,373	1,67,860	1,84,223
12 Local Library Authority, The Nilgiris.	15,053	51,081	65,738
Total ..	12,28,219	21,77,476	17,10,828

Number of libraries maintained by various organizations.

Serial number and name of the district.	Libraries maintained by the Local Library Authorities.			Panchayat Libraries.	Co-operative Societies.	Grama Sanghams.
	District Central Library.	Branch Libraries.	Delivery Stations.			
1 Madras City	1	73	..	..	2	..
2 Chingleput	1	21	60	33	4	3
3 North Arcot	1	16	12	294	3	37
4 South Arcot	1	17	5	92	3	..
5 Tanjore	1	15	56	105	3	13
6 Tiruchirappalli	1	23	4	16	..	8
7 Madurai	1	43	132	19	..	3
8 Ramanathapuram ..	1	24	46	45	..	7
9 Tirunelveli	1	39	30	50	3	5
10 Salem	1	30	27	26	7	12
11 Coimbatore	1	74	195	39	..	..
12 The Nilgiris	1	11	19	9	3	20
Total ..	12	381	586	728	28	108

13 Kanyakumari .. .. There is a Distributing Unit under the control of the District Educational Officer, Nagercoil.

25th April 1960]

North Arcot District Library

364 *Q*.—திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட நூலகத்தின் வருட வருமானம் எவ்வளவு ?

(ஆ) நூலகங்களுக்கு வாங்கிய பேப்பர், புத்தகம் எவ்வளவு ?

(இ) 1957 முதல் 1959 வரை வருட வாரியாக இந்த நூலகத்தின் வருட செலவு எவ்வளவு ?

A.—(அ) Rs. 66,759 (for 1958–59).

(ஆ) Books to the value of Rs. 20,326·37 and News papers and periodicals to the value of Rs. 4,943·76 were purchased during 1958–59.

(இ) 1956–57—Rs. 57, 612·39.

1957–58—Rs. 90,772·17.

1958–59—Rs. 1,27,484·45.

District and Central Libraries

365 Q.—திரு. மா. பா. சாரதி : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த இராஜ்யத்தில் (District and Central Libraries) எத்தனை மாவட்ட நூல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் வைக்கப்பட்டுள்ளன?

(ஆ) வேலூர் நூல் நிலையக்கட்டிடம் கட்ட என்ன செலவாயிற்று ?

(இ) வடாற்காடு மாவட்டத்தில் கிளை நூல் நிலையங்கள் (Branch Libraries) உள்ள இடங்கள் யாவை?

A.—(அ) One in North Arcot district.

(ஆ) An expenditure of Rs. 1,87,428·40 was incurred up to 31st December 1959. The total expenditure on the construction of the building is estimated to be Rs. 2,11,602·58.

(இ)
1 Arkonam.
2 Arni.
3 Ambur.
4 Chengam.
5 Gudiyattam.
6 Polur.
7 Ranipet.
8 Tiruppattur.
9 Tiruvannamalai.
10 Tiruvettipuram at Cheyyar.
11 Vaniyambadi.
12 Wallaja.
13 Wandiwash.
14 Jolarpet.
15 Kaveripauk.
16 Pallikonda.
17 Thimiri.
18 Alangayam.
19 Pudupalayam.
20 Chetpet.
21 Kalavai.

Harijan students in Coimbatore Colleges

366 *Q*.—திரு. பி. ஜி. மாணிக்கம் : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1958, 1959-ம் வருடங்களிலே கோயமுத்தூர் ஜில்லாவிலிருக்கும அரசாங்கத்தாராலும், தனிப்பட்டவர்களாலும் நடத்தப்பட்டுவரும் கல்லூரிகள், தொழிற்பயிற்சி கல்லூரிகள் போன்றவைகள் ஒவ்வொன்றிலும் எத்தனை ஹரிஜனங்கள் கல்வி பயின்று வருகிறார்கள் ?

[25th April 1960

(ஆ) இவர்களுள் எத்தனை ஹரிஜனங்களுக்கு என்னென்ன விதமான உபகாரச் சம்பளம் கவர்ன்மெண்டால் அளிக்கப்பட்டு வருகின்றன ?

(இ) இவர்களில் ஹரிஜன மாணவிகள் எத்தனை பேர்கள் ?

A.—(அ), (ஆ) & (இ) A statement is annexed which gives particulars for the year 1958–59.

Statement showing the number of Harijan students the number to whom Scholarships were granted, and the number of women students among them in the Arts and Professional Colleges in Coimbatore district during 1958—59.

Serial number and name of the Arts and Professional Colleges in Coimbatore district.	*Number of Harijan students in each of the Arts and Professional Colleges in Coimbatore district (private as well as Government) during* 1958–59.	*Number of Harijan students among them granted scholarships (whether residential or non-residential).*	*Number of women students among them granted scholarships.*
(1)	(2)	(3)	(4)
1 G. V. G. Visalakshi College (for Women), Udumalpet.	3	3	3
2 P. S. G. Arts College, Peelamedu.	9	9	..
3 Government Arts College, Coimbatore.	52	47	..
4 Sri Avinashilingam Home Science College, Coimbatore.	..	..	..
5 Nallamuthu Gounder Municipal College, Pollachi.	6	5	..
6 Sri Ramakrishna Mission Vidyalaya Teachers' Training College, Perianaickenpalayam.	1	1	..
7 Chikkiah Naicken Mahajana College, Erode, Coimbatore.	28	25	..
8 Government Training College for Women, Coimbatore.	..	..	..
9 P. S. G. College of Technology and Polytechnic, Peelamedu, Coimbatore.	6	6	..
10 Sri Ramakrishna Mission Vidyalaya Maruthi College for Physical Education, Perianaickenpalayam, Coimbatore.	5	5	..
11 Government College of Technology, Coimbatore-3.	61	60	..
12 Government Agricultural College and Research Institute, Coimbatore.	17	15	..
13 Nirmala College, Coimbatore.	1	1	1
14 Coimbatore Institute of Technology, Peelamedu.	9	5	..
Total ..	198	182	4

25th April 1960]

Midday Meals Scheme

367 *Q*.—**திரு. பி. ஜி. மாணிக்கம்** : கனம் நிதிஅமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

பொது ஜனங்களுடைய நன்கொடையாலும் சர்க்காரின் உதவியாலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த உயர் நிலைப் பள்ளிக்கூடங்களிலே எத்தனை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் மத்தியான உணவு சப்ளை செய்யப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI P. KAKKAN : Preliminary works such as construction of quarters for staff and workers, laying of new roads, improvement to existing roads leading to dam site, etc., connected with the Parambikulam Project are now being executed by the Special staff sanctioned for the purpose. On 5th March 1960, at the top of the hill, about 4 miles from Tunacadavu bridge an accident occurred along the new road leading to the Parambikulam dam. The contractor, Sri K. Raju, with about 25 labourers, was doing work at the ridge near the hair pin bend. While the labourers carrying earth were moving along, a slab of the earth at the adjoining portion, where no work was being done, slipped and all the labourers except seven, who were caught underneath, ran away. On hearing the news, the Executive Engineer, Parambikulam Division, rushed to the spot and arranged for immediate removal of the earth to extricate the persons beneath the slipped earth. On extrication, the lives of all the seven, five men and two women, were found extinct.

After a detailed examination of the incident, it is reported that soil cover at the place of the accident is only about 3 feet below which lies a thick layer of disintegrated rock which can be removed only with pick axes. As usual, while excavating the disintegrated rock, the sides were kept slightly inclined to the vertical as the soil texture is firm and could stand with its face almost vertical without slipping and sliding unlike earth. The sliding is, however, reported to have occurred due to the existence of a hidden vertical joint at a distance of about four feet from the face which could not be seen from the side. The slip occurred along this vertical joint and the slab of the disintegrated rock slided and slipped scattering the earth cover on the top surface all over the place with the result the victims of the accident were actually caught underneath the slab of the disintegrated rock. The Special Chief Engineer (Parambikulam-Aliyar Project) also inspected the site and found that the land slide was only accidental.

The Madras Detailed Standard Specifications provide necessary instructions and guidance to the staff as well as to the contractors who take up works of the Public Works Department. In addition to these, the Special Chief Engineer (Parambikulam-Aliyar Project)

[Sri P. Kakkan]

has already issued instructions both in English and in Tamil, regarding the safety measures and engineering guidance to be followed by the staff to avert accidents. All possible safety measures and engineering guidance had been already there and there was no failure on the part of the Department. The present mishap was only providential and was not due to any lack of precautions.

It is reported that the Contractor, who had engaged the deceased labourers, has paid compensation to the families of three deceased workers at the rate of Rs. 100. The accident had been reported to the Commissioner for Workmen's Compensation for taking further action in the matter in accordance with the provisions of the Workmen's Compensation Act, 1923.

IV.—ADJOURNMENT MOTIONS:

(1) FAILURE TO SETTLE THE DISPUTE BETWEEN ELECTRICITY WORKERS IN KUNDAH AND THE ELECTRICITY BOARD.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the hon. Member Sri N. K. Palanisami with regard to a matter of what he thinks urgent public importance, viz., the "failure of the Government to settle the dispute between the Electricity workers in Kundah and the State Electricity Board which resulted in lathi charge and the arrest of workers and the Secretary of the National Project Workers' Union, Kundah ". I have already ruled a similar motion out of order a few days ago. I would like to remind the hon. Members in this connection that Rule 50 (viii) clearly lays the restriction, viz., "The matter to be discussed must involve more than the ordinary administration of the law." Surely, maintenance of law and order cannot be made the subject-matter of an adjournment motion to be discussed on the floor of this House. I agree with the hon. Members that it is unfortunate that there are labour-management differences. But, how to solve those differences is the question. There are other ways to settle those disputes and differences. There is conciliation, there is the Tribunal, there are the Labour Officers, there is the High Court and there is also the Supreme Court. This Assembly cannot be made the forum for settling labour-management disputes. I have been repeating this time and again. But, the hon. Members do not seem to appreciate my difficulties in the matter. If the hon. Members repeat this practice, I am sorry I will rule such motions out of order in my Chamber itself and will not bring those motions before the House and also will not read them to the House. I rule the motion out of order.

(2) LOCK-OUT IN THE PARAVAI MILLS, MADURAI.

MR. SPEAKER: I have also received notice of another adjournment motion from the hon. Member Sri V. K. Kothandaraman to discuss a matter of what he thinks urgent public importance, viz., the lock-out in the Paravai Mills, Madurai, and the consequent unrest among the workers. Rule 50 (x) lays down the restriction that the "motion must refer to a matter in which the responsibility of the Government is clearly involved ". How can we say that the Government are responsible for the lock-out in a private mill ? What I have stated in respect of the other motion applies to this case also. The Assembly cannot be made a forum for settling labour-management disputes. Therefore, I rule this motion also out of order. I must

25th April 1960]

[Mr. Speaker]

tell the hon. Members that I have been very lenient in these matters. If, however, the hon. Members repeat this practice, I will rule the motions out of order in my Chamber itself and will not bring them before the House.

V.—INFORMATION *RE* THE STRENGTH OF THE MAIN OPPOSITION PARTY.

SRI N. K. PALANISAMI : Sir, I rise to a point of order. Some of the Members of the Indian National Democratic Congress Legislature Party which has now merged with the Swatantra Party during the recent Tiruchirappalli Convention, have submitted their resignations from the Party and have also intimated the fact to you, Mr. Speaker. But so far, you have not taken any action . . .

MR. SPEAKER: It is not a point of order. Anyway, let the hon. Member finish his point.

SRI N. K. PALANISAMI : Since their number has been considerably reduced, we are very eager to know the position of the Main Opposition Party in this House.

MR. SPEAKER : It is not a point of order. If the hon. Member says that he is anxious to know the position, that is another thing and the answer to that is, 'Please wait and see !' (Laughter.)

VI.—GOVERNMENT BILLS

(1) THE COURTALLAM TOWNSHIP (VALIDATION OF TAXES AND LIBRARY CESS) BILL, 1960.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I beg to move—

"That leave be granted for the introduction the Courtallam Township (Validation of Taxes and Library Cess) Bill, 1960 [a]"

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Courtallam Township (Validation of Taxes and Library Cess) Bill, 1960 ."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1960-61.

DEMAND XXI—CO-OPERATION.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rupees 1,87,92,800 under Demand XXI—Co-operation."

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 25th April 1960.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rupees 1,87,92,800 under Demand XXI—Co-operation."

SRI V. SUBBIAH : கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபிக்கிறேன் :—

"That the allotment of Rs. 1,87,92,800 under Demand XXI—Co-operation be reduced by Rs. 100."

MR. SPEAKER : Motion moved—

"That the allotment of Rs. 1,87,92,800 under Demand XXI—Co-operation be reduced by Rs. 100."

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானிய கோரிக்கையில் கூட்டுறவைப் பொறுத்த கோரிக்கையும் கைத்தறி சம்பந்தமான கோரிக்கையும் இணைக்கப்பட்டிருக்கின்றன. முதலில், கூட்டுறவு சம்பந்தமாகச் சில புள்ளி விவரங்களை நான் கொடுக்க முன்வருகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலிருந்து நாளது வரையிலும் கூட்டுறவு இயக்கம் சிறந்த முறையில் நமது நாட்டில் வளர்ச்சி பெற்று வந்துகொண்டிருக்கிறது. என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஓரிரண்டு புள்ளி விவரங்கள் கொடுத்தால் எந்த அளவுக்கு நம்முடைய ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கம் உயர்ந்த முறையில் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் ஆரம்பித்த காலத்தில், நம்முடைய ராஜ்யத்தில் சற்றேறக்குறைய 49 சத விகிதம் கிராமங்களில் தான் கூட்டுறவு சங்கங்கள் இருந்தன. 1960-வது வருஷம் பிப்ரவரி மாதம் வரையிலும், அதாவது கடந்த நிதி ஆண்டில் 11 மாதங்களில் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது, 96 சத விகிதம் கிராமங்கள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல், நம்முடைய ராஜ்யத்தில், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் ஆரம்பித்த போது 21 சத விகிதம் குடும்பங்கள்தான் இதில் அங்கத்தினர்களாக இருந்தார்கள். 1960ம் வருஷம் பிப்ரவரி மாத இறுதியில் 42 சத விகிதம் குடும்பங்கள் கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்தினர்களாக வளர்ந்திருக்கிறார்கள் ; இரட்டிப்பு மடங்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் கடன் கொடுக்கின்ற தொகையில் கூட, இரண்டாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பகாலத்தில் நாம் 6 கோடி

9-30 a.m. ரூபாய்தான் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்தோம். ஆனால், கடந்த ஆண்டில், 11 மாதங்களில், 19 கோடி 30 லட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் தொகை விவசாயிகளுக்கு விஸ்தரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் புள்ளி விவரம் கொடுக்கும்பொழுது மற்றும் ஒரு விஷயத்தை குறித்து நான் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கிறது என்று உணர்ந்து நாம் 1959-60-ம் வருஷத்தில் 100-க்கு 100 இந்த ராஜ்யத்தில் இருக்கிற எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவு இயக்கத்தை விஸ்தரித்துவிட முடியும் என்று நினைத்தோம். ஆனால் பிப்ரவரி மாத இறுதியில் 91 சத விகிதம்தான் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. [illegible]ல் நம்முடைய ராஜ்யத்தில் ஏதோ கூட்டுறவு

25th April 1960] [Srî R. Venkataraman]

இயக்கம் தயக்கப்பட்டுவிட்டதாக யாரும் நினைக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் அதாவது 1961-வது வருஷ இறுதிக்குள் நாம் இந்தக் கூட்டுறவு இயக்கத்தை எல்லாக் கிராமங்களி லும் விஸ்தரிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். வேகமாக துரித மாகச் செய்யவேண்டும் என்பதற்காக நாம் உயர்ந்த லட்சியத்தை வைத்துக்கொண்டோம் என்ற காரணத்திற்காக அந்த உயர்ந்த லட்சி யத்திற்கும், சற்று குறைந்துவிட்டது. ஆகவே இயக்கம் தடைபட்டு நிற்கிறது என்று யாரும் நினைக்க மாட்டார்கள். அவ்வாறு சற்றுக் குறைவாக இருப்பதற்குக் காரணமும் உண்டு. இதற்கு முன்பு நாம் இந்தத் திட்டத்தை வகுக்கிற காலத்தில் பெரிய அளவுக்கு விவசாய பாங்குகள் நம்முடைய ராஜ்யத்தில் வைக்க முடியும் என்று எதிர் பார்த்தோம். விவசாய பாங்குகளுக்கு அதிகப்படியான தேவை இருக் கிறது, எல்லாக் கிராமங்களிலும் விவசாய பாங்குகள் வேண்டும் என்று கோரிக்கைகள் எல்லாம் வந்துகொண்டிருந்தன. ஆனால், அகில இந்தியாவிற்குமாக கூட்டுறவு சம்பந்தமாக ஒரு புதிய கொள்கை எடுக்கப் பட்டது. அந்தப் புதிய கொள்கையின் அடிப்படை என்னவென்று சொன்னால், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கம் தனியாக இருக்க வேண்டும். நாலு ஐந்து கிராமங்களுக்கு, 10 கிராமங்களுக்கு என்று சேர்ந்து பெரிய பாங்குகள் இருப்பதை விட ஒவ்வொரு கிராமத்திற் கும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என்ற புதுக் கொள்கையை ஏற்படுத்தி அகில இந்திய ரீதியில் நேஷனல் டெவலெப்மெண்டு கவுன்சில் முடிவு எடுத்தார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனிச் சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டபொழுது, நம்முடைய ராஜ்யத்தில் இது சம்பந்தமாக வேறு கருத்துக்கள் இருக்கின்றன ; அவை களையும் புதியதாக ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கையையும் இணைத்து ஒரு முறை செய்யலாம் என்று நாம் வேறு யோசனைகள் செய்தோம். அந்த அடிப்படையில் கிரெடிட் யூனியன்கள் வைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அவ்வாறு 100 கிரெடிட் யூனியன்கள் வைக்கலாம் என்று 1959-60-ம் வருஷத்தில் நாம் ஏற்பாடு செய்தோம். நூறு கிரெடிட் யூனியன்கள் நம்முடைய ராஜ்யத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ் வொரு கிராமத்திலும் தனியாக சங்கம் வைக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால், புதியதாக நாம் இனி விஸ்தரிக்கபபோகிற சங்கங்களெல்லாம் கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற அடிப் படையில்தான் விஸ்தரிக்கப்படும். 1960-61-ம் ஆண்டில் நாம் இன்னும் புதியதாக 500 கிரெடிட் சொசைடிகள் ஆரம்பிப்பதாகத் திட்டம் வகுத் திருக்கிறோம். அவ்வாறு புதியதாக 500 கிரெடிட் சொசைடிகள் ஆரம் பித்துவிட்டால் 100-க்கு 100 கிராமங்கள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் வந்துவிடும். அதே போல 50 சத விகிதம் ஜனத் தொகையும் இந்தக் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்துவிடுவார்கள். கொடுக்கக் கூடிய கடன் தொகை அளவும் ரூபாய் 22½ கோடியாக உயர்ந்துவிடும். ஷார்ட் டெர்ம் கிரெடிட் ரூபாய் 21 கோடி. லாங் டெர்ம் கிரெடிட் ரூபாய் 1,50,00,000 ஆக ரூபாய் 22½ கோடிக்கு வந்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், நம்முடைய விவசாயப் பாங்குகள் ஆபீஸ் கட்டுவதற்கும், சூபர்வைசரி யூனியன் முதலியவைகள் கட்டிடங்கள் கட்டுவதற்கும் உதவி செய்வதாகத் திட்டம் வகுத்திருக்கிறோம். ஐம்பது விவசாய பாங்கு களுக்கும், ஏழு சூபர்வைசரி யூனியன்களுக்கும் நிதி உதவி, கட்டிடம் கட்டுவதற்காக அளிக்கப்படும். இப்பொழுது புல் பினான்ஸ் ஸ்கீம் என்று 15 பிளாக்குகளில் நாம் ஆரம்பித்து விவசாயிகளுடைய கடன் தேவை பூராவும் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலமாக இன் றைக்கு நிலம் இல்லாத விவசாயிகளுக்குக் கூட கடன் வசதி கொடுக்க வேண்டும் என்ற நியதிப்படி அவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடன் கொடுத்தால், அதில் ஏற்படக்கூடிய நஷ்டத்திற்கு 10 சத விகிதம்

ராஜ்ய சர்க்கார் காரண்டி கொடுக்கிறது என்ற நிலைமையையும் ஏற் படுத்தியிருக்கிறோம். அந்தக் காரண்டியின் அடிப்படையில் மத்திய பாங்கு இன்னும் பிரைமரி பாங்குகள் நிலம் இல்லாத விவசாயிகளுக்கு, உற்பத்தி யில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கடன் வசதி கொடுப்பார்கள் என்று எதிர் பார்க்கிறோம். இன்றைக்கு அதிகமாக கடன் வசதிகள் விஸ்தரிக்கப் படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு ஜாமீன் இல்லை, சொத்து இல்லை என்ற காரணம்தான். ஆனால் சர்க்கார் இப்பொழுது அவர் களுக்கு காரண்டி கொடுக்கிறது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, ஓரள வுக்குத் தைரியமாக மத்திய பாங்கு, பிரைமரி சொசைடிகள் நிலம் இல்லாதவர் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பார்களேயானல், அவர்களுடைய உற்பத்தியை ஜாமீனாக வைத்துக்கொண்டு கடன் கொடுப்பதற்கு முன்வர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மார்க்கெடிங் சொசைட்டிகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு 125 சொசைடிகள் இந்த ராஜ்யத்தில் இருக்கின்றன. இன்னும் அதிக மாக மார்க்கெடிங் சொசைடிகள் வேண்டுமென்று சர்க்காருக்கு எந்த ஒரு கோரிக்கையும் வரவில்லை. ஆனல், இதை விஸ்தரிக்க வேண்டும். இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னல், இப்பொழுது நாம் இந்தத் திட்டத்தில் அதற்காகத் தனியாக நிதி ஒதுக்காவிட்டாலும், அதை சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டிய அளவுக்கு விஸ்தரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதே போல, ராஜ்யத்தில் இன்றைக்கு கோடவுன்கள் கட்டுவதை எடுத்துக்கொண்டால், சற்றேறக் குறைய 100 கோடவுன்கள் கட்டுவதற்காக ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்கு ரூபாய் 20 லட்சம் அளவுக்கு பினன்ஷியல் அஸிஸ்டென்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு நாலு கிரௌண்டுநட் டிகார்டிகேட்டர்கள், 6 காட்டன் ஜின்னர்கள், 18 ரைஸ் ஹல்லர்கள் முதலியவைகள் சர்க்கார் உதவியுடன் கூட்டுறவு இயக்கத் தின் மூலம் ஆரம்பிக்கப்படும்.

அடுத்தபடியாக, ராஜ்யத்தில் சர்க்கரை ஆலை கூட்டுறவு இயக்கத் தில் ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கத்தை நாம் எடுத்துக்கொண் டிருக்கிறோம். மூன்று ஆலைகள் இப்பொழுது, ஆம்பூர், மதுராந்தகம், அமராவதி ஆகிய மூன்று இடங்களில் அடுத்த வருஷத்தில் வேலை தொடங்கிவிடும். மேற்கொண்டு இரண்டு கூட்டுறவு ஆலைகள் வைப்பதாக சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. ஒன்று நாமக்கல்லில் வைக்கப்படும். மற்றென்று எந்த இடத்தில் என்று இன்னும் தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.

கூட்டுறவு பார்மிங் சொஸைடிகள் சம்பந்தமாக நாம் பெரிய அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். சென்ற ஆண்டு நம்முடைய லட்சியமாக எடுத்துக்கொண்டது 21 கூட் டுறவுவிவசாய சொசைடிகள். ஆனல் 11 மாதங்களில் நாம் செய்தது 80 கூட் டுறவு சொசைடிகள். எடுத்துக்கொண்ட அளவுக்கு மேல் 3 மடங்குகள் அதிகமாக நாம் கூட்டுறவு விவசாய சொசைடிகளை ஆரம்பித்திருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் மேற்கொண்டு அதிகப்படியாக மக்களிடமிருந்து மனுக்கள் வந்துகொண் டிருக்கின்றன. இன்னும் மக்களிடத்தில் அதற்கு அதிகமாக ஆர்வம் இருக்கிறது. போதிய பண வசதிகள் இல்லாததினல், இன்னும் அதிகம் செய்ய முடியவில்லை என்பதையும் நான் முன்பே இந்தச் சபையில் முன்னல் தெரிவித்திருக்கிறேன். மேற்கொண்டு 20 சொசைடிகள் அடுத்த ஆண்டில் செய்ய வேண்டுமென்று திட்டம் வகுத்திருந்தாலும், அதற்கு மேல் அதிகமாக மனுக்கள் வந்தாலும், இதற்கு மேல் அதிக மாக மக்கள் ஊக்கம் காட்டினலும் இதை அதிகரிக்கலாம் என்ற அபிப் பிராயத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

25th April 1960] [Sri R. Venkataraman]

கூட்டுறவு இயக்கம் நன்முக வளர்வதற்கு அதிகமாக பயிற்சி அளிப்பது மிகவும் அவசியம். இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் 5 கூட்டுறவு ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்கள் நடந்துகொண்டிருக்கின்றன. சாதாரண சிப்பந்திகளைத் தயார் செய்வதற்காக, கோவை, சேலம், தஞ்சை, காஞ்சீபுரம், மதுரை போன்ற இடங்களில் சிப்பந்திகளுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய நிலையங்களை நாம் அமைத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு 800 சிப்பந்திகள் வருஷா வருஷம் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். இது தவிர, சென்ட்ரல் கோவாபரேடிவ் இன்ஸ்ட்டிட்யூட் ஒன்று இருக்கிறது. அதில் ஜூனியர் இன்ஸ்பெக்டர்கள், சீனியர் இன்ஸ்பெக்டர்கள் முதலியவர்கள் எல்லோரும் பயிற்சி பெறுகிறார்கள். கூட்டுறவு இயக்கம் நல்ல மக்கள் இயக்கமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அதில் பங்கு எடுத்துக்கொள்ளுகிற பஞ்சாயத்துதார்கள் எல்லோரும் கூட்டுறவு இயக்கத்தின் லட்சியத்தையும், நடத்த வேண்டிய முறைகளையும் உணர்ந்து கொள்வது அவசியம். ஆகவேதான் நாம் அதிகமாகக் கவனம் செலுத்தி, பஞ்சாயத்துதார்களுக்கு அதிகமாகப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். கடந்த ஆண்டில், 8,766 பஞ்சாயத்தார்களுக்கு குறுகிய காலப் பயிற்சியும், அது சம்பந்தமாக ஒரு கல்வியும் அளித்திருக்கிறோம். இன்னும், பால் பண்ணை நடத்த வேண்டியது அவசியம் என்பது சர்க்காரின் உன்னதமான லட்சியம்; அதையும் நிறைவேற்றியாக வேண்டும். சராசரி நம் சென்னையில், 58,800 மதராஸ் மெஷர், அளவுக்கு பால் உற்பத்தி செய்ய ரூ. 12 லட்சம் கடன் உதவி தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரில், பாஸ்சுரைஸ்ட் ப்ளாண்ட் ஆரம்பித்திருக்கிறோம். மதுரையில் "யூனிஸெப்" குழந்தைகள் பண்டிலிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அது கிடைத்தால், பால் வினியோகம் செய்யக்கூடிய பாஸ்சுரைஸ்ட் ப்ளாண்ட் அங்கே வைக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

வீடு கட்டும் திட்டத்திலும், கூட்டுறவு சங்கம் சிறந்த பணியாற்றி வருகிறது; அது சம்பந்தமான சில புள்ளி விவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். ஸ்டேட் ஹௌஸிங் ஸ்கீமில் ரூ. 40 லட்சமும், கிராமப் புறத்து வீடுகள் கட்ட ரூ. 3·5 லட்சமும், குறைந்த வருமானம் உள்ள லோ இன்கம் க்ரூப்பில் ரூ. 20 லட்சமும், இன்னும் இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங்குக்கு ரூ. 7 லட்சமும், மத்தியதர வகுப்புகளுக்கு வீடு கட்ட ரூ. 25 லட்சமும், ஆக ரூ. 95 லட்சம் நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நம் ராஜ்யத்தில், நாம் வீடு கட்டக் கடன் கொடுத்தால் மாத்திரம் போதாது. பழைய வீடுகளை பழுது பார்க்கவும் உதவியளிக்க வேண்டும். அதற்காக, ஸென்ட்ரல் லாண்டு மார்ட்கேஜ் பாங்க் போல, ஸென்ட்ரல் ஹௌஸ் மார்ட்கேஜ் பாங்கு என்று ஆரம்பித்திருக்கிறோம். அது 20 கிளை ஸ்தாபனங்களைக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு, இன்னும் பல கிளை ஸ்தாபனங்கள் வரும். அதன் மூலம், வீடுகள் பழுது பார்க்கவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, கூட்டுறவு இயக்கம் இன்றைக்கு அந்த விதமாக வலுவடைந்து, எல்லாத் தாலூகாக்களிலிருந்தும், இந்திந்த விதமான வசதிகள் வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. ஆகவே, இந்த இயக்கம் சிறந்த முறையிலே முன்னேற்றம் அடையும் என்பதில் சந்தேகமில்லை.

கடைசியில், இந்தக் கூட்டுறவு சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற நோக்கம் சர்க்காரிடத்தில் சில வருஷங்களாக இருந்து வருகிறது. அதைத் திருத்தியமைக்க வேண்டும் என்று சொல்லும்போது, இதில் மத்திய சர்க்கார் அபிப்பிராயங்கள், பிற ராஜ்யங்களின் நிபுணர்கள் அபிப்பிராயங்கள், நம் ராஜ்யத்திலே நாம் நியமித்த நாராயணசாமி பிள்ளை கமிட்டியின் அபிப்பிராயங்கள், இவைகளைப் பரிசீலனை செய்து, நாம் ஒரு சட்டம் தயாரிக்க இருக்கிறோம். அது நடைமுறை ஆண்டில் சட்டசபை முன்னால் கொண்டு வரப்படும்; செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்படும்

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விதமான சட்டம் வந்தால், இப்பொழுது இருக்கும் (டிலேகள்) காலதாமதங்கள் இன்னும் அனுவசிய மான சிக்கல்கள் இவற்றையெல்லாம் தவிர்த்து, உண்மையாக மக்களுக்குத் துரிதமாகச் சேவை செய்யும் ஒரு ஸ்தாபனமாக இதை மாற்ற முடியும் என்று எதிர் பார்க்கிறேன்.

இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எந்த அளவுக்கு இடைக் கால கடன்கள் கொடுக்க முடியும், இதற்கு எவ்வளவு ஷேர் காபிடல் வேண்டும், என்னென்ன செய்யவேண்டும் என்பதெல்லாம், நடைமுறை யிலே இருக்கக் கூடிய பிரச்சினைகள். இதற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ராஜ்யக்கமிட்டிகள் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவுத்துக்கொள்கி றேன். இப்பொழுது ரெஜிஸ்ட்ரேஷனில் கூட காலதாமதம் இருக்கிறது. சட்டத்தை திருத்தியமைத்தால் இதைத் தீர்க்கலாம் என்று நினைக்கிறேன்.

இந்தச் சில வார்த்தைகளைக் கூறி, கூட்டுறவு சம்பந்தமான மானியக் கோரிக்கையை சபை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகி றேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். கைத்தறி சம்பந்த மாக நம் ராஜ்யத்தில் என்ன செய்யப்படுகிறது என்பதை, கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக எப்படி ஒன்று அச்சிட்டு வெளியிட்டோமோ, அதே போல், கைத்தறி சம்பந்தமாகவும் ஒரு அறிக்கை அங்கத்தினர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நம் ராஜ்யத்தில் மொத்தம், 462,000 கைத் தறிகள் இருக்கின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 50 சத விகிதம் கைத்தறிகளை கூட்டுறவு சங்கத்தின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற லட்சியத்தை மேற்கொண்டு, அந்த அளவில், 1959-ம் வருஷ மார்ச்சு இறுதியில், 222,000 சில்லரைக் கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத் தின்கீழ் வந்து விட்டன. 1959-60-ல், 12,000 கைத்தறிகளை கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். கைத்தறி சம்பந்தமான சில கடுமையான பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத் தால், 12,000 கைத்தறிகளை உடனடியாகக் கொண்டுவர முடியவில்லை. என்றாலும் திட்ட காலத்திற்குள், போதிய அளவு, அதாவது, 50 சத விகிதம் என்று சொல்லப்படுகிற, மீதி 230,000 சில்லரை கைத்தறிகளை கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்ற துணிபில நடப்பு ஆண்டில் தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கைத்தறி உற்பத்தி நம் ராஜ்யத்தில் நன்றாக பெருகி வருகிறது என்பதற்கு நான் சில எடுத்துக்காட்டுகளைக் கூற விரும்புகிறேன். 1956-57-ல் நாம் சற்றேறக்குறைய, 132,500,000 கெஜம் கைத்தறி நெசவு செய்திருக்கிறோம். 1958-59 இறுதியில், சென்ற ஆண்டு வரைக்கும் தான் புள்ளி விவரங்கள் இருக்கின்றன, 142,000,000 கெஜம் என்ற அளவுக்கு அதிகமாகக் கைத்தறித் துணியை கூட்டுறவு இயக்கத்தில் உற்பத்தி செய் திருக்கிறோம் என்பதையும் தெரிவிக்கிறேன். கைத்தறி நல்ல முறையிலே விற்பனையாக வேண்டுமானால், ரிபேட்டு ஒரு இன்றியமையாத நிலை. பலர் கேட்கிறார்கள், எவ்வளவு காலம் இந்த ரிபேட்டை கொடுத்துக் கொண்டே கைத்தறித் துணியைப் பாதுகாக்க முடியும் என்று. அது தானாகவே முன்னேற்றம் அடைந்து, நிலைத்து நிற்கச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். நம் ராஜ்யம் வகுத்துக் கொண்டிருக்கிற கொள்கை, சிறு தொழில்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பது. அவ்வாறு பாதுகாப்பு அளிக்கும்போது, என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டுமோ, அவைகளைக் கொடுப்பதன் மூலந்தான் பாதுகாப்பு அளிக்க முடியும். சிலவற்றிற்கு ஸப்ஸிடி மூலமாகவும், சில பண்டங் களுக்கு, 'ப்ரொடெக்டெட்', 'ஷெல்டர்ட்' மார்க்கெட்டும், சில பொருள்

25th April 1960] [Sri R. Venkataraman]

களுக்கு பாதுகாப்பும் கொடுக்க முடியும். அதே போல விற்பனை வசதிகள் செய்து கொடுத்தால், சில பண்டங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். அவ்வாறு பார்த்தால், விற்பனையிலிருந்து கழிவுத் தொகை கொடுப்பதன் மூலந்தான் கைத்தறித் துணிக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்பது சர்க்காரின் நோக்கம். பிற ராஜ்யங்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் சென்னை ராஜ்யம், கழிவுத் தொகை அவசியம் கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் விற்பனையை அதிகரிக்க முடியும் என்று உறுதியாகச் சொல்லி வருகிறது. என்றாலும் கூட, நம் ராஜ்ய சட்ட சபையும், இது சம்பந்தப்பட்ட கைத்தறி நெசவாளர்களும், இதுவே முடிவு என்று இருந்துவிடாமல், வேறு எந்த துறையில் கழிவு இல்லாத முறையில், வசதியைப் பெற என்ன செய்ய வேண்டும் என்று ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால், பிற ராஜ்யங்கள் வேகமாக 'பவர் லூம்' களில் ஈடுபட்டு, உற்பத்தி செய்ய ஆரம்பித்து விட்டால், நம் ராஜ்யத் துணியின் விலை அதிகமாகிவிடும். கிடைக்கும் 'ரிபேட்டு' கூட மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, வரும் காலத்தைப்பற்றி சிந்திக்க வேண்டும். இது மூன்றாவது திட்டத்தைப் பொறுத்தது மட்டுமல்ல. மூன்றாவது திட்ட காலம் மட்டும் அல்ல, தமிழ் நாடு உள்ள வரைக்கும் இருக்கக் கூடிய ஒரு நிலை. அதைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆந்திர ராஜ்யத்தில், கழிவுத் தொகை கொடுப்பதற்குப் பதில் கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறவர்களுக்கு அந்தத் தொகையை ப்ராவிடெண்ட் பண்ட் மூலமாகக் கொடுக்கலாம், மற்ற உதவிகளையும் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம் கழிவுத் தொகை வாங்குகிறவர்கள் சிலருக்குச் சென்று கொண்டிருக்கிற பணம் ப்ரொடியூசர்ஸ், கைத்தறி நெசவாளர்களுக்குக் கிடைக்கும் என்ற அபிப்பிராயம் இருக்கிறது, என்று அதை வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். அதையும் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கைத்தறித் துணிக்கு ஒதுக்கி இருக்கிற கழிவுத் தொகை சிறந்த முறையில் கைத்தறித் தொழிலாளர்களுக்கு உதவி அளிக்கும்படியான ப்ராவிடெண்ட் பண்ட் நிதி வசதி அளிக்கிறது. அந்தப்படி அதை உபயோகிக்க முடியும் என்பதை ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரளவு ரிபேட் கொடுத்திருந்தாலும் ராஜ்ய சர்க்கார் அதற்கு மேலும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சட்டசபை அங்கத்தினர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அளவு இந்த வருஷத்தில் கூட 75 லட்சம் ரூபாய் கழிவுத் தொகையாக மாத்திரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது இந்தச் சபையில் வழக்கமாக ஒரு குற்றச் சாட்டு சொல்லப்படும். கதருக்கு மாத்திரம் மூன்று அணா ரிபேட் கொடுக்கிறார்கள், ஆனால் கைத்தறித் துணிக்கு குறைவாகக் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படும். அதன் உண்மை விவரம் என்னவென்றால் கைத்தறி நெசவுத் துணிகளுக்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. கதர் உற்பத்தியாளர்களுக்கு அப்படிப்பட்ட திட்டங்கள் கிடையாது. வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் கைத்தறித் நெசவாளர்களுக்கும் உண்டு. ஆனால் அது கதர் உற்பத்தியாளர்களுக்குக் கிடையாது. மற்ற 'இம்ப்ரூவ்ட் இம்ப்ளிமெண்ட்ஸ்' கொடுக்கிறோம். அவைகள் எல்லாம் கைத்தறி நெசவாளர்களுக்கு இலவசமாகக் கொடுக்கிறோம். ஆனால் அப்படி கதர் உற்பத்தி செய்கிறவர்களுக்கு இலவசமாகக் கொடுப்பது கிடையாது. மேலும் விற்பனை செய்வதற்கு சங்கங்கள் அமைப்பதில் செலவு ஆகிறது. அந்தச் செலவில் ஒரு பகுதி நாம் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கிறோம். விற்பனை செய்வதற்கு ஷோ ரூம் முதலியவைகள் கொடுக்கிறோம். இந்த விதமான சலுகைகள் கதருக்குக் கிடையாது. ஆகவே தான் ஒரு இலாகா துணிக்கு ஒரு விதமான சலுகை கொடுக்கப்படுகிறது, மற்றொன்றுக்குக் கிடையாது என்று சொல்வதற்கு இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[Sri R. Venkataraman] [25th April 1960

அடுத்தபடியாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1,600 வீடுகள் கட்டுவதாக ஏற்பாடு செய்திருந்தோம். அதில் சென்ற வருஷ இறுதிக்குள்ளாக 1,460 வீடுகள் கட்ட சாங்கிஷன் ஆகி மேற்கொண்டு 350 வீடுகள் கட்டுவதற்கு 'சாங்ஷன்' கொடுக்கப்போகிறோம். ஆகவே, இந்த வருஷத்தில் அந்த 1,600-க்கு மேல் அளவுக்கு 'சாங்ஷன்' அளிக்க வேண்டும். எல்லா வீடுகளும் இந்த வருஷத்தில் கட்டி முடிக்க முடியாது என்ற காரணத்தால் எவ்வளவு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கட்டிக்கொடுத்து விட்டு பாக்கியுள்ள வீடுகளை Spill over என்றளவில் அடுத்த ஐந்து வருஷ திட்டத்தில் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதன் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் சரியான அளவில் முடிந்து விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னும் இன்டஸ்ட்ரியல் கூட்டுறவு சங்கம் வைத்து தறிகள் இல்லாத தொழிலாளர்களுக்கு நாம் வேலை செய்வதற்காக வசதிகள் செய்து கொடுத்திருக்கிறோம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக வைப்பதில் இப்பொழுது திருச்செந்தூரில் ஒன்றும் இன்னும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒன்றும் ஆரம்பிக்க இருக்கிறது. அப்படிப்பட்டது பேட்டையில் ஒன்றும் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது. சேலத்தில் ஒன்றுக்கும் லைசென்ஸ் வாங்கி இருக்கிறோம். மேற்கொண்டு கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக வைக்க சர்க்கார் மேற்கொண்டு வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடைசியாக ஒரு பிரச்னை இதில் எழுந்ததைப்பற்றி நான் கூற விரும்புகிறேன். நமது நாட்டில் உற்பத்தியாகக் கூடிய 'ப்ளீடிங் மெட்ருஸ்' என்று சொல்லக்கூடிய ஒரு ரகத் துணிக்கு அமெரிக்க நாட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது என்பதை சர்க்கார் அதிகாரி ஒருவர் அங்கே சென்று பார்த்து, அதற்கு ஏராளமான ஆர்டர்களையும் வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். அங்கே இதற்கு கிராக்கி இருக்கிறது என்று தெரிந்தவுடன் வேறு தனியார் துறையில் இருக்கக்கூடியவர்கள் இந்த 'ப்ளிடிங் மெட்ருஸ்' என்ற ரகத்தையும் இன்னும் வேறு குறைந்த ரகத் துணிகளையும் அதிக விலை கொடுத்து வாங்கி அமெரிக்கா நாட்டிற்கு ஏற்றுமதி செய்தார்கள். அதன் பலனாக இங்கே சாதாரணமாக உற்பத்தி செய்கிற மதருஸ் ஹாண்ட் கர்சீப், லுங்கி போன்றவைகள் வழக்கமாக செல்லுகிறதானது அனுப்ப முடியாமல், புதியதாக இருக்கக்கூடிய 'ப்ளிடிங் மெட்ருஸ்' என்று சொல்லக்கூடிய இந்தத் துணியை உற்பத்தி செய்வதிலேயே நம் தொழிலாளர்கள் ஈடுபட்டார்கள். அதன் விளைவாக ப்ளீடிங் மெட்ருசுக்கு 'விலை' நியாயமற்ற முறையில் உயர்ந்துவிட்டது. அதனால் சர்க்கார் வைத்திருக்கக் கூடிய ஸ்தாபனம் அந்த விலை கொடுத்து வாங்கி ஏற்றுமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. அதிக விலை கொடுத்து வாங்கி ஏற்றுமதி செய்ய முடியாது என்று அதை வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். இன்றைக்கு ராஜ்யத்தில் சற்றேறக்குறைய முப்பது லட்சம் ரூபாய் அளவுக்கு இந்த விதமான துணி தேங்கி இருக்கிறது. அதை விற்பனை செய்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். அது ஒரு யோசனை. வரப்போகிற விவாதத்தின்போது கனம் அங்கத்தினர்கள் சொல்லலாம், ஏன் சர்க்காரே இவ்வளவு துணியையும் வாங்கி விற்பனை செய்யக்கூடாது என்று. அப்படி சர்க்கார் வாங்கி விற்பனை செய்ய முடியாது. தனி நபரே வாங்கிக்கொண்டு போய் வெளி நாட்டில் விற்பனையாகாமல் இருக்கும்போது சர்க்காருடைய துணி எந்த விதத்தில் விற்பனையாகும் என்பதை யோசிக்கவேண்டும். வெளி நாட்டில் விற்பனையாகாமல் இருப்பதை சர்க்கார் வாங்கி என்ன செய்வது ? அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை சர்க்கார் ஏற்றுக்கொள்வதா ? அப்படி ஏற்றுக்கொண்டால் அது பொது மக்களுடைய நஷ்டமாகும் அல்லவா ? இதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இருந்தாலும் இந்த 'ப்ளீடிங் மெட்ருஸ் என்று சொல்லக்கூடிய துணி ஒரு நல்ல ரகம், நல்ல துணி. அதை வெளுக்க வெளுக்க நிறம் மாறிக் கொண்டேதான் இருக்கும். அதற்கு சாயம் போகிறது என்று சொல்லக்

கூடாது. ஒரு நிறம் மற்றொரு நிறத்துடன் சார்ந்து போகிறது. அப்படி மாறும்போது புதுப் புது வர்ணமாகிக்கொண்டே போகிறது. அழகான வர்ணங்களாக மாறுகிறது. அதைப் பார்த்தால் இங்கே இருக்கக்கூடிய வர்கள் யாரும் கட்டிக் கொள்ளப் பிரியப்படுவார்கள்.

Sri S. RANGANATHA MUDALIYAR: On a point of information, Sir. Why is it called 'Bleeding Madras'?

The Hon. Sri R. VENKATARAMAN : Because the colour shades go on changing. The colour of one stripe flows into the other and further down so that every time it changes. It is a very attractive garment.

இது ரொம்ப நல்ல சிறந்த துணி. இது நன்றாக இருக்கிறது என்று இதை அமெரிக்கா நாட்டில் சிலர் வாங்குகிறார்கள். 'சம்மர் வேரு'க்கு மிகச் சிறந்தது என்று இதை அவர்கள் விரும்பி வாங்குகிறார்கள். அதனால் நமக்கு ஏராளமான ஆர்டர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார் கள். நமது ஹாண்ட்லூம் எக்ஸ்போர்ட் ஆர்கனைசேஷன் அவைகளை அனுப் பிக்கொண்டிருந்தார்கள். நிச்சயமாக அதன் மூலமாக நமக்கு அந்நிய செலாவணி கிடைத்துக் கொண்டிருக்கும். அதனால் நமது தொழிலாளர் களுக்கு நல்ல விற்பனை கிடைக்கும். நமது தொழிலாளர்களுக்கு நல்ல சரக்கை உற்பத்தி செய்ய சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. இன்றைக்கு அவை களை நாம் அனுப்பி வைக்க வேண்டும். மாகாண சொசைட்டிகள் இன்னும் ரெடிமேட் கார்மெண்டுகளைத் தயாரித்து அவற்றை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்; செய்தும் கொண்டிருக்கிறது. இது ரொம்ப நல்ல துணி. கனம் அங்கத்தினர்கள் ஆளுக்கு ஒன்றாக வாங்கி உபயோ கிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிச்சயமாக சினிமாப் படங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு இது உயர்ந்த ஆடையாக இருக்கும் என் பதில் சந்தேகம் இல்லை. பெண்கள் எல்லோரும் இதை உபயோகித்தால் இது ரொம்ப கவர்ச்சிகரமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். (சிரிப்பு) இன்று சாயங்காலம் இதன் விற்பனை தொடங் குவதற்கு இருக்கிறது இங்கே. அந்தத் துறையில் நம்முடைய ராஜ்யத்தில் இந்த விற்பனையைத் தொடங்குவதற்கான சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு இந்த முப்பது லட்ச ரூபாய் மதிப்புள்ள சரக்கு ரொம்பவும் குறைவு. அது இரண்டே நாளில் விற்றுப்போய் விடும். இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு இடம் கொடுக்க வேண்டும். நாம் உபயோகிப்பதைப் பார்த்து பிற நாடுகளும் இதை வாங்குவதற்கு உபயோகமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே இந்த மானியக் கோரிக்கையை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* Sri V. K. RAMASWAMY MUDALIYAR: அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு, ஜப்பான் போன்ற நாடுகள் 'ப்ளீடிங் மெட்ராட்டி' துணி தயாரித்து அனுப்பி விற்பனை செய்வதால், நமது ஏற்றுமதி பாதிக்கப் படுகிறது என்பது உண்மையா? அப்படி என்றால் Copy right legislation செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து இருக் கிறதா என்பதை அமைச்சரவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். 10-00 a.m.

The Hon. Sri R. VENKATARAMAN: Bleeding Madras-க்கு கிராக்கி இருக்கிறது என்பதைப் பார்த்து மில்களிலே தயார் செய்ய முயற்சி செய்தார்கள். ஆனால் மில்களிலே தயார் செய்கின்ற இந்த ரகமானது கைத்தறி ரகம் போல் உயர்ந்ததாக இல்லை. நல்ல வெற்றியும் அடையவில்லை. இருந்தாலும் அமெரிக்காவில் நம்முடைய துணிக்கு தனி யாக Trade Name ஒன்று வேண்டுமென்று ரிஜிஸ்டர் செய்வதற்கு

முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. அது **Madras-India cloth** என்ற பெயரில் ரெஜிஸ்டர் செய்யப்படும். அது **Bleeding Madras** துணிக்கு மட்டுமின்றி, எல்லா கைத்தறித் துணிக்குமே பொருந்தும். இன்னும் நல்ல ரகம் என்பதைக் காட்டுவதற்காக அதற்கு முத்திரை போட்டு வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்காகக் கூட சென்னை நகரத்திலே ஆர்கனேசேஷன் வைத்து இருக்கிறோம். அந்த முத்திரை வாங்கி வெளி யிலே அனுப்பினால் இன்னும் நன்றாக இருக்கும்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் பதில் அளிப்பதற்கு முக்கால் மணி நேரம் போதுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : போதும்.

MR. SPEAKER : ஆகவே விவாதத்திற்கு 2¾ மணி நேரம்—165 நிமிஷம் இருக்கிறது. ஒவ்வொரு அங்கத்தினரும் 15 நிமிஷம் பேசினால் 11 பேர் பேசலாம். பன்னிரண்டு நிமிஷம் பேசினால் 14 பேருக்குப் போதும். ஆகவே ஒவ்வொரு அங்கத்தினரும் 12 நிமிஷம் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து அங்கத்தினர்கள் இதை ஒத்துக்கொள்ள வேண்டும்.

* **SRI V. SUBBIAH :** கனம் சபா நாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்திற்கு வெட்டுப் பிரேரணையை என் பிரேரேபிக்கிறேன் என்றால் இந்த ராஜ்யததிலே விவசாயத்துக்கு அடுத்தபடியாக நெச வாளர்கள்தான் பெரும் பகுதி இருக்கிறார்கள். நெசவாளர்களுடைய நிலைமையை இன்று பார்ப்பீர்களேயானால், அவர்கள் உற்பத்திசெய்த துணிகள் எல்லாம் தேங்கி கிடக்கின்றன. அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய ரிபேட் போன்றவைகள் எல்லாம் குறைக்கப்படுகின்றன. பல வருஷங்க ளாகவே இந்தத் தொழில் நசித்து வரும்பொழுது, அரசாங்கம் இத் தொழிலுக்கு பாதுகாப்பு அளித்து வருகிறோம் என்று சொல்லிக்கொண்டு, ரிபேட் பணத்தை குறைப்பது மிக மிக வருந்தத் தக்கது.

கிராமாந்தர கடன் வழங்கும் சங்கங்கள் எப்படி இருக்கின்றன, அந்த சங்கங்களினுடைய நிலை என்ன என்பதை நமது கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் சங்கங்கள் கூடுதலாகப்பட்டிருக்கின்றன, அங்கத்தினர்களின் தொகை அதிகமாகி இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதைக் கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன். இருப்பினும், கிராம பொருளாதார அமைப்பிலே விவசாயிகளுக்கு எந்த ரூபத்தில் கடன் வழங்க முடியும் என்று நீங்கள் சிந்திப்பீர்களேயானால், இன்றைக்கு விவசாயிகளுக்கு இந்தக் கூட்டுறவு முறை ஒன்றைத் தவிர வேறு வழியிலே கடன் சுலபமாக கிடைக்கும் என்ற நிலை இல்லை. இந்தக் கூட்டுறவு முறையிலேயும் பல தவறுகள் நடக்கின்றன என்றால், அது மிகையாகாது. கிராமாந்தர கடன் சங்கங்களிலே இன்றைய தினம் பல முக்கியஸ்தர்கள், கிராமத்திலே உள்ள பலருடைய பெயரிலே **loan applications** தயாரித்து, அதன் படி பல ஆயிரக்கணக்கான ரூபாயை ஒருவரே எடுத்துக் கொள்ளக் கூடிய அளவிலே, லேவாதேவி செய்யக்கூடிய அளவிலே, பல சங்கங்கள் இருக் கின்றன. இதற்கு காரணம் என்ன ? அரசாங்கத்தினுடைய மத்திய பாங் கினுடைய ஊழியர்கள், சீனியர் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள், கடன் வழங்கும்போது, அங்கே இருந்து, யார் யாருடைய கடன், யார் யாருக்கு கொடுக்கப்படுகிறது, எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது, மத்திய பாங்கியி லேயிருந்து, வாங்கிக் கொடுப்பதை, ஒழுங்கான முறையிலே, நேரடியாக அவர்கள் கையிலே கிடைப்பதை கண்காணித்து வராதது ஒரு காரணம்.

இது மட்டுமல்ல. நில அடமான பாங்குகளை பார்ப்பீர்களேயானால், ஜமீன் தாரி கிராமங்களுக்கும், இனாம் கிராமங்களுக்கும், சர்வே இல்லாத எல்லா கிராமங்களுக்கும், அந்த பாங்குகள் கடன் கொடுக்காத நிலைமை இன்று இருக்கிறது. ஜமீன்தாரி கிராமங்களிலும், இனாம் கிராமங்களிலும் உள்ள

விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகளினுல் எந்தவிதமான உபயோகமும் இல்லை. இன்னும் சில கிராமங்கள் சர்வே செய்தும் கூட, செட்டில்மெண்டு ஆகாமல் இருக்கின்றன. இதைச் செய்ய பல ஆண்டுகள் ஆகும் என்று கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னுல் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது. விவசாயிகளுக்கு உடனடியாக கடன் கொடுக்கக்கூடிய அளவிலே அந்த நில அடமான பாங்குகள் செயல்பட வேண்டும் என்கிற நிலை இருக்க வேண்டும். நமது கனம் அமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு கூட்டுறவு சட்டத்தை இயற்றும்போது அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகள் இருக்கின்றனவே, அதைப்பற்றி பேசும்பொழுது, வருந்தவேண்டிய நிலையிலே இருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய, மிளகாய் வற்றல், வெங்காயம் போன்ற பணப் பொருள்களை, இலங்கை, பர்மா, மலேயா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு கொடுக்காமல், மத்திய ஸ்டோர்களுக்குக், கொடுத்து விடுகிறுர்கள். ஆனுல், விவசாயிகளுடன் நேரடி தொடர்பு உடையது மார்க்கெடிங் சொசைடிகளே தவிர, ஜில்லா தலை நகரத்திலே உள்ள மத்திய ஸ்டோர்கள் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். எனவே கிராம விவசாயிகளுடன் தொடர்பு உடைய மார்க்கடிங் சொசைட்டிகளுக்குத்தான், வெளிநாட்டு ஏற்றுமதி "கோட்டாக்கள்" கொடுக்க வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஜில்லா பாங்குகள் கடன் கொடுப்பதிலே கொஞ்சம் தாராளம் காட்ட வேண்டும். இந்த பாங்குகள் சில கிராமங்களுக்கு கடனே கொடுப்பதில்லை என்று கூட சொல்லுகிறுர்கள். இந்தக் குறையை சீக்கிரமாக நீக்கி, எல்லா விவசாயிகளுக்கும் கடன் கொடுக்க வழி செய்ய வேண்டும்.

தொழில் துறையிலே கூட்டுறவு முறையை கையாளுகின்றனர். அதிலே எவ்வளவோ மோசடிகள் நடக்கின்றன. மதிப்பீடுகளிலே அதிகமாக பணம் கொடுக்கப்படுகிறது. சமீபத்திலே, சாத்தூரிலே ஒரு தீப்பெட்டி தொழிற்சாலைக்கு அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்கம் மேட்ச் பேக்டரி என்ற தீப்பெட்டி தொழிற்சாலைக்கு, அரசாங்கம் கூட்டுறவு முறையிலே எடுத்துக் கொள்ளும்போது, 55 ஆயிரம் ரூபாயை கொடுத்து இருப்பதாக தெரிகிறது. ஆனுல் அதனுடைய Market value 25 ஆயிரம் ரூபாய் தான். இந்த மாதிரி பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இப்படி பணம் வியர்த்தமாவதை நினைக்கும்போது ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் ஏற்படாமல் கண்காணித்து வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே உள்ள நெசவாளர்களுக்கு பல லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக நெசவாளர்களுக்கு ஸ்ரீவில்லிப்புத்தூரிலே வீடுகள் கட்டப்பட்டன. ஆனுல், நாளது வரையில் அந்தக் காலனியில் நெசவாளர்கள் குடியேறவில்லை. இதற்கு என்ன காரணம். இந்த மாதிரி பல சம்பவங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் அவ்வப்பொழுது கவனித்து ஆவன செய்யவேண்டும்.

பல பால் பண்ணைகளிலே மோசடிகள் எல்லாம் நடக்கின்றன. இந்த நிலைமை இருக்கவே கூடாது. இதற்கு மிகமிக கடுமையான தண்டனைகள் கொடுக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள்தான் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு கடன் வழங்கக் கூடிய நிலையிலே இருந்து கொண்டு இருக்கின்றன. நல்ல முறையிலே லேவா தேவி சட்டங்கள் எல்லாம் வந்த பிறகு,

இந்த சங்கங்களைத்தான் கிராம விவசாயிகள் நம்பி வாழ்கின்றார்கள். இவைகள் தான் நல்ல முறையிலே ஒழுங்காக இருக்கின்றன. அதில் கூட கூட்டுறவு இயக்கத்தின் பெயரிலே பல தவறான காரியங்கள் நடக்கிறது என்றால் அதற்காக வருந்த வேண்டியிருக்கிறது. இனிமேல்பட்டாவது அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் இடம் இல்லாமல் மேலே இருக்கின்ற ரிஜிஸ்ட்ரார் அவர்களும் D.R. அவர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : இப்போது என்னிடத்தில் 15 அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் 10 நிமிஷம் தான் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படியே கொடுத்துக்கொண்டு போனால் நேரம் குறையும். ஐந்து நிமிஷம், 4 நிமிஷம் தான் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகையால் இனிமேல்பட்டு கேட்காதீர்கள். கேட்டால் எனக்கு ஆட்சேபம் இல்லை. பேசும் நேரம் 5 நிமிஷம், 4 நிமிஷம் என்று குறையும். இன்று $1\frac{1}{2}$ மணிக்கு அசெம்பிளி முடிந்து பிறகு 3 மணிக்கு ஆரம்பமாகி 5 மணி வரையில் நடக்கும்.

Sri R. KRISHNASWAMI NAIDU : கனம் சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு துறை பொதுவாக நம் நாட்டிலே நம்முடைய ராஜ்யத்தில் தான் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சொன்னது போல் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு இந்த கூட்டுறவு துறைதான் ஒரு புகலிடம் போல் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கூட்டுறவுத் துறை கிராம மக்களுக்கு பஞ்சதரு மாதிரி உதவி வரும் ஒரு ஸ்தாபனம் ஆகும்.

(Sri A. Govindaswamy in the Chair.)

அப்படிப்பட்ட இந்த துறை நல்ல முறையில் குற்றம் குறையின்றி நடைபெறச் செய்யவேண்டியது அரசாங்கம். இலாகா அதிகாரிகள் இவர்களுடைய பொறுப்பாக இருந்தாலும் கூட கிராமப் பகுதியிலுள்ள முக்கியஸ்தர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் அந்தந்த பகுதியிலுள்ள இந்த கூட்டுறவு சங்கங்கள் எப்படி செயல்பட்டு வருகின்றன என்பதை கவனித்து அவைகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு வந்தால் எவ்விதமான குறைபாடுகளும் இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளலாம். மற்றும் உத்தியோகப் பற்றற்றவர்களுக்கும் இந்த சங்கங்கள் நல்லபடி இயங்கும்படியாக பார்த்துக் கொள்வதில் பொறுப்பு உண்டு என்பதைச் சொல்ல நான் விரும்புகிறேன். அப்படிச் செய்தால் அநேகமாக இந்தத்துறையில் எவ்வித குறைபாடும் இல்லாமல் செய்ய முடியும் என்பது என் திடமான நம்பிக்கை. முக்கியமாக என்னுடைய தொகுதியில் ஒரே கூட்டுறவு மேற்பார்வை யூனியன் தான் இருக்கிறது. சிறிய, பெரிய கடன் கொடுக்கும் சொஸைடிகளாக சேர்ந்து 85 சங்கங்கள் இருக்கின்றன. ஒரு வருஷத்தில் கிட்டதட்ட 25 லட்சம் ரூபாய் லேவாதேவி செய்யப்படுகிறது. இந்த சங்கங்களில் எந்த ஒரு வருஷத்திலாவது என்னுடைய சக அங்கத்தினர் குறிப்பிட்டது போல் சில நிர்வாகஸ்தர்கள் தங்களுக்கு வேண்டிய பணத்திற்காக பிறர்மேல் கடன் வாங்கி எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. அத்தகைய குறைபாடுகள் இந்தப் பகுதியில் இல்லை என்று உறுதியாக என்னால் சொல்ல முடியும். ஆகவே உத்தியோகப் பற்றற்றவர்கள் அதிகாரிகள் தான் கவனிக்கவேண்டுமென்றிருக்காமல் குற்றங்குறைகள் இல்லாமல் தாங்களும் பார்த்துக்கொண்டால் நிச்சயமாக இந்த இலாகாவில் குறைகள் நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே இலாகா அதிகாரிகளோ அரசாங்கமோ கவனித்துக் கொள்ளும் என்று நம் போன்றவர்கள் கவலை இல்லாமல் இருந்துவிடக்கூடாது. அப்படி இருந்தால் தான் இந்த இலாக்கா சரிவா

25th April 1960] [Sri R. Krishnaswamy Naidu]

பணி புரிய முடியும். இதில் அரசாங்க இலாகா அதிகாரிகள்தான் இந்த சங்கங்களை கவனித்துக் கொள்ளவேண்டும். உத்தியோகப் பற்றற்றவர்களுக்கு இதில் பொறுப்பு இல்லை என்று இருக்கும்படியான நிலைமை இருந்தால் பிறரைச் சார்ந்து வாழும் மனப்பான்மை சமுதாயத்தில் அதிகமாக வளர்ந்துவிடும். தங்களுடைய சொந்த பலத்தில் நின்று அவரவர்கள் சிந்தனையில் உருவாகும் திட்டங்களை வைத்து தங்களைத் தாங்களே பரிபாலித்துக் கொள்ளக்கூடிய அளவில் கிராம ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கூடிய அளவிலே கூட்டுறவு சங்கங்களும் பஞ்சாயத்து முறையும் விஸ்தரிக்கப்படுகிற இந்த நாளில் பொது மக்கள் எத்துறையிலும் பூரண பொறுப்பு வகிக்கும்படியாக தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதோடு கூட (credit) யூனியன்கள் இப்போது நிறுவப்பட்டு உள்ளன. எப்படி கிராம விவசாய பாங்குகள் அதிகரித்து இருக்கின்றதோ அதேபோல (credit) யூனியன்களை அதிக இடங்களுக்கு வேண்டுமென்று விரும்பினாலும் இலாகா பூர்வமாக மேற்பார்வை செய்யக்கூடியவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் சரிவர செயல்பட்டு வரக்கூடிய சங்கங்கள் இருக்கும் நிலையிலே (credit) யுனியன்கள் அவஸ்யம் இல்லை என்ற நிலைமையை உறுவாக்கும்படிச் செய்யவேண்டும். அப்படி இல்லையேல் சரிவர செயல்பட்டுவரும் இடங்களில் ஒரு Supervisor, செக்ரட்டரி போன்ற அதிகாரிகள் கொடுக்கும் உதவியைக் கொண்டு இருக்க வேண்டுமென்ற நிலை இருந்தால் அப்படிப்பட்ட அதிகாரிகளையே சார்ந்து வாழும் மனப்பான்மை வளர்ந்துகொண்டு வரும் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். எங்கே கூட்டுறவு சங்கங்கள் சரிவர இயங்கவில்லையோ அவ்விடங்களில் மட்டும் கூட்டுறவு (credit) யூனியன்களை வைக்கலாம். பூரண கடன் வசதி திட்டம் அதாவது (Full Finance Scheme) என்பதைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை மேன்மேலும் மாகாணத்தில் விஸ்தரிக்க ஒவ்வொரு சமுதாய நல திட்ட பகுதியிலும் கிராமப் புறங்களிலும் விவசாய மக்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம்தான் தேவையான எல்லா விதமான கடன்களையும் கொடுக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒத்துக் கொள்ளுகிறோம். நிலம் இல்லாத ஏழைகளுக்கு கூட இந்த கடன் கொடுப்பதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய பாங்கிகளுக்கும் guarantee கொடுத்திருக்கிறது. இது மிக மிக வரவேற்கத்தக்க கொள்கையாகும் என்றாலும் மத்திய பாங்கி நிர்வாகிகள் அரசாங்கம் 10 சதவிகிதம் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பு ஏற்றுக் கொள்ளவும் உறுதி கொடுத்து இருந்தும் கூட இதுவரை அவர்கள் செயல்பட்ட முறையிலேயே போய்க் கொண்டு இருக்கிறார்கள். குணதோஷம் சொல்ல வரவில்லை. இந்தப் பணத்திற்கு தாங்களே பாதுகாவலர்கள் என்ற அதிகமான பொறுப்பை அவர்கள் மனதில் வைத்துக் கொண்டு இப்போது நம் முன்னால் உள்ள திட்டங்களுக்கு பிரதான்யம் கொடுக்காமல் அவர்கள் போய்க் கொண்டிருந்த வழியிலேயே அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விரைவில் நிலம் இல்லாத விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும்படியான அளவுக்கு மனம் மாறும் என்று நான் சந்தேகப்படுகிறேன். அவர்கள் இந்தக் கடனை சீக்கிரத்தில் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். Marketing சொஸைடிகள் பிளாக்கு ஒன்றுக்கு ஒரு சொஸைடி வீதம் ஏற்படுத்த திட்டம் இருப்பதாக தெரிகிறது. இவ்வளவு வேகமாக விஸ்தரிப்பது உசிதமா அல்லது தேவை இருக்கிறதா என்று நான் ஐயப்பாடு உடையவனாக இருக்கிறேன். ஆகவே இரண்டு சமுதாய நலத் திட்டங்களுக்கு ஒரு சொஸைட்டி வீதம் ஏற்படுத்தலாம். அதிகமான "marketing" சொஸைடிகளை ஏற்படுத்தும்படியான சூழ்நிலை அந்தந்த பகுதியில் இருக்கின்றதா என்பதைத் தெரிந்து கொண்டு marketing சொஸைடிகளை நாம் விஸ்தரிக்க வேண்டும். வேலை இல்லாமல் இந்த சொஸைடிகளை ஏற்படுத்தினால் இவைகள் சரிவர வேலை செய்யவில்லை என்ற நிலைமையைத்தான் உண்டுபண்ணிக்கொண்டு போக முடியும். இது சரியல்ல. நம்முடைய கொள்கை எப்படி இருந்தாலும் இந்த விஷயங்களை எல்லாம் மனதில் வைத்து இத்தகைய சொஸைட்டிகளை நிறுவும் வேலையை மேற்கொள்ள வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். நில அடமான பாங்கி சம்பந்தமாக நல்ல வகையில் அவை விவசாயிகளுக்கு பலன் அளிக்கக் கூடியதாய் இருந்தாலும் ஜமீன் பிரதேசம் சர்வே ஆகாத, **settlement** ஆகாத பிரதேசங்களில் எல்லாம் இன்னும் சரிவர பயன் அளிக்கவில்லை. என்றாலும் இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் தங்களுடைய நிலத்தை சர்வே செய்து அதற்கு ஆதாரம் கொடுத்தால் பாங்கிகளில் கடன் வசதிசெய்து கொடுக்கிறார்கள். இதற்கான வகையில் விவசாயிகள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நில அடமான பாங்கு சம்பந்தப்பட்ட மட்டில் நிலத்திற்கு அவர்கள் கடந்த பல வருஷங்களுக்கு முன்பு இருந்த மதிப்பை வைத்துத்தான் கடன் அளிக்கிறார்கள். அதனால் கடனாக அவர்கள் கொடுக்கிற தொகையைக் கொண்டு முன் கடனை அடைக்கவோ திட்டமிட்டபடி நிலத்தில் அபிவிருத்தி செய்யவோ விவசாயிகளால் முடியவில்லை. இதன் காரணமாக விவசாயிகளுக்கு நில அடமான பாங்குகளிடத்தில் ஒரு தேட்டம், ஒரு விருப்பம் இல்லாமல் இருக்கிறது. ஒவ்வொரு நில அடமான பாங்க் மகா நாட்டிலும் பலப்பல தீர்மானங்கள் போடப்படுகின்றன. அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லப்படுகிறது. நிலத்தின் மதிப்பு நாளுக்கு நாள் மிக அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கிறது. நிலத்திற்கு இப்போதுள்ள அடிப்படையில் கடன் கொடுக்க வேண்டும் என்று எத்தனையோ தீர்மானங்கள் போட்டும்கூட அவை ஏட்டளவில் இருக்கின்றனவே தவிர அதற்கு ஒரு முடிவு காணவில்லை. ஆகவே இனியும் காலதாமதம் செய்யாமல் வெகு சீக்கிரம் நிலத்தின் இப்போதுள்ள மதிப்பின் அடிப்படையில் கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு பண்ணை ஏற்படுத்தும் விஷயத்தில் மிகுந்த காலதாமதம் ஆகி வருகிறது. சீக்கிரமாக அவற்றை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு பயிற்சி இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் கூடுமான வரையில் கிராமாந்திர முறையில் பயிற்சியை அளிப்பதற்கு திட்டவட்டமாக பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக பாடசாலைகளில் சரியான முறையில் பாட புத்தகங்கள் கூட வைக்கவும் எழுத வேண்டிய நிலைமை இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

உத்தியோகப்பற்றற்றவர்களைக் கொண்டு அமைக்கப்படுகிற கூட்டுறவு மேற்பார்வை கழகங்கள் மிகவும் அவசியம். அதைக் கூட எடுத்து விடலாம் என்கிற அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கழகங்களைப் போல இது வரையில் திறமையாக தங்கள் பணியை ஆற்றிவரக் கூடிய உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனம் வேறு இருக்க முடியாது. ஆகவே அந்த யோசனையை அடியோடு களைந்து எறிந்து விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சூப்ரவைசர்களை மாகாண சர்வீசில் இணைப்பதா, மாகாண பாங்க் காரியதரிசிகள் சேவையை மாகாண சர்விசோடு இணைப்பதா என்பது பிரச்னை. சமீபத்தில் இது பற்றிய விவரங்கள் விவாதத்திற்கு வந்தது. ஜில்லா வாரியாக இந்த நிர்வாகத்திலேயே இவைகள் இருந்துகொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் சரிவர செயல்பட முடியாது என்கிற என் யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய பாங்கில் சர்க்கார் அதிகாரிகளுடைய சேவை கோரப்பட்டால் நாம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஏறக்குறைய உத்தியோகப் பற்றற்றவர்கள், பொது மக்கள் சார்பில் காரியங்களை கவனிக்கக் கூடிய அளவுக்கு ஊக்கம் காட்ட வேண்டும். மத்திய பாங்க் காரியதரிசியாக ஸி.எஸ்.ஆர். இருப்பதா, டெபுடி ரிஜிஸ்ட்ரார் இருப்பதா என்றால் சர்க்கார் அதிகாரிகள் யோசனை சொல்லலாமே தவிர இன்னாரைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது சரியாகாது. அவர்களுடைய காரியத்தில் கூடுமான வரையில் தலையிடாமல் இருப்பது தான் சரியானதாக ஆகும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

25th April 1960] [Sri R. Krishnaswamy Naidu]

கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டம் வெகுவாக வளர்ந்து வரவில்லை. அதற்காக ஓரிடத்தில் வேலை முடிந்த பிற்பாடு உடனே இன்னொரு இடத்தில் வேலையைத் தொடங்குவதற்கு ஏற்றபடி பூரணமான சாதன வசதிகளுடன் வீடுகளைக் கட்டித் தரக்கூடிய ஒரு குழுவை அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். நேரம் இல்லாத காரணத்தினால் இதைப் பற்றி விரிவாகப் பேச நான் விரும்பவில்லை. எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRIMATHI P.K.R. LAKSHMIKANTHAM : கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும்படியான இந்த மானியத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே சமுதாயத்தில் அதிகமான ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அந்த ஏற்றத்தாழ்வுகளை முறியடிக்க வேண்டுமென்று நம்முடைய க்ஷேமநல அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. அதற்கு மிகவும் உதவியாக இந்தக் கூட்டுறவு முறையானது இருக்கும் என்பது என் கருத்து. கூட்டுறவு முறையிலே எல்லாத் தொழில்களையும் நடத்த வேண்டும். இன்றைய தினம் குடிசைத் தொழில்கள், மற்றும் சில முக்கியமான சிறு தொழில்கள் எல்லாம் கூட்டுறவு முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. அதுவும் முக்கியமான, மிகவும் கீழான நிலைக்குப் போய்க் கொண்டிருந்த கைத்தறித் தொழிலை எடுத்துக்கொண்டு அரசாங்கம் அதற்குத் தக்க பாதுகாப்பு அளித்து உயர்த்திவிட்டது. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அதற்கு ஓர் புத்துயிர் அளித்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் கூட்டுறவு சங்கங்களின் கீழ் எல்லா கைத்தறி நெசவாளர்களையும் கொண்டு வரவேண்டும் என்றால் அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளை நாம் அகற்றினால் தான் இன்னும் அதிகமான நெசவாளர்களை இந்த கூட்டுறவு சங்கங்களின் கீழ் நாம் கொண்டு வர முடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும். காரணம் இப்போது மதுரையில் 1951-க்கு முன்பு சொந்த மூலதனத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் சங்கங்களும் இருக்கின்றன. ஆனால் அதற்குப் பிற்பாடு செஸ் நிதியின் மூலமிருந்து ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் சங்கங்களும் இருக்கின்றன. ஆனால் மூலதனத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களை விட செஸ் நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு சிரமம் அதிகமாக இருக்கின்றன. ஒரு தறிக்கு 300 ரூபாய் கொடுக்கவேண்டும் என்பது நம் சர்க்கார் உத்திரவாக இருந்தாலும் கூட—மதுரையைப் பற்றிமட்டும் சொல்கிறேன்—ஒரு தறிக்கு 150 ரூபாய்க்கு மேல் வழங்கப்படுவதில்லை. இதன்காரணமாக சிறுசிறு சங்கங்கள் எல்லாம் இயங்குவது சிரமமாக இருக்கிறது. நெசவுத் தொழிலைப் பற்றி உங்களுக்கு எல்லாம் தெரியும். நெசவு செய்து வந்தவுடனே நெசவாளர்களுக்குக் கூலி கொடுத்தாக வேண்டும். கூலி கொடுக்காது போனால் மாஸ்வீவரிடம் போய் சேர்ந்துவிடுவார்கள். அதன் பிறகு மறுபடியும் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் அவர்களைக் கொண்டுவருவது சிரமமாக இருக்கும். இப்பேர்ப்பட்ட சிக்கல்களை நீடிக்கவிடக்கூடாது. ஆகவே இந்தச் சங்கங்கள் லகுவான வகையில் கடன் பெறவும், மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அரசாங்க அதிகாரிகள் உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது புதிதாக பாங்கர்கள் தாங்களாகவே ஏற்படுத்திக்கொண்ட ஒரு கட்டுப்பாட்டின் மூலம், எந்த அளவுக்கு ஒரு சங்கத்தில் ஸ்டாக் இருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் கடன் கொடுக்கப்படும் என்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. அந்த விதிகளால் சங்கங்களுக்கு பணம் கிடைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒருவித சலுகை இந்த விதிகளால் கிடைக்கலாம். ஆனால் செஸ் நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட சங்கங்களுக்கு அது தொல்லைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இம்மாதிரியான முறைகளால் ஒரு திட்ட வட்டமான வளர்ச்சி பெற முடியாமல் போய்விடும் என்பது என் கருத்து. கூட்டுறவு சங்கங்களுக்குப் பண உதவி அளிக்கும்போது கண்காணிப்பு செய்வதும் அவசியம். சிறு தவறுகள் ஏற்பட்டாலும்

[Srimathi P. K. R. Lakshmikantham] [25th April 1960]

உடனடியாகத் திருத்தவேண்டும். அதை விட்டு கடன் கொடுப்பதில் சிக்கலை உண்டாக்கக் கூடாது. அடுத்தபடியாக பட்டு நூல் எடுக்கும் யூனிட் ஒன்றை கும்பகோணத்தில் ஏற்படுத்தப்போவதாக அறிக்கையில் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எவ்வளவு சீக்கிரமாக ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அதை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுரையில் கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நூல் விலை ஏறிக்கொண்டே போகிறது. ஆகையால் கூட்டுறவு முறையில் நூற்பு மில் ஒன்றை மதுரையில் சீக்கிரமாக ஏற்படுத்தவேண்டும். கூட்டுறவு நூற்பு மில்லில் உற்பத்தி செய்யப்படுகிற நூல்களை எல்லாம் அடக்க மான விலைக்கே கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்து உதவவேண்டும். அப்படிச்செய்தால் தான் நெசவாளர்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வீடு அடமான பாங்கை நாம் புதிதாக ஏற்படுத்தியிருக் 10:30 a.m. கிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு என் நன்றி. ஆனால் இப்போது வீட்டு அடமான பாங்கியிலே அதிகப்படியான பணம் 5,000 ரூபாய்தான் கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. இது அவ்வளவு பொருத்தமாக இருக்கமுடியாது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இன்றைக்கு சிமெண்ட் விலையும், இரும்பு விலையும் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஒருவீட்டைப்பழுது பார்க்கவேண்டுமென்றாலும், மேல் மாடி கட்டவேண்டுமென்றாலும் அதிகமான பணம் செலவாகிறது. ஆகையால் இப்படிக் கொடுக்கப்படும் 5,000 ரூபாய் என்றிருப்பதைப் 10,000 ரூபாயாக உயர்த்தினால் நன்மையாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக நம்முடைய கூட்டுறவு சங்கங்களை அதிகப்படுத்துவதன் மூலம் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கமுடியும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கூட்டுறவு சங்கத்திலே அதிகமான கண்காணிப்பு இருக்கவேண்டும். மக்கள் மனதிலே கூட்டுறவு சங்கங்களைப் பற்றி உணரும்படியான முறையில் நம்முடைய வேலைகள் நடைபெற வேண்டும். கூட்டுறவு இயக்கத்தை மக்கள் உணர்ந்தால் தான், கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மாறினால்தான், நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு உண்மையான பலன் ஏற்படும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாம் அங்கங்கே கருத்தரங்கம், நடத்தவேண்டும். நாம் அங்கங்கே நடத்துகின்ற கருத்தரங்கிலே உத்தியோகஸ்தர்களும், உத்தியோகப் பற்றற்றவர்களும், அந்தந்த ஊரிலே இருக்கக்கூடிய பிரமுகர்களையும் மற்றவர்களையும் அழைக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் அங்கு சொல்லுகின்ற கருத்துக்களை தெரிந்துக் கொண்டு நல்லமுறையில் நடப்பதற்கு ஏதுவாக இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் சொன்ன பிரகாரம், இந்தக் கூட்டுறவு சங்கங்கள் நல்லபடி பரவவேண்டுமென்றால் இந்தக் கூட்டுறவு சங்கங்களினால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி பள்ளிகளிலே ஆரம்பப் படிப்பிலேயே போதிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தவிர, மதுரையில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்கள் எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. P. SUBRAMANIAM: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் கைத்தறிகளுக்கு 6 புது

25th April 1960] [Sri M. P. Subramaniam]

காசுகளும், கதருக்கு 18 பது காசுகளும் கழிவுத் தொகை கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் கைத்தறிக்கு கொடுக்கக்கூடிய சலுகைகள் எல்லாம் எல்லா கைத்தறி நெசவாளர்களுக்கும் போய்ச்சேருவதில்லை என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். கூட்டுறவு சங்கங்களின் மூலம் உற்பத்தியாகும் துணிகளுக்குத் தான் இந்தக் கழிவுத்தொகை சேருகிறது. ஆனால் கதரைப் பொறுத்த வரையில் தனிப்பட்ட முறையிலே உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கும் 18 காசுகள் போய்ச் சேருகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித் தால் பொறுத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன். இது மாத்திரம் அல்ல. கதரை எடுத்துக்கொண்டால் இல்லாத ஒரு பிரச்னைக்கு நாம் பரிகாரம் காண்கிறோம். ஆனால் கைத்தறி பிரச்னையோ ஏற்கெனவே உள்ள ஒரு பிரச்னை. கைத்தறிகளுக்கு பல சட்டங்கள் மூலமாக கழிவுத் தொகையை நிர்ப்பந்தத்தின் பேரில் நாம் கொடுக்கிறோம். அந்த விதத்தில் பார்க்கும்போது இந்தப் பாகுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் கதரை எடுத்துக்கொண்டால் மேலும் மேலும் உற்பத்தி பெருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. ஆனால் நிர்ப்பந்தம் ஒன்றும் கிடை யாது. ஆனால் கைத்தறியைப் பொறுத்தவரையில் பல ஆண்டு காலமாக பரம்பரைத் தொழிலாக நடந்துக் கொண்டுவருகிறது. லட்சக்கணக்கான மக்கள் அவர்களுடைய வாழ்க்கையையே இதற்காக அர்ப்பனித்திருக் கிறார்கள். ஆகையால் இல்லாத ஒரு பிரச்னைக்கு தீர்வு காணுவதற்குப் பதிலாக, நூற்றாண்டு காலமாக இருக்கும் ஒரு பிரச்னைக்கு நாம் கூடுமான அளவில் பரிகாரம் காணுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இந்தக் கழிவுத் தொகை யையே கைத்தறியாளர்கள் நம்பி வாழ முடியாது என்று. அவர் அப்படிச் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் இதில் இருக்கும் கஷ்டம் என்னவென்றால் கூட்டுறவு சங்கங்களில் இருக்கும் நெசவாளர்களுக்குத்தான் இந்தக் கழிவுத் தொகை கொடுக்கப்படுகிறது. ஆனால் மற்றத் நெசவுத் தொழிலாளர்களுக்கு இந்தக் கழிவுத் தொகை கொடுக்கப்படவில்லை. இந்தக் கூட்டுறவு சங்கங்களில் 50 சதம் தான் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். மற்ற 50 சதம் நெசவாளர்கள் இந்தக் கூட்டுறவு சங்கங்களில் இல்லை. ஆகவே அரசாங்கம் கொடுக்கப் படும் இந்த சலுகை அவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகவில்லை. ஏனென்றால் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது, இந்தக் கைத்தறி நெசவாளர் களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் பிரசாரம் செய்வதே அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறதென்ற வாதத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த நெசவாளர்களுக்கு இந்தக் கழிவுத் தொகையினால் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆதலால் இதில் ஒரு பாகுபாடு தான் ஏற்படுகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக நெசவாளர்களுக்கு நூலை நல்லமுறையில் கொடுப்ப தற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப் பொழுதுதான் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்டிருந்த ஒரு நிலைமையை சமாளித்துக்கொள்ளமுடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏற் கெனவே கூட்டுறவு முறையில் நூல் ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக் கின்றன. அவ்விதமாக அதிகமான ஆலைகளை ஏற்படுத்தி நல்ல முறையில் கொடுத்தால் நாளாவட்டத்தில் கழிவுத் தொகையைக் குறைப்பதற்கு வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு பணம் ஒதுக்கப்படவேண்டும். 1,000 த்திற்கு மேற்கொண்ட வீடுகள் கட்டு வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். இந்த ஆண்டிலே அது முடியா

விட்டால் அடுத்த ஆண்டிலே ஸ்பில் ஓவர் ஸ்கீம் எடுத்துக்கொள்ளப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்.

சேலத்தில் அம்மாபேட்டை வீவர்ஸ் சொசைட்டி இருக்கிறது. அங்கு 200 வீடுகள் கட்டுவதற்கு திட்டம் இருக்கிறது. ஆனல் இந்த சொசைட்டியிலே நெசவாளர்கள் அல்லாதவர்களும் இடம் பெற்றிருக்கிருர்கள். நெசவாளர்கள் சமுகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம், ஆனல் உண்மையிலே நெசவு வேலையில் ஈடுபட்டவர்களுக்கு வீடு கிடையாது. இதிலும் இந்தக் கட்சிப் பாகுபாடுகள் வகுத்து இந்தத் தொழிலில் உள்ளவர்களுக்கு வீடு கிடைக்காத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு டாக்டர்களும், வக்கீல்களும், இதற்கு முன்பு சொந்த வீடு வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் வீடுகள் கிடைத்திருக்கின்றன. ஆனல் கூலி வேலை செய்து இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வீடுகள் கிடையாது. இதைப்பற்றி பல சந்தர்ப்பத்திலே ரிஜிஸ்டராருக்கும், டெபுடி ரிஜிஸ்டராருக்கும், அமைச்சர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட, இந்த விஷயங்கள் இன்னும் கவனிக்கப்படவில்லை. ஆகையால் இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம் என்னவென்ருல் உண்மை நெசவாளர்களின் நன்மையைக்கருதித்தான் இது கொண்டுவரப்பட்டது. ஆனல் இந்த நோக்கத்திற்குப் புறம்பாக இம்மாதிரி காரியங்கள் நடைபெறுகின்றன.

அடுத்தபடியாக கிராமங்களிலே கடன் கொடுப்பதற்காக கிரடிட் சொசைட்டிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது எவ்வாறு இயங்குகிறது என்று பார்ப்போமானல் பல இடங்களில் நல்லமுறையில் இயங்கவில்லை. சட்ட சபையில் கூட இதைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் கேள்விகள் போடப்பட்டன. விவாதத்திலும் இதைப்பற்றி பேசப்பட்டது. சேலத்தில் இருக்கும் ஒரு கூட்டுறவு மார்க்கடிங் சொசைட்டி மீது பல புகார்கள் வந்தன. அரசாங்கத்தால் இந்த சங்கத்திற்கு சிலோனுக்கு மிளகாய் ஏற்றுமதி செய்வதற்கு பர்மிட் கொடுக்கப்பட்டது. ஆனல் இந்தப் பர்மிட் துஷ் பிரயோகம் செய்யப்பட்டு 80ஆயிரம் ரூபாய்வரைக்கும் சாப்பிட்டு விட்டார்கள். இதைப்பற்றி அரசாங்கம் விசாரித்தும் கூட பின்னர் இதில் ஒன்றும் இல்லை என்று கைவிடப்பட்டுவிட்டது. இம்மாதிரி என்னுடைய தொகுதியிலே ஆத்தூர் தாலூக்காவில் கடம்பூரில் ஒரு கூட்டுறவு சொசைட்டி இருக்கிறது. இந்தக் கூட்டுறவு சொசைட்டி தலைவரும் செயலாளரும் சேர்ந்து கடன் இல்லாத ஆட்களின் பேரில் கடனை வாங்கி இல்லாத சர்வே நம்பரைக் காட்டி, போடாத கையெழுத்தைப்போட்டு பணத்தை வாங்கிவிட்டார்கள். சென்ட்ரல் பாங்கைப் பொறுத்தவரையில் பணம் வந்தால் போதும், தவரைப்பற்றி கவலை இல்லை அவர்களுக்கு. பிறகு இருவரும் சேர்ந்து பணம் கொடுத்துவிட்டார்கள். இந்த விஷயம், ரிஜிஸ்டாருக்கும், டெபுடி ரிஜிஸ்டராருக்கும், தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக சி. எஸ். ஆர். கூட அந்த கிராமத்திற்கு 5, 6 தடவை வந்து போனுர்கள். ஆனல் நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. அப்படி காலம் தாழ்ந்தும்கூட ஒன்றும் கவனிக்கப்படவில்லை என்ருல் கூட்டுறவு சங்கங்கள் மீது எப்படி நம்பிக்கை இருக்க முடியும் என்பதை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறிய சொசைட்டிகளில்தான் இவ்வளவு கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதால் பெரிய சொசைட்டிகள் இருந்தால் நல்லது என்று விவசாயப் பாங்குகள் தமிழ் நாட்டில் ஆரம்பித்தார்கள், ஏறக்குறைய 100 பாங்குகள் தமிழ் நாட்டில் ஆரம்பித்தார்கள் இவ்வளவும், பெரும்பாலும் நன்கு இயங்குகிறது என்றுதான் நான் கருதுகிறேன். திடீரென்று டெல்லியில் உள்ள நாஷனல் டெவெலெப்மெண்ட் கௌன்ஸில் அல்லது யாரோ சொன்னுர்கள் என்பதற்காக ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற கொள்கை சிறந்தது என்று மேலும் பெரிய சங்கங்கள் அமைப்பதை நிறுத்தி விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். புதியபாங்குகள் திறக்கப்படவில்லை. ஆனல் அதை மக்கள் விரும்பிக்கேட்கிருர்

25th April 1960] [Sri M. P. Subramaniam]

கள் என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். கூட்டுறவு இயக்கத்தில் அங்கம் வகிக்கக்கூடியவர்கள் தரமான ஆட்களாக இருக்கவேண்டும், அப்படி எல்லாக் கிராமங்களிலும் கிடைப்பது அரிதாயிருக்கிறது. மூன்று நான்கு கிராமங்களுக்குச் சேர்ந்து ஒரு பெரிய சொஸைட்டி இருந்தால் நல்ல தரமான ஆட்கள் கிடைப்பதோடு, மற்றும் இலவசமாக சேவை செய்ய இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு அதிகாரியை நியமிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. பெரிய சங்கத்தில்தான் 50, 100 ரூபாய் கொடுத்து ஒரு மானேஜரைப் போன்று ஒரு அதிகாரியையும் ஏற்படுத்த முடியும். ஆகவே, அகில இந்திய முறையில் இந்தக் கொள்கையை எல்லோரும் பின்பற்றி யாக வேண்டுமென்று சொல்வது தவறு. அமைச்சர் அவர்களே குறிப் பிட்டிருக்கிறார்கள், கூட்டுறவுத் துறையில் சென்னைதான் முதலில் நிற்கிறது என்று. ஆகவே நமது ஆலோசனையைத்தான் அவர்கள், மற்றவர்கள் கேட்கவேண்டுமே தவிர அவர்கள் ஆலோசனையைப் பெற்று நாம் இயங்க வேண்டியதில்லை. ஐந்து குழந்தைகளைப் பெற்ற தாயார் இப்பொழுது தான் மணமான பெண்ணிடம் மகப்பேறு பற்றி ஆலோசனை கேட்பது போன்றுதான் இது இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.) ஆகவே, நாம் நமது கொள்கையை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நில அடமான பாங்கைப் பொறுத்த வரையில், நான் இங்கே வற்புறுத்தி யிருக்கிறேன். 1939-க்கு நிலத்திற்கு என்ன பெருமானம் இருக்கிறதோ அதில் 50 சதவீதம் கடன் கொடுப்பது என்பது பத்தாம் பசலிக் கொள் கையாக இருக்கிறது. முன்பு நூறு ரூபாய் என்று விலையிருந்த நிலம் இன்று 500 ஆக இருக்கிறது. ஆகவே முன்பு இருந்த பெருமானத்தின் இவ்வளவு சதவிகிதம் என்று கொடுப்பது சரியல்ல. இப்பொழுதுள்ள நிலைமையை அனுசரித்துச் செய்ய வேண்டும். பிறகு, விண்ணப்பம் போட் டால் ஒன்று, இரண்டு வருடங்கள் ஆகிறது. அவை பைசலாவதற்கு. இப்பொழுதுள்ள நில அடமான பாங்க் விதிமுறைகள் விவசாயிகளுக்கு எந்த விதமான பலனும் அளிப்பதில்லை. அதை மாற்றி யமைத்தால் ஒழிய விவசாயிகளுக்கு அதனால் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. அடமானத்திற்காக நிலத்தின் விலையில் 25 சதவீதத்திலிருந்து 45 சதவீதம்வரை உயர்த்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்த சந்தர்ப்பத்தில் எதற்குப் பொருந்தும் என்றும் தெரியவில்லை. அதை சற்று விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக, ஆத்தூர், சேலம் போன்ற இடங்களில் கூட்டுறவு ஹௌஸ் பில்டிங் சொஸைட்டிகள் இருக்கின்றன. அதில் நாலில் ஒரு பங்கு ஷேர் தொகை கட்டவேண்டுமென்று சொல்லியிருப்பது அதிகமாகும். 5,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் 1,250 ரூபாய் ஷேர் தொகை கட்ட வேண்டும். அப்படி அந்த 1,250 ரூபாய் கையில் இருந்தால் அதை வைத்துக்கொண்டு எப்படியாவது ஒரு சிறிய வீடாவது கட்டிவிடலாமே. ஆகவே, அதைக் குறைத்து 10 சதவிகிதம் பங்குத் தொகை கட்டினால் போதும் என்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும். பின்னர், கூட்டுறவு விவசாயப் பண்ணைகளைப் பற்றி சொல்லும்போது, ஏற்கெனவே 21 கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் திறப்பது என்று இருந்து 80 சங்கங்கள் திறந்து விட்டோம். அது பெரியதொரு முன்னேற்றம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (மணியடிக்கப்பட்டது.) அந்த 80 சங்கங்களும் இயங்கு கிறதா என்றால், இல்லை என்று தான் நினைக்கிறேன். எங்கள் தாலூகாவில் இரண்டு மூன்று சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பெயர ளவிற்குத் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு ஆனால் அங்கு இது வரையில் "அ" ஆ" கூட ஆரம்பிக்கவில்லை. பெயரள வில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்று தஞ்சைக் கோயில் நிலங்களை கூட்டுறவுப் பண்ணை முறைப்படி சாகுபடி செய்து வருகிறார்கள் என்று சொன்னார்கள். அதன் பூரா விவரமும் தெரிய வேண்டும். வட ஆற்காட் டில் ஒரு கூட்டுறவு சொஸைட்டியைப் பார்த்தேன். அமைச்சர் வெங்கட் ராமன் அவர்கள் அதைத் துவக்கி வைத்ததாகச் சொன்னார்கள். அது கூட்டுறவு சொஸைட்டி என்ற பெயரால் தனிப்பட்ட நபர்களின் நன்மைக்கா வே அது செயல்படுகிறதே தவிர அது உண்மை கூட்டுறவு சொஸைட்டியாக இயங்கவில்லை, அங்கு ஆப்ஸன்டி லாண்ட் லார்ட்ஸ் இருக்கிறார்கள், இ

சென்னையில் இருக்கிறவர்களையும் உறுப்பினர்களாக வைத்து இது நடத்தப் படுகிறது. விவசாயக கூட்டுறவுப் பண்ணை என்று வைத்துக்கொண்டு அரசாங்க சலுகைகள் பெறுவதற்குத் தான் அது அமைக்கப்பட்டிருக்கிறதே தவிர கூட்டுறவின் உண்மை பலன் அதில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறவர் களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லிவிட்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மான்யக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஏனெனில், மதுரை ஜில்லாவில் நானும் ஒரு கூட்டுறவாளன் என்ற முறையில் ஒரு மாத காலத்திற்கு கூட்டுறவு கருத் தரங்கில் சாங்கோபாங்கமாக மணிக்கணக்கில் ஆங்காங்கே பேசி வந்திருக்கி றேன். ஆகவே இதைப்பற்றி பேசுவதற்கு எனக்கு கருத்துக்களைத் தேடிஅலைய வேண்டிய அவசியமில்லை. பல பத்திரிகைகளை புரட்டிப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. புள்ளி விவரங்களைத் தேடி அலைய வேண்டிய அவசிய மில்லை. ஆதி மனிதன் எப்படி வாழ்ந்தான் என்று பார்த்தால் தெரியும். இப்பொழுது கூட்டுறவு முறைபற்றி ஆங்காங்கு எதிர்க்கப்படுகிறது. ஆதி மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து தான் செயல் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு முறையின் மூலம் தான் வாழ்க்கை நடத்தியிருக் கிறார்கள். இதற்கு ஆதாரமே தேவையில்லை. தனி மனிதனுக ஒரு நாளும் வாழ முடியாது. அன்று ஆதி மனிதர்கள் தனிமையாக வாழ்ந் திருந்தால் ஒன்று அவர்கள் மிருகங்களால் அழிக்கப்பட்டிருப்பார்கள், அல்லது அவர்களைச் சேர்ந்தவர்களாலேயே அவர்களை கொன்று போடப் பட்டிருபபார்கள். இன்று கூட்டுறவு முறை காரணமாகத்தான் உலகில் இன்று 300 கோடி மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவிலும் 40 கோடி மக்கள் இருக் கிறார்கள். இதை விட கூட்டுறவு முறைக்குத் தேவையான சிறந்த ஆதாரம் வேறு வேண்டியதில்லை. உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளும் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கின்றன. மீனை எடுத்துக்கொண்டால் அவைகள் கடலில் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கின்றன. பறவைகளை எடுத்துக் கொண்டால் அவைகளும் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கின்றன. காக் காய்களை எடுத்துக்கொண்டால் அவைகளும் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கின்றன. புழுக்கள்கூட கரையான்கள்கூட கூட்டம் கூட்டமாகத்தான் செல்கின்றன. எங்கள் ஊரில் வைகை உற்பத்தியாகும் இடம் இருக்கிறது. அங்கே யானைகள் கூட்டம் கூட்டமாகத்தான் வாழ்கிறது.

SRI D. S. AUTHIMOOLAM : Sir, on a point of order. அங்கத்தினர் அவர்கள் மேடைப் பிரசங்கம் செய்கிறார்களா ? அல்லது கூட்டுறவு டிமாண்டின் பேரில் பேசுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TEMPORARY CHAIRMAN (SRI A. GOVINDASAMY) : கூட்டுறவு முறை அவசியம் என்பதை வலியுறுத்த அதை மேற்கோளாகக் காட்டுகிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன்.

SRI N. R. THIAGARAJAN : எங்கள் தொகுதியில் யானைகள் ஆயிரக் கணக்கில் வாழ்கின்றன. நானே அதை பல முறை பார்த்திருகிறேன். ஒண்டியாக ஏதாவது ஒரு யானை போனால் அதை கொன்று போட்டு விடவேண்டுமென்பதுதான் எங்கள்பக்கத்திலுள்ள தீர்ப்பு. அப்படி தனிப்பட்டு ஒரு யானை வந்தால் ஒளிந்திருந்து அதைச் சுட்டுத் தள்ளிவிட வேண்டும். ஆக கூட்டுறவுமுறை மூலந்தான் அன்றி லிருந்து இன்றுவரை மக்களின், ஏன் மற்ற ஏனைய ஜீவராசிகளின் வாழ்க் கையும் நடந்து வந்திருக்கிறது. நாமும் இதைப்பற்றி கூட்டமாக இருந்துதான் விவாதிக்கிறோம். ஒருவரும் இல்லாமல் இதைத் தனியாக கொண்டு வந்திருந்தால் அது சர்வாதிகார முறையாகத்தான் இருக்க முடியும். அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபங்களைப்பற்றி இங்கு பல

குறைகள் கூறப்பட்டன, சிலயிடங்களில் மோசடி நடந்திருக்கிறது என்று; திருட்டு நடந்திருக்கிறதென்று நான் சொல்லுகிறேன். தனிப்பட்டவர்கள் நடத்தும் ஸ்தாபனங்களிலும் திருட்டு நடக்கிறது, கொள்ளை அடிக்கிறார்கள், கொள்ளையடித்திருக்கிறார்கள். ஆனால் அவைகள் வெளியே வருவதில்லை. அவ்வளவு தான். எனக்குத் தெரியும், எங்கள் ஊரில் ஒருவர் இரண்டு தடவை திருடியிருக்கிறார்கள். ஒரு தனிப்பட்ட ஸ்தாபனத்தில், தனிப்பட்ட ஸ்தாபனங்களில் திருட்டு அல்லது கொள்ளை நடப்பதுபற்றி சட்டமன்றத்தில் விவாதத்திற்கு வருவதில்லை, பொது மேடைகளில் பேசப்படுவதில்லை. ஆகவே, அவை நம் கண்ணில் படாதுபோகிறது. ஆனால் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அப்படி ஏதாவது மோசடி நடந்துவிட்டால் அது சட்ட மன்றத்தின் முன் விவாதத்திற்கு வருகிறது, பொதுமேடைகளிலும் விவாதிக்கப்படுகிறது. வலாந்தரவை என்ற இடத்தில் ஒரு கூட்டுறவு சொசைட்டியைச் சென்று பார்த்தேன். அங்கு ஆயிரம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வேறு தனிப்பட்டவர்கள் மிராசுதாரர்கள் நடத்தும் இடங்களில் 8 அணு கூலி கொடுத்தால் இவர்கள் இங்கு $1\frac{1}{2}$ ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த நஷ்டம் ஏற்பட்டிருப்பது பரவாயில்லை. அது பெரிய நஷ்டமல்ல என்று கூறினேன். பின்னர், ஒரு கூட்டுறவு ஸ்டோரில் நான் போயிருந்த போது, 13,000 ரூபாய் லாபம் கிடைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நான் சொன்னேன், நீங்கள் கொள்ளை அடிக்கிறீர்கள், அது தவறு என்று. கூட்டுறவு முறையில் நடத்தும்போது அதில் லாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நடத்தக்கூடாது. குறைந்த லாபத்தில் நல்ல சாமான்கள் விற்கப்படவேண்டும் என்று சொன்னேன். இப்பொழுது நான் சொன்னதைப் பின்பற்றி நடந்துவருகிறார்கள். ஆகவே, கூட்டுறவு முறையில் லாபம் இல்லை என்று சொல்வது தவறு. லாபமில்லாது நடத்தவேண்டுமென்பது தான் கூட்டுறவின் நோக்கம். அடுத்தபடியாக கைத்தறிக்கு குறைந்த ரிபேட் கொடுக்கப்படுகிறதென்றும், கதருக்கு அதிகப்படியாகக் கொடுக்கப்படுகிறதென்றும் இங்கு சொல்லப்பட்டது. அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கதருக்கும், கைத்தறிக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு முதலாளியின் மில்லிலிருந்து வரும் நூலை நெசவு செய்கிறான், கைத்தறித் துணியில். அவனுக்கு ரிபேட் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. கதரை எடுத்துக்கொண்டால் ஒரு ஏழை, அவனே நூல் நெய்கிறான். அதற்காக கொஞ்சம் ரிபேட் கொடுக்கிறோம்.

அதற்குப் பிறகு, நெசவு கட்டுகிறார்கள், சிட்டா போடுகிறார்கள், இன்னும் பலவிதமான வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே கதருக்கு மூன்று அணு கொடுப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவே, இந்த மூன்று அணுவைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் கூட்டுறவுப் பண்ணையைப்பற்றி இங்கு பலர் பேசினார்கள். கூட்டுறவுப் பண்ணைகள் எல்லாம் சரியாக நடைபெறாது, கூட்டுறவுப் பண்ணைகளினால் ஒன்றும் செய்ய முடியாது என்றெல்லாம் பலர் கூறினார்கள். அது மட்டுமல்ல, ஏதோ உலகம் தோன்றின நாள் முதலாகவே இவர்கள்தான் நிலங்களை வைத்துக்கொண்டிருந்தது போலவும், இப்போது யாரோ வந்து பறிமுதல் செய்துவிட்டதாகவும், இவர்கள்தான் உலகத்தில் மகா மேதைகளாக இருந்து வந்தது போலவும் பலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கனம் தலைவர் அவர்களே, நாம் எல்லோரும் ஒரு காரியத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி இந்த நாட்டில் வருவதற்கு முன்னால் எந்த சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸும் கிடையாது. நிலம் எல்லோருக்கும் பொதுவானதாகத்தான் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சி வந்த பின்னால் இந்த சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசும் எல்லாம் வந்தன, நிலங்கள் எல்லாம் ஒவ்வொருவருக்கும் சொந்தமானது என்று வைத்துக்கொண்டார்கள். இப்போதும் கூட நம் கிராமங்களில் பார்க்கலாம், சிலஇடங்கள் பொதுவாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இந்த இடங்களில் எல்லோரும் குப்பையைப் போடுவார்கள், குளங்கள் இருக்கும், ஊருணிகள் இருக்கும். ஆகவே, பொதுவாக முன்னால் எல்லாம் இருந்திருக்கிறது

[Sri N. R. Thiagarajan] [25th April 1960

என்று நமக்குத் தெரியும். அந்த முறையிலேயே இப்போதும் நிலம் பொதுவாக இருக்கக்கூடிய நிலைமையை உண்டுபண்ணவேண்டும், நில உரிமை என்பது யாருக்கும் இருக்கக்கூடாது என்பது தான் விநோபா பாவே அவர்களின் கொள்கை. 150 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி நில உரிமை யாருக்கும் இல்லாமல் பொது சொத்தாக இருந்ததோ, அந்த முறையில் பொது நிலமாக எடுத்து அதையெல்லாம் கூட்டுறவுப் பண்ணைகளாகக் ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தஞ்சையை எடுத்துக்கொண்டால் அங்குள்ள கோவில்களுக்கு பெருவாரியான நிலங்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் கூட்டுறவு பண்ணையாக கொண்டுவர வேண்டும். குறைந்தது அசெம்பிளி தொகுதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கூட்டுறவுப் பண்ணை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் கூட்டுறவு முறை இயங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்தக் கூட்டுறவு மானியத்தை தீவிரமாக ஆதரித்துக்கொண்டு, கூட்டுறவு முறைகளை எல்லாம் வேகமாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. கூட்டுறவு நாட்டின் உயர்வு, "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்று கூறி என் உரையை முடிக்கிறேன். ஜெய்ஹிந்த்.

* SRIMATHI A. S. PONNAMMAL: கனம் தற்காலிகத் தலைவர் அவர்களே, நமது கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு முறையில் இன்றைக்கு நாட்டில் நல்லதொரு வளர்ச்சி யடைந்து பல தரப்பட்ட மக்களுக்கும் இதனால் பலவிதமான பலன்கள் கிடைத்துக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நம்முடைய மாகாணத்தில் 91 சத விகிதம் கூட்டுறவு முறையில் கடன் உதவி செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதோடு 1960–61-ல் 100-க்கு 100 எல்லா இடங்களிலும் கூட்டுறவு முறையில் கடன் உதவி செய்யக் கூடிய முறை ஏற்படுத்தப்படும் என்று கூறியதை, ஏழை விவசாயிகளின் சார்பாகவும் ஏழைப்பாட்டாளி மக்களின் சார்பாகவும் முழு மனதுடன் ஆதரித்து அதை வெகு விரைவில் கொண்டுவந்தால் நாட்டில் இருக்கின்ற ஏழை விவசாயிகள் நல்ல முறையில் வாழுவார்கள், நல்ல முறையில் பலனடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு, அவர்களுக்கு இருக்கின்ற குத்தகையை கொண்டு அவர்கள் செய்கின்ற உற்பத்தியின் மீது கடன் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய பட்டிருக்கிறது என்று. அதையும் நான் முழு மனதோடு ஆதரிப்பதோடு, இதை வெகு விரைவில் ஆங்காங்குள்ள ஜில்லா அதிகாரிகளுக்கும் தெரிவிப்பார்களானால், அங்கங்கே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகள் இந்தக் கடனைப் பெற்று உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, புல் பைனான்ஸ் ஸ்கீம். இதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் முக்கியமாக ப்ளாக் ஏரியாவில் ஜமீன் ஏரியாக்கள் அதிகமாக இருக்கின்றன. இந்த இடங்களுக்கு எல்லாம் கடன் கிடைப்பதற்கு வெகு காலதாமதம் ஆகிறது. இந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு மாடு வாங்குவதற்கு கிணறு வெட்டுவதற்கு பம்ப் செட் வைப்பதற்கு இவைகளுக்கு எல்லாம் கடன் கோருகிறார்கள். ஆனால் இந்தக் கடன் கிடைப்பதற்கு ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடம் ஆகிவிடுகிறது. இந்த இடங்களில் எல்லாம் சமுதாய நலத் திட்டங்கள் வேலை செய்து வருகின்றன. இம்மாதிரி சமுதாய நலத் திட்டங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் பெரும்பாலும் ஜமீன் ஏரியாக்கள் இருக்கின்றன. இந்த இடங்களுக்கு எல்லாம் இந்த முழுக்கடன் திட்டத்தைக் கொண்டுவந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இல்லையென்றால் கடன்கேட்டு, அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கவேண்டிய நிலையும் கடன் கிடைப்பதற்கு வெகு தாமதமும் ஆகின்றது. உதாரணமாக எங்கள் தொகுதியாகிய நிலக்கோட்டையைப் பொறுத்த வனா 12

25th April 1960] [Srimathi A. S. Ponnammal]

ஜமீன் கிராமங்கள் இருக்கின்றன. இந்த இடங்களில் இருக்கின்ற சமுதாய நலத் திட்டங்கள் மூலமாக அங்குள்ள விவசாயிகள் கடன் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு மிகவும் கால தாமதம் ஆகிறது. அப்பேர்ப்பட்ட பகுதிகளில் எல்லாம் முழு கடன் திட்டத்தை கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, பால் பண்ணைகளை நடத்தும் போது அதன் மூலம் பயன் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அதற்கு பங்குத் தொகையை செலுத்தவேண்டியிருக்கிறது. ஆனால் இந்தப் பண்ணைகள் இருக்கக்கூடிய இடங்களில் இருக்கின்ற அரிஜன மக்கள் இந்த பங்குத் தொகையை செலுத்த முடியாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்குள்ள அரிஜன மக்கள் பிழைப்புக்கு வேறு வழியில்லாமல் இந்த பால் பண்ணைகளில் சேர முன் வருகிறார்கள். ஆகவே அவர்கள் செலுத்த வேண்டிய மூலதனப் பணத்தை (ஷேர் காபிடல்) அரசாங்கமே கொடுக்குமானால், அது அங்குள்ள அரிஜன மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, நம்முடைய மாகாணத்தில் ஆங்காங்கு மத்திய கூட்டுறவு பாங்கின் நிர்வாகஸ்தர்கள். மக்களுக்குக் கொடுத்த கடன்களை எல்லாம் நல்ல முறையில் வசூல் செய்வதற்கு தீவிரமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும்கூட சமுதாய நலத் திட்டங்கள் இயங்கும் இடங்களில் சமுதாய நல வளர்ச்சித் திட்டமும் கூட்டுறவு ஸ்தாபனமும் ஒன்று சேர்ந்து இயங்குமானால் நாட்டிலுள்ள மக்களுக்கு நல்லதொரு சேவையைச் செய்யமுடியும் என்று கருதுகிறேன். இதன் மூலம் ஆங்காங்கு பல பயிற்சிகளை ஏற்படுத்தி, அதன் மூலம் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய நிலையில் வட்டார வளர்ச்சித் திட்டங்களோடு இணைந்து நடத்தப்படுமானால், மக்களுக்கு நல்ல விதமான பலன்கள் கிடைக்கும் என்பதோடு மட்டுமில்லாமல், அங்கே இருக்கின்ற சமுதாய நலத் திட்ட அதிகாரிகளும், கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியும் அந்தந்த இடங்களிலுள்ள பஞ்சாயத்து தலைவரும் ஒன்றாகச் சேர்ந்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் என்னென்ன சாமான்கள் தேவை, எவ்வளவு கடன்கள் தேவை என்பவைகளை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, அதற்குத் தகுந்த முறையில் ஸ்கீம்களை போட்டு, அவைகளைக் கூட்டுறவு முறையில் நிறைவேற்றுவோமானால், இன்னும் பல துறைகளிலும் நல்ல முறையில் கிராம மக்கள் முன்னுக்கு வர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதற்கடுத்தபடியாக, இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய நிலைமையை எடுத்துக்கொள்வோமானால் விவசாயிகளைத் தவிர நாள் முழுதும் உழைத்து உழைத்து அதற்குத் தகுந்த ஊதியமும் கிடைக்காமல் எவ்வளவோ மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டுமானால் நாம் ஏதாவது ஒரு வகை செய்தாக வேண்டும். இப்பேர்ப்பட்டவர்கள்தான் பெரிய ரஸ்தாக்களை எல்லாம் போடுகிறார்கள். பெரிய அணைக்கட்டுகளை எல்லாம் கட்டி முடிக்கிறார்கள். பள்ளிக்கூடங்களைக் கட்டுகிறார்கள். பெரிய கட்டிடங்களை எல்லாம் கட்டுகிறார்கள். இவர்கள் தங்களுக்கு போதிய ஊதியம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல்வேறு தொழிலாளர்களுக்கும் இண்டஸ்ட்ரியல் சொசைட்டிகள் இருக்கின்றது. இவைகளுக்கு தொழிலாளர்கள் "வொர்க்கிங் காப்பிடல்", "ஷேர் காப்பிடல்" இவைகள் எல்லாம் போட வேண்டியிருக்கிறது. இதை அரசாங்கமே கொடுத்து உதவுகின்றது. ஆனால் இது போன்ற ஏழை தொழிலாளர்களிடம் இம்மாதிரியான பண உதவி செய்வதற்கு எந்த விதமான வசதியும் இல்லாமலிருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே இந்த தொகைகளைச் செலுத்தி, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒவ்வொரு காண்ட்ராக்ட் ஸொஸைட்டி ஏற்படுத்தினால் அதன் மூலமாக இப்பேர்ப்பட்ட தொழிலாளர்கள் நல்ல பலனடைய

முடியும். இதற்கான வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த முறை வெகு விரைவில் அமுல் நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கிராமப்புறங்களில் பலர் வீடு கட்டுகிறார்கள். இதில் பலருக்கும் பண உதவி கொடுப்பதில் கஷ்டமிருப்பதாகவும், அதற்காக இச் சட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்போவதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சாதாரணமாக வீடு கட்டுவதற்கு என்று முன் வரும்போது அதற்கென்று 13 வில்லங்க சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் எடுத்துக் கொடுப்பதற்குள் எவ்வளவோ காலதாமதம் ஏற்படுகிறது. இந்தவிதமான காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டத்தை மாற்றப்போகிறார்கள், இதை நான் மிகவும் வரவேற் கிறேன். இப்போது என்ன நடக்கிறது என்று பார்த்தால் கிராம கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வீடு கட்டுவதற்கு பணம் கேட்கும்போது அவர்கள் கொடுக்கின்ற பணத்திற்குத் தகுந்தவாறு செக்யூரிட்டி கட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் சொல்லும்போது கிராமத்திலுள்ள நில மில்லாத விவசாயிகளுக்கு, அல்லது வேறு தொழில் செய்யக்கூடிய பாட்டாளி மக்களுக்கு, எந்தவிதமான செக்யூரட்டியும் கொடுக்க முடியாது. அதோடு நிலம் இருக்கின்றவர்கள் வில்லங்க சர்டிபிகேட் கொடுப்பதற்கு முன்னால் அவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். இதனால் எவ்வளவோ காலதாமதம் ஏற்படுகிறது. இந்த நிலை மாறவேண்டும். சாதாரணமாக ரூரல் ஹௌசிங் ஸ்கீமின் கீழ் கிராமப் புறங்களில் 1,000 அல்லது 1,500 ரூபாய் கேட்கிறார்கள். இதற்கு முதலில் பிளான் எஸ்டிமேட் போட்டு அனுப்பவேண்டும். அதன் பின் னால், சர்க்கார் வக்கீலிடத்தில் போய் சாங்ஷன் வாங்கவேண்டும். அதுவும் பெரிய இன்ஜினீயர்தான் செய்ய வேண்டும். அதன் பின்னால் மாகாண ரெஜிஸ்ட்ரார் அவர்களிடத்தில் சாங்ஷனாக வேண்டும். இதற் கெல்லாம் போய்விட்டு வருவதற்குள் ஆறு அல்லது ஏழு மாதமாகி விடுகிறது, சில சமயங்களில் 1 வருடம்வரை ஆகிவிடுகிறது. சில வேளை மாகாண ரெஜிஸ்ட்ரார் சாங்ஷன் செய்துவிட்டாலும்கூட, இஞ்சி னீயர் பிளான் அண்டு எஸ்டிமேட் போடுவதற்குப் பின் சர்க்கார் வக்கீல் அப்ரூவல் பண்ணுவதற்கும் காலதாமதம் ஏற்படுகின்றது. இந்த நிலையை மாற்றவேண்டுமானால், அந்த அந்தப் பகுதிகளில் இருக்கும்
11-00 a.m. கூட்டுறவு அலுவலர்களும், அந்த அந்த வட்டாரத்தில் இருக்கும் ப்ளாக் அதிகாரிகளும், ஓவர்ஸியர்கள், எஞ்சினீயர்கள் முதலியவர்களும் ப்ளான் களையும் எஸ்டிமேட்டுகளையும் தயாரித்துக் கொடுக்க வேண்டும். அந்த நிலையில் இந்தப் பணத்தை அந்த அந்தச் சங்கங்களின் மூலம் கொடுத்து வீடு கட்ட முன்வந்தால் ஏழை மக்கள் நல்ல குடியிருப்பு வசதிகள் பெற நல்ல வாய்ப்புகள் இருக்கும் என்று கருதுகிறேன்.

அதோடு, இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன மாணியத் திலிருந்து பணம் செலவழித்து ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டித் தருவ தென்றால் கொஞ்ச வீடுகள் தான் கட்டித்தர முடிகிறது. இதனால் பல ஹரிஜன மக்கள் வீடில்லாமல் தவிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கூட் டுறவு முறையில் வீடுகள் கட்டித் தரலாம். இந்தத் திட்டத்திற்கு அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். இந்த விஷயத்தில் இப்போது கூட்டுறவு இலாகா விடம் இருக்கும் திட்டத்தின்படி பார்த்தால், வீடுகள் பெறுபவர்கள் ரூ. 1,600-க்கு மேற்பட்ட தொகையை பல தவணைகளாக 20 வருஷங்களுக் குள் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். குறைந்த வட்டி வசூலிப்பதாயிருந்தாலும் அவர்கள் மொத்தம் ரூ. 1,600-க்கு மேற்பட்ட தொகை செலுத்த வேண்டியிருக்கிறது.

THE HON SRI R. VENKATARAMAN : அவர்கள் குடிக் கூலி கொடுக்க வேண்டியிருந்தால், அந்த மாதிரி பணம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கும், ஆகவே, அதில் பாதி இதில் அடைந்துபோகிறது.

25th April 1960]

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் அமைச்சர் கருணை கூர்ந்து, இந்தத் திட்டத்தில் வட்டி இல்லாதபடி செய்தாரானால், ஏழை ஹரிஜன மக்களுக்கு மிகவும் நன்மை செய்தவராவார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாதிரி நாம் செய்தால் அந்த சமுதாயத்திற்கு நல்லதொரு உதவி செய்தவர்களாவோம்.

கூட்டுறவு முறையின் தத்துவத்தைப்பற்றியும், கூட்டுறவு இயக்கத்தினர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல முறையில் சேவை செய்துவருவதைப் பற்றியும், எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் நன்றாக எடுத்துச் சொன்னார். ஏழை மக்களுக்கு உபரியாக கிடைக்கும் நிலங்களையும் கூட்டுறவு முறையில் கொடுத்தால் அவர்கள் உணவு உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் சபைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானிய கோரிக்கையின்பேரில் என் அபிப் பிராயங்களைக் கூறவிரும்புகிறேன். கூட்டுறவு மானியம் 91 சதவிகித கிரா மங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகரிப்பதை வரவேற்கிறோம். அது வர வேற்கத்தக்க விஷயம்தான். அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தில் பல சங்கங்களில் ஊழல்கள் அளவு கடந்து மலிந்திருக்கின்றன என்பதை யும் நான் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. அவை ஒன்றிரண்டு அல்லது மூன்று, நான்கு வருஷங்களாக இருக்கின்றன என்றுகூடச் சொல்ல முடியாது. ஊழல்கள் ஏழு, எட்டு, பத்து வருஷங்களாகக்கூட விசாரித்துத் தீர்க்கப்படவில்லை. எனவே ஒரு பக்கத்தில் கூட்டுறவுச் சங்கங்களை சர்க்கார் அதிகரித்துக்கொண்டு போனாலும், இன்னொரு பக்கத்தில் அவை களில் ஏற்படும் ஊழல்களை உடனுக்குடன் தீர்க்காமல் மக்களுக்கு கூட் டுறவுச் சங்கங்களின் பேரிலேயே நம்பிக்கை இல்லாத நிலைமை இன்று நிலவுகிறது. மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் அவநம்பிக்கை இருக் கிறது. இப்படிச் சொல்லுவதற்கு, " மனிதன் ஆதி காலத்தில் கூடி வாழ்ந்தான். கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதன் நோக்கம், லாபம் பெறுவதே அல்ல. நஷ்டம் ஏற்பட்டால்கூட அதைச் சொல்லக்கூடாது. நஷ்டத்திற்காகத்தான் கூட்டுறவுச் சங்கம் " என்று பதில் சொல்லக்கூடும். லாபத்திற்காகத்தான் கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால் அது மிகவும் வருந்தத்தக்கது. கூட்டுறவுச் சங்கங்களில் லாபம் கிடைக்கவில்லையே, யாரும் கூட்டுறவுச் சங்கங்களை லாபத்திற்காக நடத்தவில்லையே என்று யாரும் இன்று சொல்லவில்லை. தனிப்பட்டவர்களிடமிருந்து பொருள்கள் என்ன விலைக்குக் கிடைக்குமோ அந்த விலையைவிடக் குறைந்த விலைக்குக் கூட் டுறவுச் சங்கங்களிடமிருந்து கிடைக்கவேண்டும். பொருள்கள் அப்படிக் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம். ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் தனிப்பட்டவர்கள் ஸ்தாபனங்களில் இருப்பதைவிட அதிகமாக ஊழல்கள் இருக்குமானால், அதனால் பொது மக்களுக்கு கூட்டுறவுச் சங் கங்களில் அவநம்பிக்கை ஏற்படக்கூடிய நிலைமை இருக்குமானால், அந்த ஊழல்களை நீக்குவதற்கு சட்டத்தையே தலைகீழாக மாற்றித் திருத்தி யமைக்கவேண்டியிருந்தாலும், அதைச் செய்யத்தான் வேண்டும். எந்த ஊழலையும் குறைந்தபட்சம் நான்கு மாதங்களுக்கு மேலும், அதிகபட்சம் 6 மாதங்களுக்கு மேலும் நீடிக்கவிடக்கூடாது. இந்த முறைகளைப் கடைப் பிடித்தால் தான் கூட்டுறவுச் சங்கங்கள் நன்றாக இயங்கும். நான் இப்படிச் சொன்னால், இதற்கு, " கூட்டுறவுச் சங்கங்கள் அப்படித்தான் இருக் கும். சட்டம் இப்படி இருக்கிறது, அப்படி இருக்கிறது " என்று பதில் சொல்லக்கூடும்.

THE HON. SRI R. VENKATARAMAN : அப்படியானால் கூட்டுறவுச் சங்கங்களால் உபயோகம் இல்லை என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறாரா அல்லது வேறு என்ன சொல்லுகிறார் என்று எனக்குப் புரிய வில்லை.

[25th April 1960]

Sri V. K. KOTHANDARAMAN : கூட்டுறவுச் சங்கங்களால் உபயோகமே இல்லை என்று நான் சொல்லவில்லை. சர்க்கார், கூட்டுறவுச் சங்கங்களால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகிறார்களே தவிர, அவைகளால் ஏற்படக்கூடிய பண விரயத்தைப்பற்றிப் பேசுவதில்லை என்றுதான் நான் சொல்கிறேன். அந்தச் சங்கங்களால் ஏற்படக்கூடிய பண விரயத்தைப் போக்க வேண்டும். ஆதிகாலத்தில் மனிதன் கூடிவாழ்ந்தான் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ தியாகராஜன் சொல்கிறார். அவர் சரித்திரத்தையும் கொஞ்சம் படிக்க வேண்டும். அதைப் படிக்காமல் "புள்ளி விவரம் சொல்கிறேன்" என்று கூறுகிறார். ஆதிகாலத்தில் மனிதர்களோ மிருகங்களோ அவர்களே உணவுப் பொருள்கள் கொண்டுவருவதில்லை. ஒரு குடும்பத்திலுள்ள தலைவனோ, தலைவியோ கொண்டுவருவதை எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டார்கள். அது தான் பொது உடமை சமுதாயம் என்று சரித்திரம் கூறுகிறது. அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வோம். இன்றையதினம் எங்கு பார்த்தாலும் கூட்டுறவு பாங்குகளின் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் மக்களுக்குக் கடன் கொடுத்தால் மட்டும் போதாது. ஒரு பக்கத்தில் ஜாதி, இனப் பாகுபாடுகள் இன்றி எல்லோரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டுமென்று ஆளும் கட்சியினர் சொல்லிக்கொண்டு, இன்னொரு பக்கத்தில் இவர்களே ஆளும் கட்சியைச் சாராத பாங்குகளையும் சங்கங்களையும் கவிழ்க்க முயற்சிக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சாராத பாங்குகளிலும், சங்கங்களிலும் ஏதாவது சிறு தவறுகள் இருந்தாலும் அவைகளை பெரிய தவறுகளாக ஆக்கி, மலையாக ஆக்கி, பழிவாங்கும் நிலைமை இன்று இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் இதுபோன்ற நிலைமை இருக்கக்கூடாது. கூட்டுறவு இயக்கத்தில் இத்தகைய எந்த விதமான பாகுபாடும் இருக்கக்கூடாது. இதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி வந்தாலும், பாகுபாடு இல்லாத முறையில் நடத்தக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். இதற்கு நல்ல பிரசாரம் இருந்தாகவேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதோடு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு சூபர்வைசர்கள் போன்ற அதிகாரிகளை நியமிப்பதிலும் பல பாகுபாடுகள் இருக்கின்றன. ஹௌஸ் மார்ட்கேஜ் பாங்குகளை எடுத்துக்கொண்டால், அவைகளை நகரசபை ஏரியாக்களில் அமைக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. குடியாத்தம் 100 வருஷங்களாக முனிசிபாலிடியாக இருந்துவருகிறது. "கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். அவர்கள் துணிகளுக்கு ரிபேட் கொடுக்கிறோம்" என்று சர்க்கார் சொல்கிறார்கள். குடியாத்தம் இத்தனை வருஷங்களாக முனிசிபாலிடியாக இருப்பதுடன் மாத்திரமன்றி, கைத்தறி நெசவுத் தொழில், பீடித் தொழில் முதலிய தொழில்கள் நடக்கும் இடமாகவும் இருந்துவருகிறது. அது "புவர் ஒர்கிங் க்ளாஸெஸ் ஏரியா". அந்த நகரத்தில் ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்கு ஏற்படுவதற்கு ஷேர்கள் வசூலித்திருக்கிறார்கள். சுமார் 3,000 ரூபாய்க்கு மேல் ஷேர் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்க் ஏற்படுத்தாவிட்டால், அந்தப் பணத்தை வாபஸ் பண்ணிவிடலாமா என்று யோசிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. அங்கே இன்று வீட்டு நெருக்கடி மிக அதிகமாக இருக்கிறது. முன்பு 2 ரூபாய் வாடகை கொடுக்கப்பட்ட வீட்டுக்கு இப்போது 20 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. வீடுகளைக் காலி செய்து அதிகாரிகளுக்கு வாடகைக்கு விட்டால் சாதாரண வாடகையைப் போல் பத்து மடங்கு வாடகை கிடைக்கிறது. எனவே அங்குள்ள ஜனங்கள் வீடுகளைக் காலி செய்து அதிகாரிகளுக்கு வாடகைக்கு விட்டுவிட்டு எங்கோ குடிசையில் குடியிருக்கக்கூடிய நிலைமை அங்கு ஏற்பட்டிருக்கிறது. அது 10,000 நெசவுத் தொழிலாளர்கள் இருக்கும் பிரதேசம். அப்பேர்ப்பட்ட பிரதேசங்களில் உடனடியாக ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்குகளை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்போவதாக அவர்கள் சொல்லுகிறார்கள்.

மேலும், வட ஆற்காடு ஜில்லாவில் தோல் பதனிடுதல், பீடி முதலிய தொழில்கள் நடக்கின்றன. தோல் தொழில் அன்னியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க உதவுகிறது என்று சொல்லுகிறோம். அந்த

25th April 1960] [Sri V. K. Kothandaraman]

தோல் பதனிடும் தொழில் அங்கே நடக்கிறது. பீடித் தொழிலும் அங்கே நடக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்காகச் சட்டம் கொண்டுவந்தோம். ஆனால் பீடித் தொழில் முதலாளிகள் அந்தச் சட்டத்தை மதித்து நடப்ப தில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால், நட வடிக்கை எடுக்கமுடியாதபடி மத்திய அரசாங்கச் சட்டம் குறுக்கிடுகிறது. அந்த மத்தியச் சட்டம் நமது காலையும் கையையும் கட்டி வைத்திருக்கிறது. இந்த நிலையில், பீடித் தொழில், தோல் பதனிடும் தொழில் முதலிய தொழில்களை தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எடுத்து நடத்துவதற்கு வகைசெய்யக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்தொழில்கள் நசித்துவிடும். மோட்டார் தொழிலையும், எக்ஸ்-ஸெர் விஸ்மென் சங்கம் போன்ற சங்கங்கள், டிரைவர்கள் முதலியவர்களைப் போட்டு நடத்த முன் வந்தால் அவர்கள் அதை நடத்துவதற்கு வகை செய்யக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தைப்பற்றி மத்திய அரசாங்கத்தில் இருக்கும் நம் முடைய மதிப்பிற்குரிய பிரதம மந்திரியிலிருந்து கீழேயிருக்கும் நாம் வரையில் பேசுகிறோம். நம்முடைய ராஜ்யத்தில் லேபர் காண்டிராக்ட் கூட்டுறவு சொசைட்டி என்று ரிஜிஸ்தர் பண்ணுகிறார்கள். அப்படி ரிஜிஸ்தர் பண்ணும்போது அவர்களுக்குத்தான் முதல் ப்ரையாரிடி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், அந்த மாதிரி நிலைமை நடைமுறையில் இருப்பதில்லை. அதற்கு உதாரணம் சொல்கிறேன். ஏற்றுமதி இறக்குமதி சம்பந்தமாக தனுஷ்கோடியிலே ரயில்வே காண்டிராக்ட் விடப்படுகிறது. அங்கே பத்து வருஷ காலமாக இருக்கும் ஒரு கூட்டுறவு சொஸைட்டி குறைந்த டெண்டர் போட்டும்கூட, அதற்குக் கொடுக்காமல், அதிக டெண்டர் போட்ட ஒரு தனிப்பட்ட நபருக்கு—காங்கிரஸ்காரர் ஒருவ ருக்கு—காண்டிராக்ட் விடப்பட்டிருக்கிறது. அம்மாதிரி காண்டிராக்ட் கொடுக்கும் நிலைமை இருக்குமானால், கூட்டுறவு சங்கம் எப்படி வளர முடியும் ? அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் கூட்டுறவு இயக்கத்திற்கு நாம் உதவி செய்தவர்கள் ஆகமாட்டோம். வேண்டுமானால், இதைச் செய்தோம், அதைச் செய்தோம் என்று பெருமையாகப் பேசிக் கொள்ள லாம். கூட்டுறவு இயக்கத்தில் இருக்கும் ஊழலைப் போக்குவதின் மூலம் தான் அது நல்ல முறையில் வளர்ந்து, மக்களுக்குப் பல விதமான நன்மை செய்யக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் கூட்டுறவு சங் கங்கள் இயங்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன். இன்னும் இரண்டொரு நிமிஷத்திலே என்னுடைய கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

வடாற்காடு ஜில்லாவில் சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. அது வெகு சீக்கிரத்திலே ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. வரவேற்கிறோம். அந்த ஆலையில் பலவித காண்டிராக்ட்கள்—" உட் " காண்ட்ராக்ட், கல் காண்ட்ராக்ட் இம்மாதிரி சொஸைடிகளுக்குக் கொடுக்காமல் பல சொந்தக் காரர்களுக்குப் கொடுக்கப்படுகிறது. ஜாதியானுக்குக் கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி ஊழல் இருக்கிறது. அம்மாதிரி காண்டிராக்ட் கொடுப்பதால், ஒன்றுக்கு நான்கு பங்கு மணல் போடுவதற்குப் பதிலாக, ஒன்றுக்கு பத்து பங்கு மணல் போட்டுச் சுவரைக் கட்டியதால் சுவர் விழுந்துவிட்டது ஒரே நாளில் ; ஐந்து பேர் செத்தார்கள் ; நஷ்டஈடும் கொடுக்கப்படாமல் மூடி மறைக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், இது போன்ற விவகாரங்களில் உடனடியாகத் தலையிட்டு இந்த ஊழல்களையெல் லாம் போக்கவில்லையென்றால், கூட்டுறவு சங்கத்தின் பேரிலேயே ஒரு அதிருப்தி வளரக்கூடும் என்பதற்காகத்தான் அதை உடனே கவனிக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதோடு, அங்கே கிடைக்கும் கழிவுப் பொருளி (மொலாஸஸ்)லிருந்து அல்கஹால் தயாரிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. கூட்டுறவுத் தொழிற்சாலையாக இருந்தாலும், தனிப்பட்டவர் நடத்தும் தொழிற்சாலையாக இருந்தாலும், அல்கஹால் உற்பத்தி செய்வதிலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

[25th April 1960

* SRI K. S. SUBRAMANIA GOUNDER : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த கூட்டுறவு மான்யக் கோரிக் கையை ஆதரித்துச் சில விஷயங்களைப் பேச முன்வந்துள்ளேன்.

கூட்டுறவு இலாகாவானது தொடர்ந்து சென்ற ஆண்டிலே நல்ல முறை யில் பணி செய்திருப்பதற்காக கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களையும் கூட்டுறவு இலாகா பதிவாளர் அவர்களையும் நான் முதலிலே பாராட்டு கிறேன். இம்மாதிரி பாராட்டுவது—ஏதோ இந்த ஆண்டிலே இயக்கம் நன்ருக நடந்தது என்பதற்காக மாத்திரம் அல்ல; சென்ற ஆண்டிலே எந்த எந்த வகையிலே "டார்ஜெட்" போடப்பட்டிருந்ததோ அந்த "டார்ஜெட்" எல்லாம் பூராவும் நிறைவேறியதற்காக மாத்திரம் அல்ல; அதைவிட அதிகமாகவே செய்திருக்கிருர் என்றுல், நிச்சயமாக அது பாராட்டுவதற்குரிய விஷயமாகத்தான் இருக்கிறது.

அமைச்சர் அவர்கள் பேசும்போது, "இந்த ஆண்டில் $22\frac{1}{2}$ கோடி ரூபாய் வரையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்படும்" என்ற அளவிலே தெரிவித்தார்கள். அந்த $22\frac{1}{2}$ கோடி ரூபாயில் 21 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனுகவும், ஒன்றரை கோடி ரூபாய் மத்திய காலக் கட ணுகவும் கொடுக்கப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இது மிக வும் போதாத தொகை என்பதைத்தான் நான் கனம் அமைச்சர் அவர் களுக்கு மிகவும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய காலக் கடன் என்று சொல்லும்போது, நாம் மொத்தத்தில் எவ்வளவு பணம் கொடுக்கிருேமோ அதில் நான்கில் ஒரு பங்கு மத்திய காலக் கடனுக இருந்தால்தான் அது நியாயமாகக் கொடுக்கக்கூடிய ஒரு டார்ஜெட்டாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு இப்பொழுது அதிகமாக தேவையாக இருப்பது மூன்று ஆண்டுக் கடன், ஐந்து ஆண்டுக் கடன் ஆகும். நிலத்தைச் சீர்திருத்த வேண்டுமானுல், அதற்கு மூன்று ஆண்டுக் கடனே, ஐந்து ஆண்டுக் கடனே தேவையாக இருக்கிறது. மாடு வாங்க வேண்டுமானுல், அதற்கும் மத்திய கால கடன்தான் தேவையாக இருக்கிறது. கிணறுகள் அடி வெட்ட வேண்டுமென்றுலுங்கூட, அதற்கும் மத்திய காலக்கடன் தான் தேவையாக இருக்கிறது. நம்முடைய அரசாங்கம் ரிசர்வ் பாங்காருடன் பேச்சு வார்த்தை நடத்தி, அதற்காக ஆவன செய்துகொண்டு வருகிருர்கள். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இருந்தபோதிலும், இந்த ஆண்டிலே ஐந்து கோடி ரூபாய் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது சங்கங்கள் எந்த அளவு இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்கினுர்கள். விவசாய பாங்குகள் நல்ல முறை யிலே நம்முடைய ராஜ்யத்தில் வேலை செய்தாலும் ஏதோ மத்திய அர சாங்கம் சொல்லிவிட்டது என்ற காரணத்திற்காக அதை மாற்றி, திரும்ப வும் கிராமம் ஒன்றுக்கு ஒரு சொஸைட்டி என்ற பெயரிலே வைத்திருக்கி ருேம் என்று சொன்னுர்கள். அந்த முடிவு எந்த அளவுக்கு உசிதம் என்பதைத் திரும்பவும் நம்முடைய ராஜ்ய அரசாங்கம் யோசிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக, ஒரு சங்கம் நல்ல முறையிலே வேலை செய்யவேண்டும் என்றுல், அந்தச் சங்கத்திலிருந்து உண்மையான பலன் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்றுல், அந்தச் சங்கம் தினம் லேவாதேவி செய்தால் தான், தினம் அந்தச் சங்கத்திலே யாராவது இருந்து வேலை செய்தால் தான், அதனுல் பிரயோஜனம் இருக்குமே தவிர, இல்லாவிட்டால், ஒரு கிராமத்திற்கு மூன்று சங்கங்கள் வைத்தாலும் விவசாயிகளுக்கு உண் மையிலேயே பிரயோஜனம் இருக்காது.

(Deputy Speaker in the Chair.)

கிராமத்திற்கு ஒரு சங்கம் என்று இருப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு சங்கத்திற்கும் சம்பளம் பெறும் ஒரு காரியதரிசி இருக்கக்கூடிய அளவுக்கு சங்கங்களெல்லாம் இருக்கவேண்டும். பெயர் எதுவேண்டுமானுலும் வைத் துக்கொள்ளட்டும். விவசாய பாங்கு என்றே, சேவா கூட்டுறவு சங்கம்

25th April 1960] [Sri K. S. Subramania Gounder]

என்றோ எந்தப் பெயரில் வைத்தாலும் ஒவ்வொரு சங்கத்திற்கும் சம்பளம் பெறும் ஒரு காரியதரிசி இருக்கும் அளவிலே ஏற்பாடு செய்தோ மானால், நிச்சயமாக நம்முடைய ராஜ்யத்திலிருக்கும் ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும், இப்பொழுது அக்ரிகல்சரல் பாங்குகள் எந்த அளவில் இருக்கின்றனவோ அந்த அளவில் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அக்ரிகல்சரல் பாங்கு ஏன் நல்ல முறையில் நடக்கிறது என்று பார்த்தால், ஒவ்வொரு சங்கத்திற்கும் ஒரு சம்பளக் காரியதரிசி போட்டதுதான் . காரணம் அதில் ஒன்றும் மிகை இல்லவே இல்லை. இந்த ஏற்பாட்டைக் கிராமச் சங்கங்களிலும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள், கூடிய விரைவில் சட்டத்தைத் திருத்துவதாகச் சொன்னார்கள். சட்டத்தைத் திருத்துவது என்றால் எப்படியும் ஏழெட்டு மாதங்களுக்கு மேல் ஆகும். ஆதலால், உடனடியாகச் சில திருத்தங்களை யாவது செய்யவேண்டும். பல சங்கங்கள் லேவாதேவி செய்யாமல் இருப்பதற்கு சட்டத்திலே இருக்கும் பிரச்னையே ஒரு காரணமாகவும் இருக்கிறது. உதாரணமாக, நிர்வாகஸ்தரை மாற்றி வேறொரு நிர்வாகஸ்தர் ஒரு சங்கத்திலே வந்துவிட்டால் அவர்கள் புத்தகத்தைக் கொடுக்காவிட்டால் அந்தப் புத்தகத்தை எடுத்துக்கொள்ளும் அதிகாரம் யாருக்குமே கிடையாது. அம்மாதிரி பல ஆண்டுகளாக பல சங்கங்கள் வேலை செய்யாமல் இருக்கின்றன. இது ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்குத் தெரியும். அரசாங்கத்திற்கும் தெரியும். இதற்கான ஒரு சிறிய திருத்தம்கூட அரசாங்கம் செய்யவில்லையென்றால், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவரசாங்கத்தாரின் கால தாமதமான செயலும் ஒரு காரணமாக இருக்கிறது என்று சொன்னால் அமைச்சர் அவர்கள் மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விரிவான திருத்தங்கள் கொண்டுவரும்வரையில் காத்திராமல் அதற்குள்ளாகச் செய்யவேண்டிய திருத்தங்களை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு இயக்கத்தை அதிகமாக விரிவாக்கவேண்டுமென்று சொல்லும் போது இந்த ஆண்டிலே மத்திய அரசாங்கம் கூட்டுறவுத் துறைக்கும் விற்பனை வரி விதித்ததானது கூட்டுறவு இயக்கத்திற்கே ஒரு பெரிய முட்டுக் கட்டை, ஒரு தடை என்றுதான் சொல்ல வேண்டும். அதை உண்மையிலேயே நம்முடைய அரசாங்கம் எதிர்த்தார்கள். அதற்கான வேண்டுவன செய்தார்கள். அதற்கு நம்முடைய ராஜ்ய அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். இருந்தபோதிலும் அதனால் ஓரளவு பலன் இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். கிராமாந்திர சங்கங்கள், மத்திய பாங்குகள், ராஜ்ய கூட்டுறவு பாங்கு, அர்பன் பாங்கு, ஸ்டாப் சொஸைட்டி போன்றவைகளுக்கெல்லாம் விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் மார்க்கெட்டிங் சொஸைட்டிகளுக்குப் பூரணமான விதிவிலக்கு கிடைக்கவில்லை. பண்டகசாலைகளுக்கெல்லாம் ஏதோ ரிபேட்டாகக் கொடுக்கலாம் என்ற முறையிலே ஏதோ மழுப்பலாக மத்திய அரசாங்க நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது. வேண்டுமானால், பெரிய ஆலைகள் **(Mills)** கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நடத்தும்போது, அவைகளுக்கு விற்பனை வரி போடுவதைக்கூட நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், இதர விவசாயிகள் " கன்ஸ்யூமர் " ஆர்க்கனேசேஷனுக்குப் போடுவது இயக்கத்தின் வளர்ச்சியைத் தடைப்படுத்துவதாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். **Full finance scheme Guarantee** ஐப்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே அரசாங்கத்தினுடைய **Guarantee** கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், பத்து சத விகிதம் வரையில் அரசாங்கம் கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்றும், மூன்றில் ஒரு பங்கு கூட்டுறவு சங்கத்தின் பொறுப்பு என்றும் போடப்பட்டிருக்கிறது. ஆனால், கூட்டுறவாளர்

கேட்டது 90 சத விகிதம் வரையில் அரசாங்கத்தின் "காரண்டி" இருக்கவேண்டும், மொத்தத்தில் பத்து சத விகிதம் over all "காரண்டி" யாக இருக்கவேண்டுமென்று கேட்டோம். ஆனால், அரசாங்கத்திலே சற்று குறைவாகக் கொடுத்ததன் காரணமாக கூட்டுறவாளர்களுக்குத் தாராளமாகப் பணம் கிடைப்பதற்கு ஏதோ ஒரு தடையாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன் இருந்தபோதிலும் அதைப் புனராலோசனை செய்து 90 சத விகிதம் என்ற அளவில் அரசாங்கம் அவர்களுடைய முடிவை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். Full finance chseme என்று சொல்லும்போது, இம்மாதிரி காரண்டி கொடுத்ததோடு கூட, ஒரு ஜில்லா பூராவுக்கும் ஒரு ப்ளாக்கிலே கொடுப்பது என்று இல்லாமல் எல்லா இடங்களுக்கு இது விஸ்தரிக்கப்படவேண்டும். ஒரு ஜில்லாவில் ஒரு பிளாக்குக்குக் கொடுத்துவிட்டால் விவசாயிகளுக்குப் பூரணமான கடன் வசதிகள் கிடைக்கும் என்று சொல்லி விட முடியாது. எல்லா இடங்களுக்கும் கொடுக்கும்படியாக இந்தத் திட்டத்தை உடனடியாக எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த புல் பைனன்ஸ் ஸ்கீம் என்பது, இப் பொழுதுநடைமுறையிலே இருப்பது அவ்வளவு சிறந்ததாக இல்லை. ஸ்கீமிலே கொடுக்கப்படவேண்டிய பணத்தையும் கூட்டுறவு சங்கங்களுக்கே கொடுத்து அதற்கு மேல் தேவைக்குத் தக்கவாறு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த புல் பைனன்ஸ் ஸ்கீமை நல்ல முறையிலே நடத்த வேண்டும் என்று திரும்பவும் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது அரசாங்கம் தக்காவி கடன்கள் கொடுக்கிறார்கள். அரசாங்கம் நேரிடையாகக் கொடுப்பதை நிறுத்தி, அந்தப் பணத்தையும் கூட்டுறவு சங்கத்திலே கொடுத்து, கூடியவரை பூரணமாக, சீக்கிரமாக கிடைக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கூட்டுறவு இயக்கத்திலே கோரக் கூடிய 10-ல் ஒன்று ஷேர் கேபிடலாக இருக்கவேண்டும் என்பதால், பல இடங்களிலே, விவசாயிகள், கூட்டுறவு இயக்கத்தின் மூலம் அடைவதைவிட, அரசாங்கத்திலேயே பணம் கிடைத்தால் பாதகம் இல்லை என்கிற மனப்பான்மை போக வேண்டுமானால், இந்தத் தக்காவிக் கடன்களையும் கூட்டுறவு இயக்கத்தின் மூலமே கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்திலே கொடுக்கும் கடன்களுக்கு பர்ஸ்ட் சார்ஜ் கொடுக்க வேண்டும் என்று பலமுறை வற்புறுத்திச் சொல்லியும், அரசாங்கத்தில் ஒரு முடிவு எடுக்க அதிகக் காலதாமதம் ஆகிறது. இப் பொழுது $22\frac{1}{2}$ கோடி கொடுப்பதில், பணம் பூராவும் அரசாங்கத்தின் பணம். அது பந்தோபஸ்தாக இருக்கவேண்டுமானால், அதற்கு பர்ஸ்ட் சார்ஜ் மிகவும் அவசியம். கூட்டுறவு இயக்கத்திலே பணம் வாங்குவதில், கால தாமதம் என்றால், பணம் சாங்ஷனில் தாமதம் இல்லை. பணம் சாங்ஷன் ஆனபிறகு, பத்திரம், வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்குவது இவற்றிலெல் லாம், காலதாமதம் ஏற்படுகிறது. இந்த பத்திரம் ரெஜிஸ்டர் செய்யும் முறையைக் கைவிட்டு, ஒரு டிக்ளரேஷன் ஒன்று எழுதிக் கொடுத்தால், அது சப்ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் பதிவாகக்கூடிய நிலை இருக்கவேண்டும். இந்த மாதிரி முறையை பம்பாய் ராஜ்யத்தில் நல்ல முறையிலே நடத்து கிறார்கள். நமது ராஜ்யத்திலும் அம்மாதிரி ஒரு நல்ல முறையை ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோடௌன் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். கொடௌன் கட்டுவதில், நிலம் அக்வொயர் பண்ண வேண்டுமானால், அப்படி அக்வொயர் பண்ணுவதிலும், எலியனேஷன் பண்ண வேண்டுமானால், அப்படி எலியனேஷன் பண்ணுவதிலும், கால தாமதம் ஏற்படுகிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கூட்டுறவு கோடௌன் கட்டுவதில், எமர்ஜென்ஸி பிரொவிஷன் ஆப் தி ஆக்டை உபயோகப்படுத்தி, அதற்கு எந்த விதத்தி லும் காலதாமதம் ஏற்படாமல் இருக்க கலெக்டர்களுக்கு இவ்வளவு நாட் களில் செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டால் சீக்கிரமாக முடியும். அப்படி ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

25th April 1960] [Sri K. S. Subramania Gounder]

கூட்டுறவு மத்திய, ராஜ்ய பாங்கிகளுக்கு சர்க்கார் ஷேர் காபிடல் மாட்சிங் எமௌண்டாகத்தான் கொடுக்க முடியும் என்று இருப்பது நியாயம் இல்லை. கூட்டுறவு இயக்கம் வளர்ச்சியடைய வேண்டுமானால், மாட்சிங்காக பங்குத் தொகை கொடுக்கக்கூடாது. எந்த அளவுக்கு சர்க்காருடைய பங்குத் தொகை தேவைப்படுகிறதோ, அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும்.

நம் ராஜ்யத்தில் ஒரு கூட்டுறவு காலேஜ் ஏற்படுத்த வேண்டும். இந்த விஷயத்திலே, ஏற்கனவே, அரசாங்கமே ஆரம்பிக்க ஒரு யோசனை இருந்து வந்தது. கனம் அமைச்சரவர்கள் அந்த யோசனை எந்த நிலையில் இருக்கிறது என்பதை தங்கள் பிரசங்கத்தில் குறிப்பிடவில்லை. நம் ராஜ்யத்தில் அதிகமாக ஆபீசர்கள் தேவைப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் நல்ல முறையிலே பெருகுவதற்கு நல்ல வாய்ப்புகள் இருக்கிற காரணத்தினால், சீக்கிரத்தில் ஒரு கூட்டுறவு காலேஜ் ஆரம்பிக்கவேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கரை ஆலை ஒன்று சேலம் ஜில்லாவில் ஆரம்பிக்கப் போவதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மொத்தத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் நம் ராஜ்யத்திற்கு வரும் என்றார்கள். குறைந்தது ஆறு ஆலைகளாவது நம் ராஜ்யத்தில் நிறுவ முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், பம்பாய் ராஜ்யத்திலே அதிகமாக கூட்டுறவு முறையில் ஆலைகள் இருக்கும்போது, என் நம் சென்னை ராஜ்யத்தில் அம்மாதிரி அமைக்க முடியாது என்று கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்காரிலும், கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகளுக்கு அதிகமாகச் சலுகைகள் கொடுக்கத் தயாராக இருக்கும்போது, நம் ராஜ்யம் அதைப் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சர்க்கரை ஆலைகளுக்கு பிஸினஸ் மானேஜர் போடும்போது, ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார் கிரேடில் போடவேண்டும் என்று குறிப்பிடுகிறேன். பம்பாய் ராஜ்யத்திலே, பிஸினஸ் மானேஜராக ஐ.ஏ.எஸ். ஆபீசர்களையும், நிடையரான ஐ.ஸி.எஸ். ஆபீசர்களையும் போடுகிறார்கள். சர்க்கரை ஆலைகளில் இதர எஞ்ஜினீயர்கள் ரூ. 1,000 சம்பளம் வாங்கும்போது, நாம் ஒரு டெபுடி ரெஜிஸ்ட்ரார் அவர்களை வைத்திருப்பது, அவ்வளவு உசிதமாக இல்லை. நல்ல தகுதி உள்ளவர்களாகப் பார்த்து, ஜாயின்ட் ரெஜிஸ்ட்ரார் அளவில் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

இப்பொழுது க்ரெடிட் அண்டு மார்கெடிங் டெபுடி ரெஜிஸ்ட்ரார்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிறார்கள். இரண்டு ஜெனரல் டெபுடி ரிஜிஸ்ட்ரார்களும் இருக்கிறார்கள். என் அபிப்பிராயம், இந்த க்ரெடிட் அண்டு மார்கெடிங் போஸ்டை எடுத்துவிட்டு, ஒரு ஜில்லாவிற்கு, மூன்றோ அல்லது நான்கோ ஜெனரல் டெபுடி ரெஜிஸ்ட்ராராகப் போட்டு விட்டால், வேலை நல்ல முறையிலே நடைபெற சௌகரியலாமாக இருக்கும். அவர்கள் ஏரியாவை குறைக்கலாம். அந்த அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஜீப்புகள் ஒவ்வொரு ஸ்பெஷல் ரெஜிஸ்ட்ராருக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜெனரல் டெபுடி ரெஜிஸ்ட்ராருக்கும் ஜீப்புகள் கொடுக்கப்படவேண்டும். மேலும் எங்கெல்லாம் டெலிபோன் வசதிகள் இருக்கின்றனதேவா, அங்கெல்லாம் **Deputy Registrar Office**-ல் டெலிபோன் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். கிராமாந்திர சங்கங்களிலிருந்து, ஜில்லா ஹெட்குவார்ட்டர்சுக்கு வந்து தகவல் தெரிந்துக்கொள்ள ஏகப்பட்ட பிரயாணச் செலவு ஆகிறது. ஆகவே, டெலிபோன் வசதியிருந்தால், எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் டெலிபோன் மூலமாகத் தகவல்களைத் தெரிந்துக்கொள்ள சௌகரியமாக இருக்கும். சர்க்காருக்குக் குறைந்த செலவுதான்; ஆனால் அதில்லாவிட்டால், சங்கங்களுக்கு அதிகப்படியான செலவு ஏற்படுகிறது. அதைத் தவிர்த்தால், அவர்களுக்கு அந்த பணம் மிச்சப்படும்.

நண்பர் எம். பி. சுப்பிரமணியம், காடாம்பூர் சங்கத்தைப்பற்றிச் சொன்னார்கள். அந்த சங்கத்திலே தவறு ஏற்பட்டுவிட்டது உண்மைதான். ஆனால் தவறு தெரிந்தவுடன் உடனடியாக பணம் பூராவும் வசூல் செய்யப்பட்டு விட்டது. அப்படிச் செய்தது குற்றமா ? என்று கேட்க விரும்புகிறேன். இம்மாதிரி விசாரணையில் தாமதம் என்றால், அது தனி சமாசாரம், இதிலே எல்லாப் பணமும் வசூலிக்கப்பட்டு, எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களுக்காகத் தாமதம் என்பது சரியில்லை. இந்தக் கட்சியைச் சேர்ந்தவர், அந்தக்கட்சியைச் சேர்ந்தவர் என்றெல்லாம் சொல்வது உசிதமில்லை.

பேசுவதற்கு இந்த வாய்ப்புக் கொடுத்ததற்காக, சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன்.

11-30 a.m.

SRI S. M. ANNAMALAI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் லேபர் டிமாண்டில் பேசுகிறபோது கைத்தறித்துணி விற்பனையானது ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வருகிறது என்று சொன்னேன். இன்றைய தினம் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அதைப்பற்றி மிகவும் தெளிவாகச் சொல்வார் என்று எதிர்ப்பார்த்தேன். ஆனால் விளக்கம் சொல்லவில்லை. இப்பொழுது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பைப் பார்க்கும்போது சென்ற ஆண்டு அதாவது 1959 60-இல் 81·01 லட்சமும், 1958–59-ல் 642 லட்சமும், இப்போது இருப்பது 16·81 லட்சம் தான். சப்ளிமெண்ட்டரி டிமாண்டு மூலமாக கொடுத்தது சுமார் 18 லட்சம் ரூபாய். இந்த அளவில் ரிபேட் கொடுத்து வருகிறார்கள். அதாவது ஆண்டுக்கு ஆண்டு ரிபேட் குறைந்து கொண்டேதான் வருகிறது. 1959–60-ம் ஆண்டுக்கு இந்த மாநிலக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு ரிபேட்டாகக் கொடுத்த தொகை 34·81 லட்சம் ரூபாய் தான். இது சென்ற ஆண்டு இருந்ததை விட குறைந்து கொண்டே தான் வருகிறது என்பதை நான் தொழிலாளர் இலாகா மானிய கோரிக்கையின் மீது பேசும்போது சொன்னேன். இதற்கு விளக்கமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக அவர் கொடுத்திருக்கும் அறிக்கையில் 1960–61-ம் ஆண்டு ரிபேட் தொகையாக சுமார் 75 லட்சம் ரூபாய் என்றுகூறப்பட்டிருக்கிறது. பட்ஜெட் டிமாண்டைப் பார்த்தால் 52 லட்சம் ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த 52 லட்சத்திற்கும் 75 லட்சத்திற்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்களே இப்படிப்பட்ட எண்ணிக்கையை விளக்கும்போது சற்று நன்றாகத் தெரிந்து கொண்டு விளக்க வேண்டும். அப்படித் தெரிந்து கொண்டால் இந்தக் கன்பூஷன் ஏற்படாது. மத்திய சர்க்கார் கொடுத்த 52 லட்சம் ரூபாயும் சேர்ந்து செலவானது 75 லட்சம். அது தான் வித்தியாசம்.

SRI S. M. ANNAMALAI: அதற்கு முன் கொடுத்த புள்ளி விவரங்களுக்கு கனம் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு அடுத்தபடியாக கைத்தறி நெசவுத் துணியானது ஆண்டுக்கு ஆண்டு பிற நாடுகளுக்குச் செல்வது மேலும் மேலும் குறைந்து கொண்டே வருகிறது. 1957-ம் ஆண்டில் 49·1 மிலியன் கெஜம் துணி இந்த நாட்டிலிருந்து வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதைப் போலவே 1959-ம் ஆண்டில் 39.6 மிலியன் கெஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1959-ம் ஆண்டில் 30·7 மிலியன் கெஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே கைத்தறித் துணி ஏற்றுமதி ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வந்திருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் சர்க்கார் அதற்கு தக்க முயற்சி எடுக்கவில்லையா அல்லது வேறு நாடுகளிலிருந்து அதற்கு போட்டா போட்டி அதிகரித்து வருகிறா என்பதை அறிய வேண்டும். போட்டா போட்டி இருந்தால் அதைத் தடுக்க வேண்டிய அளவு, போதுமான அளவில் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன். இதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

25th April 1960] [Sri S. M. Annamalai]

அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ப்ளீடிங் மெட்ராஸ் என்ற துணியானது மட்ட ரகத் துணியாக சப்ளை செய்யப்பட்டதால் அங்கு அதற்கு கிராக்கி குறைந்து விட்டது என்று கனம் அமைச்சர் விளக்கமாகச் சொன்னார். அந்தத் துணி நல்ல அழகாக இருக்கிறது என்றும் அதன் வர்ணம் நல்ல முறையில் இருக்கிறது என்றும் கனம் அமைச்சர் அவர்கள் இந்த சட்ட மன்றத்தில் குறிப்பிட்டார். இவ்வளவு நல்ல துணி அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது தடை செய்யப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் மட்ட ரகத் துணியை அங்கு ஏற்றுமதி செய்யப்பட்டதால் அதன் கிராக்கி குறைந்து போய் விட்டது என்றும் சொல்லப்பட்டது. அது உண்மையானால் அதற்குக் காரணமாக இருந்தவர்கள் மீது ஏன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை ? இப்படி பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய துணிகளுக்குக் கூட இப்படிப்பட்ட மோசம் நடந்திருக்கிறது என்றால் மற்றவைகளில் என்ன நடக்காது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கைத்தறித் துணிக்கு வேண்டிய பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் விளக்கமாகச் சொன்னார். அவர் இந்தத் துணியைப்பற்றிச் சொல்லும்போதுகூட ரொம்பவும் விளக்கமாகச் சொன்னார். அதைக்கண்டு நானும் ஆச்சரியப்பட்டு நான் கூட அந்தத் துணியை வாங்கலாமோ என்று கூட நினைத்து அதை வாங்குவதற்கும் ஆசை ஏற்பட்டது.

THE HON. SRI R. VENKATARAMAN: வாங்குங்கள், வாங்குங்கள்.

SRI S. M. ANNAMALAI: ஆனால் அமெரிக்காவில் பிரசாரம் செய்ய கூடிய நிலைமையில் நம்முடைய ஸ்டேட் ஹாண்ட்லூம் போர்ட் என்ற ஒரு போர்ட் இருக்கிறது. அந்த போர்ட் ஏன் இதைப்பற்றி அங்கு பிரசாரம் செய்யவில்லை? அதைப்போலவே அமெரிக்காவிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற பொருள்களுக்கு சாதாரணமாக க்வாலிட்டி கண்ட்ரோல் என்று ஒன்றை அமெரிக்காவில் வைத்திருக்கிறார்கள். அதைப் போலவே நம்முடைய மாகாணத்திலும் இந்த மாகாணத்திலிருந்து பிற நாடு களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களுக்கு அம்மாதிரி ஒரு திட்டத்தை அமைத்து அதன் மூலம் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்கள் நல்ல பொருள்களாக ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் அமைக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுதுதான் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார், அதற்கு ட்ரேட் மார்க் செய்யப் போகிறோம் என்று. அதற்குள் பிற நாடுகளுக்கு தேவையான சிலவற்றை அனுப்பப் போகிறோம் என்றும் சொல்கிறார். இப்படிப்பட்ட நடவடிக்கையை இதற்கு முன் எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்படாமல் நல்ல துணிகள் மேலும் மேலும் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக இருந்திருக்கும் அல்லவா ? அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொடுத்திருக்கலாமல்லவா ? ஆகவே கைத்தறி நெசவுத் தொழிளர்களுக்குத் திட்டவட்டமான நல்ல கொள்கைகளை அமைத்துக்கொடுக்கவேண்டும். கனம் அமைச்சா அவர்கள், கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கையைப்பற்றிச் சொல்லும்போது அவர்கள் எப்பொழுதுமே சர்க்கார் கொடுக்கக்கூடிய ரிபேட்டை வைத்துக்கொண்டு வாழமுடியாது என்று சொன்னார். அப்படி அவர்கள் ரிபேட் தொகையை நம்பி வாழ முடியாது என்று சொன்னால், அவர்களுக்கு வருங்காலத்தில் என்ன திட்டம் இந்தச் சர்க்காரால் வகுக்கப்பட்டிருக்கிறது ? ஒரு காலத்தில் சேலைகள், கரைபோட்ட வேஷ்டிகள் நெய்வது சாதாரணமாக கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்று கூக்குரல் ஏற்பட்டு அந்த சமயத்தில் ராஜாஜி அவர்கள் அவைகளைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும் என்று சொன்னார். அப்படி ஒதுக்கினால் அதன் மூலமாக அவர்களுக்கு கொஞ்சம் அனுகூலம். . . .

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள், அப்படி ஒதுக்கினால் அவர்களுடைய பிரச்னை தீர்ந்து விடும், அப்படி ஒதுக்கினால் ரிபேட்டை எடுத்து விடலாம் என்று சொல்லுகிறாரா? அதைப்பற்றி அவர் கைத்தறி நெசவாளர்களுடன் கலந்தாலோசித்து இருக் கிறார்களா என்பதைப்பற்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

[25th April 1960

Sri S. M. ANNAMALAI: நான் ரிபேட்டை எடுத்து விடவேண்டும் என்று சொல்லவில்லை. நான் குறிப்பிட்டது அதைப் புகுத்தினுல் அதன் மூலம் ஓரளவு வெற்றி பெற்றுல் அதைப் பார்த்து, வேண்டுமானுல், நல்ல முறையில் உற்பத்தி ஆகி விற்பனை ஆகிறது என்று தெரிந்து கொண்டால் அதன் பிறகு வேண்டுமானுல், ரிபேட் தொகையை எடுத்து விடலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் திறப்பதாக இருக்கிறது. ஏறத்தாழ 91·1 சத விகிதம் கூட்டுறவு சங்கங்களின் கீழ் கிராமங்களைக் கொண்டு வருவதாகச் சொன்னுர். சாதாரணமாக கிராமங் களில் இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் யாருக்குப் பயன்படுகிறது என் பதைப்பார்க்க வேண்டும். இது பலருக்கு பயன்படவில்லை. அதற்குக் காரணம் ஒரு சில கூட்டத்தார் அதன் உள்ளே நுழைந்து கொண்டு சாதாரணமாக இந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சகல வசதிகளும் பெறலாம் என்று வேலை செய்கிருர்கள். சிலர் உறுப்பினராக வேண்டும் என்று நினைத்தால் அவர்களால் உள்ளே நுழைய முடியவில்லை. ஆனுல் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம் ஆர்டர் போட்டு விட்டோம், அதனுல் எல்லோரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று. ஆனுல் அந்த ஆர்டர் போட்டது வாஸ்தவமாக இருந்தாலும் அந்த ஆர்டர் நல்ல முறையில் நடைபெறவில்லை. இதைப்பற்றி நான் கனம் அமைச்சர் அவர் களுக்கு ஏறத்தாழ இரண்டு மூன்று கிராமங்களிலிருந்து வந்த புகார்களைப் பற்றித் தெரிவித்தேன், இப்படிப்பட்ட புதிய கூட்டுறவு சங்கங்களில் புதிய உறுப்பினர்கள் நுழைய வேண்டுமானுல் அவர்களால் நுழைய முடிய வில்லை என்று. வட ஆர்க்காடு மாவட்டத்தில் சென்ட்ரல் பாங்கிற்கு ஸ்பெஷல் ஆபீசரை நியமித்தார்கள். அதில் ஏதோ சில ஹம்பக்குகள் நடந்திருக்கின்றன என்று ஸ்பெஷல் ஆபீசரை நியமித்தார்கள். விசாரணை நடந்தது. ஸ்பெஷல் ஆபீசர் போட்டு விசாரணை நடத்தப்பட்டது. அந்த விசாரணை என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆனுல் நான் கேள்விப் படுகிறேன், அந்த சென்ட்ரல் பாங்கினுடைய பணத்தில் 75 ஆயிரம் ரூபாயை ரைட் ஆப் பண்ணப்போவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மை தானு என்பதையும் அந்த நிகழ்ச்சியைப்பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்தச் சட்ட மன்றத்தில் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் விவசாய மார்க் கெட்டிங் சொசைட்டிக்கு ஒரு செக்ரடரியை நியமித்திருக்கிருர்கள். இந்தக் காலத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கும்போது ரிடயரானவர் ஒருவரை அங்கே செக்ரடரியாகப் போட்டிருக்கிருர்கள். இதை மாகாண சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தபோதிலும் அவரே மேலும் தொடர்ந்து வேலை பார்த்துக்கொண்டிருக்கிருர். அதன் உண்மை கனம் அமைச்சருக்குத் தெரியுமோ தெரியாதோ? தெரிந்திருந்தால் இது வரைக்கும் அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு பண்ணை. இது சம்பந்தமாக ஒரு கேள்வி கூட நான் கொடுத்தேன். நல்ல முறையில் பயிரிடுவதற்கு கூட்டுறவுப் பண்ணைகளை அமைக்க வேண்டும். சாதாரணமாக 100 அல்லது 150 ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் உணவைப் பெருக்க முடியாமல் இருக்கிறது. வெறும் தரிசு நிலமாகப் போட்டு வைத்திருக்கிருர்கள். நல்ல முறையில் பயிரிடுவதற்கு அப்படிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள் பணம் தருவதாகவே இல்லை. ஏதோ விளைந்தது போதும் தங்களுக்கு மாதச் சம்பளம் மாதிரி பணம் வந்து விடுகிறது என்ற எண்ணத்தில் அவர்கள் இருந்து கொண்டு விவசாயிகள் நல்ல முறையில் பயிரிடுவதற்கு பணம் கொடுப்பதாகவே இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் கூட்டுறவு முறையில் பயிரிட்டு வந்தால் நல்ல பலனடையலாம் என்று தோன்றுகிறது. அந்த இடங்களில் கூட்டுறவு முறையில் விவசாயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். அப்படி ஆரம்பிக்க வேண்டுமென்றுல் அந்த இடத்தில் ஏதோ

சில விதிகள் தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நிலச் சுவாந்தார்கள் ஒத்துக்கொண்டால்தான் அப்படி ஆரம்பிக்கலாம் என்று தடை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட விதியை ரத்து செய்துவிட்டு நிலச் சொந்தக்காரர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் கூட்டுறவு முறையில் ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் சி.எஸ்.ஆர். இருக்கிறார்கள். இண்டஸ்ட்ரீஸ், கூட்டுறவு முதலியவைகளுக்கு ஈ.ஓஸ். போட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய சி.எஸ்.ஆர். களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லாமல் இருக்கிறார்கள். கடன் வேண்டும் என்று சொன்னால் அதை சாங்கிஷன் செய்கிறவர் சூபர்வைசராக இருக்கிறார். உண்மையாகவே சி.எஸ்.ஆர்.களுக்கு நல்ல அதிகாரங்கள் கிடையாது. ஆகவே சி.எஸ்.ஆர். களுக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே யார் 10½ ரூபாய் கொடுத்து கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக ஆகி விடுகிறார்களோ, அவர்களுக்கு சமுதாய நலத் திட்டப் பகுதிகளில் ஆயிரம் ரூபாய் கடன் தேவை என்று கேட்டால், கூட்டுறவு சங்கங்களிலே அங்கத்தினர்களாக இருக்கின்றவர்களுக்கு கடன் தர முடியாது என்று சர்க்காரின் ஒரு உத்தரவு இருக்கிறது. அதன் காரணமாக கூட்டுறவு சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கக்கூடிய வர்கள் விலகி, சமுதாய நலத்திட்டப்பகுதிகளில் கடன் பெற்று வரு கிறார்கள். இப்படி கூட்டுறவு சங்கங்களிலிருந்து நாளுக்கு நாள் உறுப் பினர்கள் விலகிக் கொண்டே இருந்தால், கூட்டுறவு சங்கங்களே அழியக் கூடிய நிலை வரும் என்று கூறிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக சர்க்கரை ஆலைகளைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் ஆறு ஆலைகளுக்கு மத்திய சர்க்கா ருக்கு சிபாரிசு செய்தார்கள். அதில் நான்காவது கிடைக்கும் என்று இவர்கள் மிகமிக ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அதே சமயத்தில் விவசாய அமைச்சர் அவர்கள், எப்படியும் 4 ஆலைகள் உண்மையிலேயே கிடைக்கும் அல்லது மூன்றாவது திட்டவட்டமாக கிடைக்கும் என்று அழுத்தம் திருத்தமாக, வட ஆற்காடு மாவட்டத்திலே சுற்றுப் பயணம் செய்யும் போது சொன்னார்கள். அந்த சமயத்திலே, திருவண்ணாமலைக்கு சர்க்கரை ஆலை வேண்டும் என்று பல ஆண்டுகளாகவே வற்புறுத்தி வருகின்றேன். அதை உடனடியாக கவனிக்கிறேன் என்று சொல்லி வந்தார்கள். அதன் படி இப்பொழுது திருவண்ணாமலையிலே சர்க்கரை ஆலையை உண்டாக்கு வதற்காக வேண்டி பல உறுப்பினர்களை அந்த இடத்திலே சேர்த்து வைத்துக் கொண்டு சர்க்காரிடத்திலே, ஆலையை ஆரம்பிக்கவேண்டு மென்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத் திலே பேசுகிறபோது சொன்னார்கள், ஒரு சர்க்கரை ஆலை நாமக்கல்லில் ஏற்படும் ; இன்னும் ஒன்று எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் என்று இன்னும் தெரியவில்லை என்று. இரண்டாவதாக ஆரம்பிக்கப் போகின்ற அந்த சர்க்கரை ஆலையையாவது தயவு செய்து திருவண்ணாமலையில் ஆரம்பிக்கவேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்ளு கிறேன். பல ஆண்டுகளாக இருந்து வரும் இந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்ளு கிறேன்.

* **Sri M. R. KANDASWAMI MUDALIAR** : கனம் உதவி சபா நாயகர் அவர்களே ! நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில விஷயங்களைக்கூற விரும்புகிறேன்.

[Sri M. R. Kandaswami Mudaliar] [25th April 1960

கூட்டுறவு ஸ்தாபனம் மிகவும் போற்றுதற்குரிய முறையிலே நம்முடைய மாகாணத்திலே செயல்பட்டுக் கொண்டுவருகிறது. நாட்டு மக்கள் தங்களுடைய தொழில்களை திறம்பட நடத்தி, அதன் மூலம் வரக்கூடிய வருவாயை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொண்டு தொழில் துறையிலே முன்னேறுவதற்கு இது ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்த ஸ்தாபனம் மிகவும் நல்ல முறையிலே வேலை செய்து கொண்டு வருகிறது என்பதை போற்றுதற்கு கடமைப்பட்டுள்ளேன். அதோடு கூட பல கூட்டுறவு சங்கங்களை புதிதாக ஏற்படுத்தி பல ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்து வருகின்றோம்.

கிராம விவசாய பாங்குகளையெல்லாம் கிராம மக்கள் விரும்பி வரவேற்கிறார்கள். நில அடமான பாங்குகளிலும், மற்ற பாங்குகளிலும் கடன் வாங்குவது மிகவும் தொந்தரவாக இருக்கின்ற காரணத்தினாலே, இந்த பாங்கு விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக இருக்கிறது. விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள, விவசாய பாங்குகள் மிகவும் வசதியாக இருக்கின்றன. ஆகவே அதை உடனடியாக எல்லா இடங்களிலேயும் ஏற்படுத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் தகுந்த முயற்சியை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவு சங்கம் நல்ல முறையிலே, பணியாற்றி வருகிறது. நெசவாளர்களுக்கு அரசாங்கம் எல்லா வகையிலேயும் உதவிகள் செய்து கொண்டு வருகிறது. நமது மாகாணத்தில் உள்ள 5 லட்சம் நெசவாளர்களில் 2 லட்சம் பேர் கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறார்கள். அவர்கள் மட்டும்தான் அரசாங்க ரிபேட் தொகை வசதிகளைப் பெற முடிகிறது. ஆனால் மற்றுமுள்ள 3 லட்சம் பேர் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அவற்றைப் போக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார் என்றாலும், அதனால் நன்மை ஏற்படவில்லை என்று மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் மீது தவறு இல்லை. அவர் பெரும் பொறுப்பு எடுக்கிறார். இருந்தாலும் நன்மை ஏற்படவில்லை. இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கக் கூடியவர்கள், விவசாயிகளும், நெசவாளர்களும்தான். இவர்கள் இருவரும் சமுதாயத்திலே சமநிலையிலே கீழ்த்தட்டில் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முன்னேற முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள்.

இப்பொழுது நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய தொல்லைகள் சொல்லொணாத அளவிலே இருக்கின்றன. நான்கைந்து மாத காலமாக 10 ராத்தல் நூல் கட்டு ஒன்றுக்கு 5 ரூபாய் முதல் கொண்டு 7 ரூபாய் வரையில் விலை ஏறி இருக்கிறது. 10 ராத்தல் கட்டு வாங்கி நெய்தால் தினசரி கூலி முன்பு 8 கெஜத்துக்கு ஒரு ரூபாயாக இருந்துவந்தது. இப்பொழுது 8 கெஜம் துணி நெய்தால், 6 அணா, 8 அணா கூட பெறமுடியாத நிலை இருக்கிறது. எனவே, நெசவுத் தொழிலை விட்டு விட்டு, வேறு மாகாணங்களுக்கு செல்லலாமா, என்றும் வேறு தொழிலுக்குப் போகலாமா என்று தவித்துக்கொண்டுமிருக்கிறார்கள். நெசவாளர் குடும்பங்கள் மிகவும் தொல்லைபட்டுக் கொண்டு இருக்கின்றன. 8 கெஜம் துணியிலே தினசரி ஒரு உருப்படி நெய்து அதை நான்கு நாட்களுக்கு ஒருமுறை சந்தையிலே விற்று, அந்தப் பணத்திலே சாப்பாட்டுக்கு எடுத்துகொண்டு, மீதியுள்ள தொகையைத்தான் தொழில் செய்ய பயன்படுத்தி நெசவு செய்து ஜீவனம் செய்துகொண்டு இருக்கின்றனர். அவர்களுடைய மூலதனம் தறி ஒன்றுக்கு 25 ரூபாய் தான். அதைக் கொண்டுதான் நெசவாளி நெய்யவும், விற்கவும், ஜீவனத்துக்கு எடுத்துக் கொண்டு, மீதியை பாவோ, ஊடையோ வாங்கவும் செய்யவேண்டும். இந்த மாதிரி 5 லட்சம் குடும்பங்கள் இந்த மாதிரி 25 ரூபாய் மூலதனத்தை வைத்துக்கொண்டு, அரசாங்கத்துக்கு எந்தவிதமான தொந்தரவும் கொடுக்காதமுறையிலே, தங்களுடைய பொறுப்பை உணர்ந்து, இந்த தேசத்தின் நலனைக்கருதி, தொழிலைச் செய்துகொண்டு வருகிறார்கள். அவர்கள்

25th April 1960] [Sri M. R. Kandaswami Mudaliar]

பட்டினி கிடந்தும் கிளர்ச்சி செய்யாமல் சும்மா இருக்கிருர்கள். அரசாங்கம் அவர்களை இதே நிலையிலே வைத்திருக்குமானுல், அது விபரீதமான நிலையிலே கொண்டுபோய்விடும் என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன். . . ஏனென்றுல் நான் கைத்தறியாளர்கள் வாழும் பகுதியில் இருக்கிறேன். அவர்கள் படும் கஷ்டத்தை நான் பார்த்துக்கொண்டு வருகிறேன். அவர்கள் படும் கஷ்டத்தை பார்த்தால் ரத்தக்கண்ணீர் வடிக்க வேண்டிவரும். இந்தப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் காணும் அதிகாரம் மத்திய சர்க்காரிடம் இருக்கிறபடியால் நமது மாகாண அரசாங்கம் உடனடியாக இப்படிப்பட்ட நிலைமையை போக்க ஒன்றும் செய்யமுடியாத நிலையில் இருக்கிருர்கள். கைத்தறியாளர்களிடம் இருக்கின்ற முதலோ மிக சொற்பம். ரூபாய் 25 தான் முதலாக இருக்கிறது. அதை அவர்கள் சிலவழித்துவிட்டால் தற்சமயம் இருக்கின்ற பொருளாதார நிலைமையால் அதை வைத்துக்கொண்டு எத்தனை நாட்களுக்கு சாப்பிடமுடியும். அவர்களுக்கு வேறு நில புலனே அல்லது உப தொழிலோ இல்லை. இந்நிலையில் அவர்கள் எப்படி வாழமுடியும் என்பதை அரசாங்கம் உணர்ந்து அவர்களுடைய பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு ஒரு முறை இப்படிப்பட்ட அவதியால் சிக்கி வீடுவாசல்களை விட்டு சொந்த மாகாணத்தை விட்டு பக்கத்து மாகாணங்களுக்கும், பட்டிணங்களுக்கும் குடும்பம் குடும்பமாக சென்று பட்டினி கிடந்து பலவகையான இன்னல்களுக்கு ஆளானதை யாரும் மறந்திருக்கமுடியாது. ஆகவே, மத்திய அரசாங்கம் இவர்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும். நம் கையில் அதிகாரம் இல்லை என்று மாகாண அரசாங்கம் சும்மா இருந்தால் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கும் 5 லட்சம் குடும்பங்கள் கிளர்ச்சி செய்யும்படியான நிலைமை ஏற்படலாம். அந்நிலையில் நம்முடைய அரசாங்கத்திற்குத்தான் தொல்லைகள் அதிகரிக்கும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் இதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அரசாங்கத்திற்குத் தெரியாத விஷயத்தை எடுத்துச்சொல்வதாகவோ அல்லது அரசாங்கத்தை பயமுறுத்த வேண்டுமென்றே இதை நான் சொல்லவில்லை. உள்ள நிலைமை அப்படி இருக்கிறது. இன்று நெசவாளி பட்டினி கிடக்கிறுன். இதை உணர்ந்து அவனது பட்டினியை போக்க உடனடியாக பரிகாரம் தேடவேண்டும். இல்லையேல் பெரியதொரு புரட்சியை சமாளிக்க அரசாங்கம் தயாராக இருக்கவேண்டிவரும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

Sri M. JAGANNATHAN : On a point of order, Sir. சபையில் இப்போது கோரம் இல்லாத நேரத்தில் விவாதம் நடத்தலாமா ?

DEPUTY SPEAKER : There is quorum in the House. There are 21 Members present in the House just now. I have counted them. The hon. Member may continue his speech.

Sri M. R. KANDASWAMI MUDALIAR : விவசாயிகளுக்கு சொசைட்டி மூலம் ஒரு வருஷத்திற்கு ஒரு தவணைக் கடன் கொடுக்கிருர்கள். பருவ மழை தவறி விட்டாலோ அல்லது மகசூல் கெட்டுவிட்டாலோ இந்த கடன் தொகையை திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அந்த நிலைமையால் தங்கள் சொத்தை அடமானம் வைத்தோ அல்லது கிரயம், ஜப்தி செய்தோ கடனை திருப்பிக் கொடுக்கும்படி வசூலித்து கொள்ளும்படியான நிலைமை ஏற்படுகிறது. ஆதலால் இந்த ஒரு வருஷ கடனை மாற்றி மூன்று வருஷ தவணையில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இந்த நிலத்தின் மதிப்பு இருக்கிறதே அது நிலத்தின் மீது தற்காலம் என்ன மதிப்பு இருக்கிறதோ அதன்மீது கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தால்தான் தன்னுடைய கடனை தீர்க்க போதிய கடன் வாங்கி தீர்க்க முடியும். 40-50 ஆண்டுகளுக்கு முன்னுல் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் இன்று இருக்கின்ற விலைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே பழைய நிலைமையின் அடிப்படையில் இன்று

கடன் கொடுப்பது ஒரளவு உசிதம் ஆகாது. ஆகவே தற்கால மதிப்பீட்டின் பேரில் கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்களில் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்த தறிகளும் இருக்கின்றன. இரண்டு லட்சம் பேர்கள்தான் கூட்டுறவு சொசைடியில் சேர்ந்திருக்கிருர்கள். அவர்களுக்குத்தான் மில்த்துணியின் பேரில் சர்சார்ஜ் போட்டு அதை ரிபேட்டாக கொடுக்கிருர்கள். மற்றும் உள்ள நெசவாளர்களுக்கு இந்த நன்மை தரப்படவில்லே. மொத்தம் இருக்கின்ற 5 லட்சம் நெசவாளர்களே கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவருவது நல்லதுதான். ஆனல் அதைச் செய்யும் நிலைமையில் இன்று நாம் இல்லே. ரிபேட்டு வாங்கி தொழில் நடத்தும் கூட்டுறவு சங்கங்களில் உள்ள தொழிலாளர்கள் நிலைமையே இன்று மோசமாக இருக்கையில் தனிப்பட்ட நெசவாளர்கள் அரசாங்கத்தினுடைய ரிபேட் ஒத்தாசை இல்லாமல், மில் முதலாளிகளின் போட்டியை சமாளித்துக்கொண்டு அவர்கள் தொழில் செய்து வாழ்வது என்பது மிகவும் சிரமமான காரியம். ஆயில் கூட்டுறவு சங்கங்களுக்கு வெளியே இருக்கின்ற நெசவாளர்களுக்கும் rebate தொகை கொடுக்க வேண்டும். இதை முதல் அமைச்சர் அவர்களிடம் சொன்னபோது எந்த முறையில் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கேட்டார். அவர்களுக்கு நூலே வாங்கி அதன்மீது இந்த ரிபேட்டுதொகையை கழித்துக் கொண்டு கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொன்னேம். அதையே தான் இப்போதும் சொல்லுகிறேன். அப்படிச் செய்தால் எல்லா நெசவாளர்களுக்கும் ஒரளவு நன்மை ஏற்படும். தனிப்பட்ட நெசவாளர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். தற்போது கூட்டுறவு சங்கங்களேச்சேர்ந்த நெசவாளர்களுக்கு மட்டும்தான் அரசாங்கம் வீடுகட்டி கொடுக்கிறது. இவர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும் அப்போதுதான் இந்த நெசவாளர்களுடைய கஷ்டத்தை ஒரளவு தீர்க்க முடியும். நம்முடைய மாகாணத்தில் கைத்தறித் தொழில் முக்கியமான பெரும் பங்கு வகிப்பதின் காரணத்தாலும் இதில் 5 லட்சம் பேருக்குமேல் வேலே செய்கிறபடியாலும் அரசாங்கம் இந்தத் தொழிலுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டியது அவஸ்யம் ஆகிறது. இன்றுள்ள நிலைமை என்னவென்றல் ஒரு பக்கத்தில் புதிய மில் ஆலேகளுக்கு லேசன்ஸ் கொடுத்துக்கொண்டு போவதால் மில் துணி மலே, மலேயாக உற்பத்தி செய்யப்பட்டு குவிக்கப்படுகிறது. இன்னெரு பக்கத்தில் 5 லட்சம் கைத்தறியாளர்கள் தயாரித்த சரக்கு விற்பனேயாகாமல் கிடக்கிறது என்றல் இதில் ஆச்சர்யப்பட எதுவும் இல்லே. நம்முடைய மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகி இந்த நிலைமைக்கு பரிகாரம் தேடவேண்டும். உடனடியாக மத்திய அரசாங்கம் மில்துணி ஆலேகளுக்கு லேசன்ஸ் கொடுப்பதை நிறுத்தும்படி செய்யவேண்டும். இருக்கின்ற மில்களின் தறிகளே அதிகப்படுத்தி உற்பத்தியைப்பெருக்காமல் தடைசெய்யவேண்டும். மற்ற தொழில்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது போல் கைத்தறிக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI T. KARIA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் கொண்டுவந்திருக்கின்ற இந்த மான்யத்தை ஆதரித்து சில கருத்துக்களேச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கமானது நம் நாட்டிலே பெரிதும் விருத்தி அடைந்து இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லே என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தக் கடன் கொடுக்கிற வகையில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த குறுகியகால கடன் கொடுப்பதானது அவைகளுக்கு கடன் மனு போட்டு அது கைக்கு வந்து சேருவதற்கு நாள் ஆகிறது. இந்தக் கடனே ஒரு வருஷத்தவணையில் கொடுக்கவேண்டுமென்று இருப்பதால் இந்த விவசாயி மீண்டும் திரும்பத்திரும்ப கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்தக் கடனே ஒரு வருஷத் தவணையில் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்று இருப்பது விவசாயிகளுக்கு பெரிதும் கஷ்டத்தை உண்டுபண்ணக் கூடியதாக இருக்கிறது என்பதை நம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதுடன் இந்த கால அளவை உயர்த்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிராமங்களில்

25th April 1960] [Sri T. Karia Gounder]

நடக்கிற கூட்டுறவு சங்கங்களில் இந்த லேவா தேவிக்காரர்கள் அதிகாரத்திற்கு வந்து விடுவார்கள். லேவாதேவிக்காரர்கள் அதிகாரத்திற்கு வந்து விட்டால் இந்தக் கூட்டுறவு சங்கங்களால் கிடைக்கும் பலனை கடன் பெருகிற விவசாயி அடைய முடியாத நிலைமைக்கு வந்துவிடுகிறான். சர்க்கார் சட்டத்தின் மூலம் இதை தடுக்கலாம். அல்லது சர்க்காரிலே கூட்டுறவு இலாகாவில் உத்தியோகம் செய்துகொண்டிருக்கிற உத்தியோகஸ்தர்கள் வழியாக இதை தடுக்கலாம் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தவிரவும்கூட நான் இரண்டு மூன்று முறையாக கூட்டுறவு இயக்கத்தில் இருக்கிற சில குறைபாடுகளை இந்தச் சட்டசபை முன்னால் சொல்லியிருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் நினைப்புக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 12 noon.

இன்றைக்கு கூட்டுறவு சட்டத்தில் இருக்கிற ஒரு குறைப்பாட்டினால் எங்கள் திருப்பத்தூர் நகர கூட்டுறவு சங்கத்திலே வெளியார் ஒருவரும் சேர்ந்து பலனை அடைய முடியாத நிலைமை இன்று வரையிலும் நீடித்துக் கொண்டு வருகிறது என்பதை மீண்டும் அவர்கள் நினைப்புக்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் சட்டத்தை நாங்கள் திருத்தினோம், உத்தரவும் போட்டாகிவிட்டது எவரும் கூட்டுறவு சங்கங்களில் சேரலாம் என்று சொன்னாலும்கூட அதன் பலன் இன்னும் அந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசியல் காரணத்தை முன்வைத்து இந்தச் சங்கங்கள் சீரழிந்துவிடக்கூடாது என்பதுதான் என் பயம். இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால்—கூட்டுறவு ஸ்தாபனம் ஒரு பரம்பரை சொத்தா ? கூட்டுறவு இயக்கம் நன்றாக முன்னேற்றம் அடையவேண்டும் என்றால் இந்தச் சட்டத்தையே ஏன் திருத்தக் கூடாது என்கிற சிறிய யோசனையைக் கூட நான் அரசாங்கத்திடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ்காரன் கையில் அது இருந்தால் காங்கிரஸ்காரன் அல்லாதவர்களுக்கு அதில் பதவியே கிடையாது. அதுபோல காங்கிரஸ்காரன் அல்லாதவர்கள் கையில் இருந்தால் காங்கிரஸ்காரனுக்கு அங்கே பதவி கிடையாது என்று இப்படி இருப்பது சரியா ? நான் எங்கள் தொகுதியில்—எங்கள் ஊரில் நடக்கிற விஷயத்தைப் பற்றி மட்டும்தான் சொல்கிறேன். வேறு இடத்தில் நடக்கிறதுபற்றி குற்றம் சொல்வதாக நீங்கள் எல்லோரும் நினைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் ஊரில் முனிசிபல் தேர்தல் வந்தபோது ஒரு கட்சியின் சார்பாக நூறு பேர்களுக்கு மேல் கடன் மனு அனுமதிக்கப்பட்டு பணமும் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப் பட்டேன். ஆகவே இப்படிப்பட்ட செயல்களுக்கு அனுகூலமாக ஒரு சட்டம் இருக்குமானால் அதைத் திருத்தாத வரையில் எல்லா மக்களுக்கும் அதனால் எவ்வித பலனும் இருக்காது என்பதை நான் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைப்பற்றித் தீர யோசனை செய்யும்படியாக என்னுடைய சிறிய யோசனையையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்தக் கூட்டுறவு சங்கத்தில் எக்ஸ்சர்விஸ் மென்களுக்குப் பஸ் ரூட் கொடுக்கப்பட்டு வருகிறது. எங்கள் மதிப்பிற்குறிய ஸ்ரீ ராமையா அவர்கள் இந்தத் திட்டத்தை வேறு வகையில் விஸ்தரிக்கவேண்டும் என்று நாங்கள் இரண்டு மூன்று எம். எல். ஏ. க்கள் சென்று கேட்டதற்கு சம்மதித்தார்கள். அதாவது பஸ் கண்டெக்டர்கள், டிரைவர்கள் இவர்களாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவு சொசைடியை ஏற்படுத்திக்கொண்டால் அவர்களுக்கு பஸ் ரூட் வழங்கப்படும் என்று. அதேபோல கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி மேலும் பஸ் ரூட் புதிதாகக் கொடுக்கின்ற காலத்தில் கூட்டுறவு சங்கத்தின் வழியாகவே எடுத்து நடத்த மக்கள் விரும்பி முன்வருவார்களானால் அதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து அந்தமாதிரியான சலுகையை மக்களுக்குத்தேடித் தருமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் அமோனியம் சல்பேட் பங்கிடுகிற முறையில் விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு நான் கேட்ட உபகேள்விக் குப் பதில் கொடுக்கிறபோது இனிமேல் கூட்டுறவு சங்கத்தின் மூலமாகவே விநியோகிக்கப்படும் என்று சொன்னுர்கள். சீக்கிரமே இந்த உத்தரவைப் போடுவதாகவும் சொன்னுர்கள். கூட்டுறவு முறையில் நடக்கிற உரப் பங் கீட்டு விஷயத்தில் சர்க்கார் அதிக கவனம் செலுத்தி கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு எல்லாம் சரிவரப் போய்ச் சேருவதற்காக ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்ருல் உணவு உற்பத்தியை அதிகமாகப்பெருக்கவேண்டிய இந்தக் காலத்தில் உர விநி யோகங்கள் சரியாக நடைபெருமல் போனுல் மிகுந்த கஷ்டத்தை விளை விக்கும். இது சரியாக நடைபெறவில்லையென்ருல் சர்க்கார் மீது குறை சொல்ல வேண்டியதாக இருக்கும். இதையும் கவனித்துத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நில அடமான பாங்க் விஷயமாக நான் இரண்டொரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். 20 அல்லது 30 வருஷத்திற்கு முன்னுல் இருந்த மதிப்பின்படி இன்றையதினம் கடன் உதவி அளிக்கப்பட்டு வருகி றது. இப்போது கொஞ்சம் உயர்த்தி இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனுல் தற்காலம் இருக்கிற விலையைப் பார்த்தால்—ஏதோ நிலச் சீர்திருத் தம் வரப்போகிறது வரப்போகிறது என்று எல்லோரும் நிலத்தை விற்ப தால் விலை குறைந்துவிட்டது என்று நினைக்கிறபோது நிலத்தின் மதிப்பு அந்தக் காலத்தில் இருந்ததைவிட மிக அதிகமாகவே இருக்கிறது. இனி மேல் நிலப்பிரபுக்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. முப்பது ஏக்கருக்குள் நிலம் இருக்கிற விவசாயிகள் கடன் கோரி வரும்போது இந்த நிலத்திற்கு தற்போது உள்ள விலையின் அடிப்படையில் கடன் கொடுத்து உதவ சர்க்கார் முன்வரவேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

அடுத்தபடியாக வீடு அடமான பாங்க். எது வந்தாலும் நகரங்களுக்குத் தான் வரும். நம் நாட்டிலே சுதந்திரத்திற்கு முன்பும், பின்பும் கூட நகரங்கள்தான் ஓரளவுக்கு முன்னேறி வருகிறது. வீடு அடமான பாங்கு கள் கூட நகரங்களில் எப்படி அமுல் நடத்தப்படுகிறதோ அந்த அளவுககு கிராமங்களில் கிடையாது. இனி மேலாவது கிராமங்களில் உள்ள மக்களும் இந்தப் பலனை அனுபவிக்கக் கூடிய முறையில் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை போலவே பல தொழிலாளிகள் இந்த நாட்டில் இருக்கிருர்கள். பெரும் சாலைவழித் தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் என்று, இவர் கள் எல்லாரும் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நன்மை பெற வழிவகை செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். வெளிநாட்டில் கூட் டுறவுமுறை எப்படி வளர்ந்து இருக்கிறது என்பதை நாம் படிக்கிருேம். இன்னும் நம்நாட்டிலும் அதுஅதிக வளர்ச்சியை அடையவேண்டும் என்ருல் பல தொழிலாளர்களிடையே கூட்டுறவு சங்கத்தை அமைத்து தொழில் துறையில் நல்லமுறையில் கூட்டுறவு இயக்கம் வளரும் படியாகப் பார்த் துக்கொள்ளவேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையில் நான் சொன்னவற்றைச் சுருக்கமாக ச்சொல்லவேண்டு மானுல் குறுகிய காலக் கடன் என்பதை 3 வருஷக் கடனுக மாற்றி அமைத்துக் கொடுக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த இலாகா அரும் பெரும் காரியத்தைச் செய்திருக்கிறது, அதை மறுக்க முடி யாது. அதன் வளர்ச்சிக்கு எவ்வித இடையூறும் இன்றி செயல்பட வழிவகை செய்யவேண்டும். எங்கள் ஜில்லா மிகவும் பிற்போக்கான ஜில்லா என்று சொல்லவேண்டியது இல்லை. நாமக்கல்லில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை வைக்கப்போவதாகச் சொனனுர்கள். மொத்தம் 3 ஆலைகளில் இன்னும் இரண்டு எங்கே வைக்கப்படும் என்பது பற்றிச் சொல்லவில்லை. ஏற்கனவே நாங்கள் திருவண்ணுமலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை வைக்கவேண்டும் என்றும், அதற்காக வேண்டி 20 லட்சம் பங்கை

அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எடுதுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள் என்றும், சமீபத்தில் சாத்தனூரில் கட்டிய அணையின் மூலமாக எங்கள் ஜில்லாவில் 20 ஆயிரம் ஏக்கரா வரையில் பாசன வசதி அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் சொல்லிக்கொண்டு திருவண்ணாமலையில் அந்தச் சர்க்கரை ஆலைக்கு அவசியம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாக அமைச்சர் அவரை நான் பணிவோடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச அனுமதி அளித்த உதவி சபா நாயகர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri V. SANKARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு இயக்கம் மூலம், நம் நாட்டின் முக்கிய தொழிலாகிய கைத்தறி நெசவிற்கு பல்வேறு நல்ல காரியங்களை நமது அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. தரத்தை உயர்த்துவதற்காகவும், நல்ல மார்க்கெட் எடுத்துக்கொடுக்கவும் இது போன்று பல உதவிகளை நமது சர்க்கார் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறது. ஆக கைத்தறிக்காக, நமது நாட்டின் இரண்டாவது முக்கியத் தொழில் என்ற முறையில் அதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறது, நமது அரசாங்கம். இருப்பினும் தவிர்க்க முடியாத காரணங்கள் பலவற்றினால் கைத்தறி நெசவாளர்களுக்கு பலவித சிக்கல்கள் ஏற்படுகின்றன, அவ்வப்போது, உடனடியாக அவைகளை தவிர்க்க வேண்டியது மிக மிக அவசியமாகும். நடுவில் இருந்தது போல் பழையபடி நூலின் விலை அதிகரித்திருக்கிறது. அதனால் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் அல்லல் படுகிறார்கள். நடுவில் விலை அதிகரித்து பின்னர் அது ஓரளவு குறைந்தது போல் காணப்பட்டது. இப்பொழுது மீண்டும் விலை ஏறியிருக்கிறது. உதாரணமாக பெட்ஷீட்ஸ், டவல்ஸ் போன்ற முரட்டு துணிகள் நெய்வதற்கு வேண்டிய 10, 20 கவுண்ட் நூல்களின் விலையைப் பார்த்தால், ஏப்ரல் 1959-ல் 11-50 நயாபைசாவாக இருந்தது. இப்போது 17-50 நயாபைசாவாக ஏறியிருக்கிறது; 10 கவுண்டைப் பொறுத்த வரையில், 20 கவுண்டிற்கு, 16 ரூபாயாக இருந்தது இப்பொழுது 22 ரூபாயாகியிருக்கிறது. 2/20 என்பது முன்பு 18 ரூபாயாகயிருந்தது இப்போழுது 25—12 ஆகியிருக்கிறது. ஆகவே இந் நிலையில் கைத்தறி நெசவாளர்கள் தங்கள் துணிகளை 25% ஏற்றி விற்றால்தான் முடியும். ஏற்கனவே துணி வேறு தேங்கிக் கிடக்கிறது அதையே அவர்களால் சமாளிக்க முடியவில்லை. ஆக, நெசவாளர்களின் நிலை பரிதாபகரமாக இருக்கிறது. ஆகையினால் சர்க்கார் உடனடியாக நூலின் விலையைக் குறைக்க போதிய முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கூட்டுறவு மூலமுள்ள நெசவாளர்கள் இருக்கிறார்கள், தனிப்பட்ட நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஹான்ட்லூம்ஸ் என்று ரிஜிஸ்ட்டர் செய்திருப்பதால் அவைகள் எல்லாவற்றையும் கணக்கு எடுத்து நூலின் விலையைக் குறைக்க வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிடில், இந்த விஷயஸ் சர்கிளில் சாண் ஏற முழம் இறங்கும் என்பதுபோல, நெசவாளர்களுக்கு எவ்வளவுதான் சலுகை கொடுக்கப்பட்டிருப்பினும் அவர்கள் நிலை பரிதாபகரமாகத்தான்இருக்கும். நான் அரசாங்கத்தை குறை கூறவில்லை. ஆகவே நூல் விலையேற்றத்தை தடை செய்வதற்கு வேண்டிய முயற்சி எடுக்கப்படவேண்டும். குறைந்த விலையில் நூல கிடைக்க வேண்டும். பின்னர், கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிப்பதன் முக்கியமான உத்தேசமே இந்த நூலின் விலை அதிகரிக்காது இருப்பதற்குத்தான். வெளியார்கள் தயார் செய்வதற்கும், இந்த கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து கிடைக்கும் நூலுக்கும் ஒரே விலைதான் இருக்கிறது. வெளியில் தனியார் விற்கும் விலையை விடக் குறைந்த விலையில் இந்தக் கூட்டுறவு நூற்பாலை மூலம் கிடைக்கும் நூல் விற்கப்படுமென்ற நம்பிக்கை நெசவாளர்களுக்கு இருக்கிறது. ஆனால் இப்பொழுது தனியார் விற்கும் விலையில்தான் இந்த கூட்டுறவு நூற்பாலையில் இருந்து கிடைக்கிற நூலும் விற்கப்படுகிறது. ஆகவே இந்த கூட்டுறவு நூற்பாலையின் நோக்கமே நிறைவேறாது போகிறது. ஆகவே, இது பற்றி வேண்டிய கவனம் செலுத்தப்படவேண்டும். ஒரு சில இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல்

மதுரையில் ஒரு கூட்டுறவு நூற்பாலை வெகு சீக்கிரத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன. பின்னர், கூட்டுறவு நெசவாளர் களுக்கு ஹவுஸிங் காலனி அமைக்கப்படுகிறது. ஆனால் அவை போது மான அளவில் அமைக்கப்படவில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. மதுரையில் இரண்டு மூன்று சங்கங்களுக்குத்தான் சாங்ஷன் இருக்கிறது. பின்னர், இந்த காலனிகள் அமைப்பதில் ''லைட் அக்விஸிஷனில்'' அதிக காலதாமதமாகிறது என்று சொல்லப்படுகிறது. அந்தத் தாமதம் இன்றி சீக்கிரத்தில் அந்தக் காலனிகள் போதுமான அளவில் அமைக்கப்படவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக அக்கிரிகல்ச்சரல் பாங்க்ஸ். ஆர் லார்ஜ் சைஸ் சொஸைட்டீஸ் நம் நாட்டில் அமைப்பதில், சென்ட்ரல் கவர்ன்மெண்ட் யோசனைப்படி இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டதென்று குறை கூறப்படுகிறது. இது, நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. ஏற்கனவே 300 பாங்குகள் அமைக்கப்பட்டிருக்கிறது. மதுரையில் 43 அக்கிரிகல்சரல் பாங்க்ஸ் இருக்கிறது. நம் ராஜ்யத்தில் அவை சரியாக இயங்கிவருகிறது, வடக்கில் அவை சரியானபடி பலன் அளிக்காமல் இருக் கலாம். ஆனால் நம் ராஜ்யத்தில் அவை சரியானபடி பலன் அளிக்கிற தாகையால் நம் ராஜ்யத்திற்காவது ஒரு விதிவிலக்கு அளிக்கும்படி கேட்க வேண்டும். அடுத்தபடியாக, இந்த டிஸ்ரிக்ட் கோவாப்பரேட்டிவ் பாங்க்ஸ்க்கு சர்க்கார் காரண்டி கொடுக்க வேண்டும். ''ஓவர் ஆள் லாஸில்'' 10%ம் இன்டிவிடுவல் கேஸில் 40%ம் என்று சர்க்கார் காரண்டி கொடுக்க வேண்டுமென்று ஜில்லா கோவாப்பரேட்டிவ் பாங்க்ஸ் வற்புறுத்தி வருகிறது ஆனால் அந்தக் காரண்டி இப்பொழுது கொடுக்கப்படவில்லை. அதனால் பாங்குகளிலிருந்து இந்த சொஸைட்டிகளுக்கு கடன் கிடைப்பதில் அநேக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு வேண்டிய சமயத்தில், வேண்டிய அளவு கடன் கிடைப்பதில்லை. அப்படி கிடைக்காத காரணத்தினால் அவைகள் சரிவர இயங்க முடியாமலும் இருக் கின்றன என்பதை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே, சர்க்கார் ஓரளவுக்கு காரண்டி கொடுத்தால்தான் அவர்களுக்கு பாங்குகள் கடன் கொடுக்க முன் வருவார்கள். ஆகவே, அப்படி நான் ஏற்கனவே சொன் னபடி ஓவர் ஆல் லாஸ்க்கு 10%ம், இன்டிவிடுவல் கேஸில் 40% காரன்டியும் கொடுக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய முயற்சியைக் கைக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இந்த காரன்டியை சர்க்கார் அப்ரூவல் செய்யவேண்டும். பின்னர் இந்த ஸுப்பர்வைஸரி ஸ்டாப் இருக்கிறதே, அது குறைவாகத்தான் இருக்கிறது, என்று சொல்லப்படுகிறது. ஆகவே அந்த ஸுப்பர்வைசரி ஸ்டாபை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த ''புள் பெர்மனன்ஸ்ஸ்கீமில்'' லான்ட்லெஸ் டெனன் ஸ்க்கு, ''ஓவர் ஆல்லாஸ்ல் 10%ம் இன்டிவிடுவல் கேஸில் 66% என்றும் காரண்டி கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப பட்டது.) பின்னர், இந்தக் கடன் கிடைப்பதில் காலதாமதமாகிறது. போது மான அளவு ஸ்டாப் இல்லாததால் இது ஏற்படுகிறது. ஆகவே அதையும் கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டுறவு ஹௌஸ் பில்டிங் சொசைட்டியை எடுத்துக்கொண்டால் நாலில் ஒரு பங்கு ஷேர் காப்பிட்டல் வேண்டு மென்று சொல்லப்படுகிறது. 500 ரூபாய்க்கு ஷேர் இருந்தால் 2,000 ரூபாய் அதற்காக கடன் கொடுக்கப்படுகிறது. நாலில் ஒரு பங்கு இருப்பதை, பத்தில் ஒரு பங்கு என்று ஆக்க வேண்டும். அடுத்தபடி யாக, டெப்டி ரிஜிஸ்தாரர்கள் சென்னையிலேயே இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த டெப்டி ரிஜிஸ்ட்ரார்களை ராஜ்யத்திலுள்ள பலயிடங்களுக்கும், ஒவ்வொரு ரீஜனல் ஹெட்குவார்ட்ரஸ்களிலும் போட வேண்டும். அதேபோல் சி. எஸ். ஆர். களையும் ஒவ்வோரு டிவிஷ னைப் பிரித்து ஒவ்வொருயிடத்திலும் பரவலாக போட வேண்டும். (மணி யடிக்கப்பட்டது) ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டு விட்டு முடித் துக்கொள்கிறேன். இப்பொழுது ஹோல்சேலர்ஸ்க்கு 3 நயா பைசா என்றும், ரீட்டெயிலேர்ஸ்க்கு 6 நயா பைசா என்றும் ரிபேட் கொடுக்கப் படுகிறது. இதன் காரணமாக என்ன நடக்கிறதென்றால், போகஸ் பில்

25th April 1960] [Sri V. Sankaran]

களைப் போட்டு ரீட்டெயிலேர்ஸ்க்கு கொடுப்பதாக எழுதி 6 நயா பைசா வாங்குகிறார்கள். ஏனெனில் இவர்களுக்கு அதனால் லாபம் கிடைக்கிறது. பின்னர், பணத்தை வாங்கிக் கொண்டு ரீட்டெயிலேர்ஸ்க்கு கொடுப்பதாக போகஸ் பில்கள் எழுதிய பின்னர்தான் அந்தப் பணத்திற்கு ரசீது கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்கள் நடப்பதால் இன்ஸ்பெக்ஷன்போகும்போது மிகுந்த தொந்தரவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்த ஹோல் சேல்ஸ்க்கு கூட 6 நயா பைசா என்றுக்கிவிட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு இயக்கத்தை நம்முடைய ராஜ்யத்திலே வலுவாக அமைப்பதுதான் இந்த ராஜ்ய சர்க்காருடைய கருத்து என்று அடிக்கடி மிகைப்பட பேசப்பட்டு வந்த போதிலும், பேசப்படுவது போல், அதற்குரிய வகையில் செயல் புரியவில்லை என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தின் பேரில் நடந்த விவாதத்தின்போது கூட இதையேத்தான் மிகவும் வலியுறுத்திச் சொன்னேன். நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக நம்முடைய ராஜ்யத்தில் வளர்ந்து வருகின்ற கூட்டுறவு இயக்கத்தை எடுத்துப் பார்த்தால், நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் ஏற்றவாறு, சாதாரண மக்களை கவரத்தக்க முறையில் இல்லை, அதற்கான முறையிலும் வழிவகை செய்யப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் நான் அடிக்கடி வலியுறுத்தி கூறுவது போல், சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு கூட்டுறவு இயக்கம் ஒரு அம்சமாகும். சமதர்ம சமுதாயம் நல்ல முறையில் வளர்ந்தோங்க வேண்டுமானால், கூட்டுறவு இயக்கமும் இழையோடியாக இருக்கவேண்டும். அந்த வகையில் பார்க்கிறபொழுது நம்முடைய ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கத்தை எல்லா அம்சங்களிலும் மக்களுடைய வாழ்க்கையிலும் பிரதிபலிக்கின்ற அளவுக்கு இன்னும் சரிவர சர்க்கார் அமைத்துத் தரத்தக்க எந்த ஏற்பாடுகளையும் செய்யவில்லை என்று குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். இவ்வாறு கூட்டுறவு சம்பந்தமாக சர்க்கார் பேசிக்கொண்டு இருக்கின்ற நேரத்தில், கூட்டுறவு இயக்கத்தை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்றும் அதற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரத்தில், மற்றொரு பக்கத்தில் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்தால் எங்கே கொண்டு போய் விடும் என்றே தெரியவில்லை, கூட்டுறவு வழியில் செல்வதே தவறானது என்ற லட்சியத்தை வைத்துக்கொண்டு ஒரு கட்சி துவங்கி வேலை செய்து வருவதையும் நாம் பார்க்கிறோம். கூட்டுறவு இயக்கம் என்பது திடீரென்று ஏற்பட்டதல்ல, காங்கிரஸ் சபை ஆவடியில் சோஷியலிஸ தீர்மானம் போட்ட பின் வந்ததல்ல, அதற்கு முன்னதாகவே நம்முடைய ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அது எப்படி தோன்றியிருந்தாலும் சரி, இன்று ராஜ்ய சர்க்கார், நாங்கள் கூட்டுறவு இயக்கத்திற்காகவே வேலை செய்து வருகிறோம், கூட்டுறவு இயக்கத்தை மக்கள் பெருவாரியாக ஆதரிக்கிறார்கள், ஆதரிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதே நேரத்தில் இப்போது இருக்கக்கூடிய விதத்தையே தடை செய்யும் வகையில் ஒரு சிலர் பிரசாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பாகக் கூறுவது கூட்டுறவு முறையில் விவசாயத்தை நடத்துவது தகாது என்பது தான், கூட்டுறவு முறையில் பண்ணைகளை அமைக்கக்கூடாது என்பதை மிகவும் வலியுறுத்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்ய சர்க்கார், நாங்கள் அப்படியல்ல, கூட்டுறவு பண்ணைகளை வரவேற்கிறோம், அதற்காக ஆக்கம் அளித்துக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த முறையில் கூட்டுறவு பண்ணைகளை அமைப்பதில் ராஜ்யத்தில் சுமார் 21 ஸொஸைட்டிகளை அமைப்பதற்கு திட்டமிட்டிருந்தோம், ஆனால் இதைவிட மூன்று மடங்குக்கு மேலாக கூட்டுறவு பண்ணைகளை அமைத்துவிட்டோம் என்று அரசாங்கம் பெருமைப்பட்டுக்கொள்கிறது. ஆனால் சாகுபடிக்கு எத்தனை ஏக்கர் நிலங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன இதன் கீழ், என்று நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர்

அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையில், இப்படி 18 ஆயிரம் ஏக்கர், மூன்று மடங்காக அதிகப்பட்டும், கூட்டுறவு பண்ணையின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இந்தச் சர்க்கார் கூட்டுறவு விவசாயத்திற்காக நான்கு ஆண்டுகள் பாடுபட்டும் கூட 18 ஆயிரம் ஏக்கர்கள் தான் கூட்டுறவு பண்ணையின் கீழ் வந்திருக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் சாகுபடிக்கு என்று இருக்கின்ற நிலங்கள் சுமார் ஒன்றரைக் கோடி, இதை எப்போது கொண்டு வரப்போகிறார்கள் என்றுதான் தெரியவில்லை. இதைக் குறித்து நான் ஏற்கனவே சொன்னதைத்தான் இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது சர்க்கார் போய்க்கொண்டிருக்கிற நிலைமையில் பார்த்தால் இந்த நிலங்கள் அத்தனையும் கூட்டுறவுப் பண்ணையில் கொண்டு வரவேண்டுமென்றால், குறைந்தபட்சம் 5,000 ஆண்டுகளாவது ஆகும். அதோடு தரிசு நிலங்களைச் சேர்த்துப் பார்ப்பதாக இருந்தால், அவைகளைச் சேர்த்து இதன்கீழ் கொண்டு வரவேண்டுமென்றால் 7,000 ஆண்டுகளாவது ஆகும் என்றுதான் ஆச்சரியப்படுகிறேன். அவ்வளவு மெதுவாக, மெதுவாக என்று சொன்னால், இதற்கு எதை உபமானம் சொல்வது என்றே தெரியவில்லை, (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் : நத்தையைப்போல் என்று சொல்லுங்களேன்) நத்தையைக் கூட சொல்வதற்கில்லை, நத்தையானது சிறிது நகர்ந்து கொண்டே போகும், இது நகராத முறையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்த சர்க்காரின் கூட்டுறவு பண்ணை முறையைத்தான் வேறு எதற்காவது மெதுவாகப் போவதற்கு ஒப்பிட முடியும். இதை எதற்கு ஒப்பிட்டுச் சொல்வது என்றே தெரியவில்லை. கூட்டுறவு முறைகளுக்கு ஆக்கம் கொடுக்கின்றோம், என்று சொல்லுகிறார்களே ஒழிய உண்மையாக ஆக்கம் கொடுப்பதாக ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். இதற்கு எவ்வளவோ காரணங்களைச் சொல்லலாம். வெளியில் சுதந்திராக் கட்சிக்காரர்கள் இதை எதிர்த்துக் கொண்டிருந்தாலும் சரி, காங்கிரஸுக்குள்ளேயே சிலர் இதை எதிர்ப்பதாக இருக்கலாம். ஆகவே இதை தீவிரப்படுத்தினால் நமக்கு எங்கே ஆதரவு குறைந்து விடுமோ என்ற பயம் காங்கிரஸ் கட்சிக்கு சிலவேளை இருக்கலாம் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. அது எப்படி இருந்த போதிலும் கூட்டுறவு பண்ணைக்குச் சர்க்கார் கொடுத்து வருகின்ற இந்த உதவியானது, முற்றிலும் இன்றைக்கு எந்த அளவுக்கு மக்கள் விரும்புகிறார்களோ அந்த அளவுக்கு, அவர்களுடைய விருப்பத்தை பூர்த்தி பண்ணக்கூடிய அளவுக்கு இல்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் கடுமையான வார்த்தைகளைச் சொல்லுவதற்கு எனக்குக் கூச்சமாக இருக்கிறது. பல தடவை எத்தனையோ கடுமையான வார்த்தைகளை சொல்லியாய்விட்டது. ஏதோ ஒருவிதமாக முன்னேறிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அதிலேயே நாம் திருப்தி அடைந்து கொண்டிருக்கிறோம். அந்த முறையில் இதனுடைய திட்டத்தையே, இதன் லட்சியத்தையே நாம் மறந்தவர்களாக இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கின்ற அம்சத்தைப் பொறுத்த வரையில் நாம் நிறைய முன்னேறியிருக்கிறோம் என்று கணக்குக் காட்டுகிறார்கள். தொண்ணூற்றென்று சதவிகிதம் கிராமப் புறங்களில் கூட்டுறவு இயக்கம் படர்ந்து இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாற்பத்தொரு சத விகிதம் மக்கள் இதனால் பலனடைகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் நான் இதில் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம் 41 சத விகிதம் பேர்கள் கூட்டுறவு இயக்கத்தில் அங்கத்தினராக இருக்கிறார்களா என்பது தான்.

The Hon. Sri R. VENKATARAMAN : 41 சத விகிதம் குடும்பங்களே அங்கத்தினர்களாகியிருக்கிறார்கள்.

Sri P. S. CHINNADURAI : இதற்குக்கூட அமைச்சர் அவர்கள் தன்னுடைய இலாகாவிடம் கேட்டு தெரிந்து சொல்ல விரும்புகிறேன். அகில இந்திய கிராம கடன் சர்வே கமிட்டியார் ரிப்போர்ட்டின்படி பார்த்தால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளி விவரத்திற்கும் அதற்கு எவ்வளவோ வித்தியாசம் இருக்கின்றன.

25th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : அது அகில இந்திய சராசரி புள்ளி விவரங்கள். நான் கொடுத்திருப்பது சென்னை ராஜ்யத்தின் முன்னேற்றம் பற்றிய புள்ளி விவரங்கள்.

SRI P. S. CHINNADURAI : இதிலேயே சென்னை ராஜ்யத்தில் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள புள்ளிவிவரங்களையும், ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள புள்ளி விவரங்களையும் நான் காண நேர்ந்தது. அதில் கொடுத்திருப்பதைப் பார்த்தால், வால்யூம் இரண்டில், 22-ம் பக்கத்தில் இருப்பதை அமைச்சர் அவர்கள் நன்றாகப் பாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது பழைய கணக்கு அல்ல, 57-ம் ஆண்டு இது பிரசுரமாகியிருந்தது. இதற்கு மேல் சமீபத்திய கணக்குகள் வரவில்லை. இந்தக் கணக்கின் படி பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லாவில் மொத்தமாக சுமார் 1·5 சதமானம் கடன் தான் கிராமங்களுக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் மெம்பர்களின் எண்ணிக்கையையும் கடன் கொடுத்திருக்கும் சதவிகிதத்தையும் 12-30 p-m
சற்றுக் குழப்பிக் கொண்டிருக்கிறார். ஒரு ராஜ்யத்தில் எவ்வளவு கடன் வேண்டும், மக்களுக்கு அதில் எத்தனை சதவிகிதம் கொடுக்கப்டுகிறது என்று கணக்கிட்டால் கூட்டுறவு ஸொஸைடி மூலம் 10 சத விகிதம் கூட கொடுக்கப்படவில்லை என்று சொல்ல முடியும். எத்தனை குடும்பங்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கின்றன என்று கணக்கிட்டால் 42 சத விகித குடும்பங்கள் சேர்ந்திருக்கின்றன என்று கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

SRI P. S. CHINNADURAI : சுமார் 19 கோடியே சொச்சம் ரூபாய் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். இது கிராம இகனாமிக் ஸர்வே கமிட்டியின் கணக்கைவிட மூன்று மடங்கு அதிகமானது என்றும் அவர் சொன்னார். கிராம இகனாமிக் சர்வே கமிட்டியினர் கொடுத்திருக்கும் கணக்கைப் பார்த்தால், இராமநாதபுரம் ஜில்லாவில்..........

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் இராமநாதபுரத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. அதுதான் இந்த ராஜ்யத்திலேயே மிக மிகக் குறைவாகப் பெற்றிருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால், ராமநாதபுரத்தையே குறிப்பிட்டுக் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம் ?

SRI P. S. CHINNADURAI : இந்தப் புள்ளிவிவரங்களின்படி பார்த்தால், கோவை ஜில்லா தான் கூட்டுறவு முறையினால் அதிகமாகப் பயனடைந்திருக்கிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தாலும், கோவை ஜில்லாவில் ஒரு விவசாயக் குடும்பத்திற்கு 6·6 சதவிகிதம் தான் கடன் கிடைக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இது எப்படி மூன்று மடங்காகப் பெருகியிருக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. அப்படியே பெருகியிருப்பதாக வைத்துக் கொண்டாலும், விவசாயக் குடும்பங்கள் தனிப்பட்டவர்களிடம் படும் கடன்கள் தான் அதிகமாக இருக்கின்றனவே தவிர, அவை தங்கள் தேவைகளைக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. விவசாயிகள் சாகுபடிக்குத் தேவையான எல்லாப் பணத்தையும் கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருந்து பெற முடியவில்லை என்பதற்கு இதுவே போதுமான சான்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நாம் உண்மையிலேயே விவசாயிகளுக்குச் செய்ய வேண்டியது அதிகமாக இருக்கிறது. நாம் அவர்களுக்கு 19 கோடி ரூபாய் கடன் கொடுத்துவிட்டோம் என்பதால் திருப்தியடைந்துவிட முடியாது. இப்போது இந்த சதவிகிதக் கணக்கைப் பார்த்தாலும், நாம் கொடுக்க வேண்டிய கடன் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. நாம் இந்த அளவைக் காட்டிலும் இன்னும் அதிக

மாகக் கடன் கொடுத்தால் கூட, அப்போதும் கிராமவாசிகள் ஓரளவுக்கே நன்மை பெறக்கூடிய நிலையில் இருப்பார்கள். ஆகையால் நாம் இதில் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும். நாம் அதிகமாகச் சாதித்து விட்டோம் என்று நம்மை நாமே புகழ்ந்து கொண்டிருக்க முடியாது. நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் கூறு கிறேன்.

மேலும், கூட்டுறவு மில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆலை களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப் படுகிறது. தனிப்பட்டவர்கள் ஆலைகளில் கொடுக்கப்படும் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் விடக் குறைவான சம்பளமும் பஞ்சப்படியும் இங்கே கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தக் கூட்டுறவு ஆலைகளில் கண்டித்து வேலை வாங்கப்படுகிறது. இதில் அரசாங்கத்தார் கண்காணிக்கிறார்களா, கண்காணித்து தக்க ஏற்பாடுகளைச் செய்கிறார்களா என்று அறிய விரும்பு கிறேன். தொழிலாளர்கள் தனிப்பட்டவர்களிடம் பெறும் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் விட அதிகமான சம்பளத்தையும் பஞ்சப்படியையும் இப்படிப்பட்ட கூட்டுறவு ஆலைகளில் பெற்றால்தான் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தொழிலாளர்கள் நன்மை பெறுகிறார்கள் என்று சொல்லலாம்.

யாரெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேரவிரும்புகிறார்களோ அவர்களையெல்லாம் கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்ப்பதற்கு வகை செய் யும் முறையில் கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இந்த மன்றத்தில் பல முறை வற்புறுத்தப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு விரிவான முறையில் சட்டமியற்றப்படும் என்று சர்க்கார் கூறினார் கள். இந்த இரண்டு ஆண்டுகளாக கனம் அமைச்சரும் இலாகாவினரும் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? அவர்கள் இந்த இரண்டு வருஷங்களில் விரிவான கூட்டுறவுச் சட்டத்தை ஏன் கொண்டுவர முடிய வில்லை? ஒருவேளை கனம் அமைச்சருக்கு வேலை அதிகமாக இருக்கலாம். அவருக்கு வேலை அதிகமாக இருக்குமானால், கூட்டுறவு இலாகாவே வேறு தனி அமைச்சருக்கு மாற்றிவிடலாம் என்று நான் அப்போதே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, சொன்னேன். கூட்டுறவு இயக்கம் மக் களைக் கவரத்தக்க வகையில் கூட்டுறவு இலாகா இயங்க வேண்டும். இதை யெல்லாம் பார்க்கும்போது கூட்டுறவு இலாகாவுக்கென்றே ஒரு தனி அமைச்சர் வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னேன். அப்போது "அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கம் எங்களுக்கு இல்லை" என்று பதில் சொன்னார்கள். அப்போது என்னைப்பற்றிக் கூட குற்றம் சொன்னார்கள். யாராவது சொல்லிக்கொடு த்து இவ்வாறு பேசுகிறானே என்று சொன்னார்கள். நம்முடைய அமைச் சர் (இந்த அமைச்சர்) அவ்வாறு சொல்லவில்லை. வேறொரு கனம் அமைச்சர் சொன்னார். கூட்டுறவு அமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டால் தான் மக்கள் சமதர்மப் பாதையில் செல்ல முடியும். கூட்டுறவுப் பாதை மலர வேண்டுமென்பதற்காக கூட்டுறவுத்துறைக்கென தனி அமைச்சர் போட வேண்டும் என்று அன்று சொன்னேன். அந்த இலாகா வெகு திறம்பட நடக்க வேண்டும். அது திறம்பட நடக்க வேண்டுமானால் அதற்குத் தனி அமைச்சர் வேண்டும். அதற்கு நம் அமைச்சரே அமைச்ச ராக இருந்து விட்டாலும் அல்லது இவர் மற்ற இலாகாக்களை உதறித் தள்ளிவிட்டு இந்த இலாகாவே எடுத்துக்கொள்ளட்டுமே. மற்ற இலாகாக் களை இவர் கவனிக்க வேண்டாம் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் கூட்டுறவு இலாகா ஒரு தனி அமைச்சரிடம் இருந்தால்தான் அந்த இலாகா சிறப்புற நடைபெறும் என்று நான் கருதுகிறேன். கூட்டுறவு இயக்கத்தை மக்கள் பெரிதும் வரவேற்கிறார்கள். ஆனால் பல பேர்கள் கூட்டுறவு ஸ்தானபங்களில் அங்கத்தினர்களாகச் சேர விருப்பம் தெரிவித்தாலுங் கூட, கிராமங்களில் ஒரு ஏகபோகம் இருந்துகொண்டிருக்கிறது. அது ஒரு வகையான ஏகபோகம் என்று கூடச் சொல்வேன். ஆனால் இதற்கு எப்படியும் தீர்வுகாண வேண்டும். கூட்டுறவு ஸ்தானபங்களில் சேர விரும்பும் நபர்களுக்கு அவைகளில் சேர வாய்ப்பு இல்லை. ஏற்கனவே

25th April 1960] [Sri P. S. Chinnadurai]

பதவிக்கு வந்துள்ளவர்கள், தாங்களே பதவியில் தொடர்ந்து இருக்கவேண்டு மென்பதற்காக பல மோசமான வழிகளில் ஈடுபடுவதை நான் காண்கிறேன். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கும் இலாகாவுக்கும் பல புகார்கள் வந்திருக்கும் என்று நம்புகிறேன். இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டு மென்று இந்த மன்றத்தில் பல முறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. சர்க்கார் அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. யார் கூட்டுறவு ஸ்தாபனங் களில் சேர விரும்புகிறார்களோ, அவர்களை, அவர்கள் யாராயிருந்தாலும், அட்டியில்லாமல், தடையில்லாமல், ஸ்தாபனங்களில் சேர்த்துக்கொள்வ தற்கான முறையில் இந்தச் சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டும். சட்டத்தைத் திருத்துவதில் ஏன் காலதாமதம் என்பதற்கு கனம் அமைச்சர் விளக்கம் தர வேண்டும்.

கூட்டுறவு வீடு கட்டும் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், கிராமங் களுக்காக எவ்வளவு உதவி செய்யப்பட்டிருக்கிறது? அது சுமார் 3½ லட்சம் ரூபாய் என்று கனம் அமைச்சர் சொன்னார். நான் இதை லட் சத்தில், கணக்கிட்டுப் பார்க்க விரும்பவில்லை. எத்தனை வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன. என்று எனக்குச் சொல்ல வேண்டும். வீடுகளாகக் கணக்குப் பார்த்தால் யாரும் பரிதாபப்பட வேண்டும். அவ்வளவு குறைவான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 3½ லட்சம் ரூபாய் என்றால் ஏதோ பெரிய தொகையாகத் தோன்றலாம். **(Up to the end of 31st January 47 houses have been completed. And 178 houses are under various stages of Construction)** என்று சொல்லப்பட்டிருக்கிறது. நமது ராஜ்யத்தில் தேவையைப் பார்க்கும் போது இத்திட்டத்தால் போதுமான கிராமங்கள் பயனடைய வேண்டு மானால், கிராமங்களில் அல்லவா அதிகமான வீடுகள் கட்ட சர்க்கார் முன்வர வேண்டும்? கிராமங்களில் அல்லவா வீடு கட்டும் கூட்டுறவு ஸொஸைடி கள் பெருக வேண்டும். அதற்கு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், '3½ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்' என்று லட்சத்தில் கணக் குச் சொல்லி கிராமவாசிகளை ஏமாற்றிவிடலாம் என்று இந்த அரசாங்கம் நினைக்கிறது. வருடத்திற்கு எத்தனை வீடுகள் கட்டியிருக்கிறார்கள். சரி யானபடி 47 வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இன்னும் 178 வீடுகள் கட்டப் படவிருக்கின்றன என்பதை மக்கள் மத்தியில் சொன்னால் அவர்கள் இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எனவே இந் தத் தொகை ரொம்பக் குறைவான தொகை. மேலும் கைத்தறி நெச வாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் சுமார் 1,460 வீடுகள் கட்டிக் கொடுத்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். சமீபத்தில் திருப்பூர் கூட் டுறவு ஸொஸைடி சார்பாகக் கட்டப்பட்டிருக்கும் வீடுகளை கனம் அமைச்சர் திறந்துவைத்தார். அங்கே அப்போது சில வீடுகளுக்கு திறப்புவிழா செய்யப்பட்டது. அந்த இடத்திலேயே இன்னும் எத்தனை ஸொஸைடி களும் ஸொஸைடிகளின் அங்கத்தினர்களும் வீடு இல்லாமல் தவிக்கி றார்கள் என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் ஏன் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுடைய குறையை நீக்க ஆவன செய்யக்கூடாது? இம் மாதிரி 1,460 வீடுகள் இத்தனை ஆண்டுகளில் கட்டிக் கொடுத்துவிடு வோம் என்று சொல்வதால் ஒன்றும் நமக்குப் பெருமை இல்லை. இன் னும் நாம் செய்யவேண்டியது ஏராளமாக இருக்கிறது என்றுதான் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சொஸைட்டியிலே சேர்ந்த நெசவாளிகளுக்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சொஸைட்டியிலே சேராத நெசவாளிகளையெல் லாம் ஒன்று அவர்களை சொஸைட்டியிலே கொண்டு வந்து அவர்களுக்குத் தக்க வசதி செய்யவேண்டும்; இல்லாவிட்டால், அவர்களுக்கு வேறு வகை யிலே சர்க்கார் உதவியைப் பெற வகை செய்யவேண்டும். என்னுடைய கருத்தில், அவர்கள் எல்லோரையும் சொஸைட்டியிலே கொண்டுவர ஏற் பாடு செய்வதுதான் மிகவும் சிறப்பானது. அவர்கள் எல்லோரையும் சொஸைட்டியிலே கொண்டுவரவேண்டும் என்பதோடு, அந்த சொஸை ட்டிகளும் நல்ல முறையிலே நடப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய

[Sri P. S. Chinnadurai] [25th April 1960

வேண்டும். அதற்கான முறையில் சர்க்கார் இலாகா பணி புரியவேண்டும். கூட்டுறவு இயக்கத்திலே ஈடுபட்டிருக்கும் கைத்தறி நெசவாளிகளாக இருந்தாலும், சரி, இயக்கத்தில் ஈடுபடாத நெசவாளிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் அதிகமாகப் படிப்பு இல்லாதவர்கள்; அவர்கள் சாதாரணமானவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கும் விஷயத்தில் எளிமையான முறையில் உதவி கொடுக்கும் வகையில் அரசாங்கம் வெவ்வேறு அதிகாரிகளை நியமித்து அவர்கள் மூலமாக உதவி செய்ய முன்வர வேண்டுமே தவிர, பழமையான போக்கை அனுசரிக்கக்கூடாது. சாதாரணமாக சொஸைட்டியை ரிஜிஸ்தர் செய்வதானாலும்கூட, ஏகப்பட்ட தாமதம் ஆகிறது. பல்வேறு விவகாரம் சம்பந்தப்பட்ட காரியங்களை எடுத்துக்கொண்டாலும், முடிப்பதிலேயே மிகுந்த தாமதம் கையாளப்படுகிறது. அம்மாதிரியான தாமதம் தவிர்க்கப்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, நேரம் ஆகிவிட்டதால் நான் எனது வார்த்தையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

Sri A. GOVINDASAMY: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கூட்டுறவு மான்யத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசாங்க நிதியிலிருந்து ரூபாய் 3,600 என்ற அளவிலே 662/3 சத விகிதம் கடனாகவும் 331/3 சத விகிதம் மான்யமாகவும் கொடுப்பதாகத் திட்டம் வகுத்து, 1 600 வீடுகள் வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கட்டுவதாகத் திட்டமிட்டு, அதிலே 1,460 வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையைக் கூர்ந்து படிக்கும்போது, தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் என்னுடைய வருத்தத்தை அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆயிரத்து நானூற்றி அறுபது வீடுகள் கட்டத் திட்டமிட்டபோது, தென்னாற்காடு மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களே இல்லை என்று அமைச்சர் கருதுகிறாரா, ஏன் ஒரு வீடு கூட அங்கே கட்டுவதற்கு திட்டம் வகுக்கவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். 1,460 வீடுகள் கட்ட ஏற்பாடு செய்துவிட்டாலும், இனியும் 140 வீடுகள் கட்டவேண்டியது பாக்கியிருக்கிறது. அந்த வீடுகளையாவது தென்னாற்காடு மாவட்டத்தில் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பதினான்கு திட்டங்களையும் கூர்ந்து கவனிக்கும்போது, சேலம் ஜில்லாவில் மட்டும் 400 வீடுகளும், இராமனுதபுரம் ஜில்லாவில் 300 வீடுகளும், கோயமுத்தூர் ஜில்லாவில் 318 வீடுகளும், சென்னை நகரிலே 60 வீடுகளும், வடஆற்காடு ஜில்லாவிலே 92 வீடுகளும் இப்படியாகப் பல இடங்களில் வீடுகள் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால், எங்களுடைய தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே பல சிறந்த துணி உற்பத்தியாகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கடலூர் வட்டத்தைக் சேர்ந்த வண்டிப்பாளையம், குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், வட்டத்தில் புவனகிரி, இன்னும் அனந்தபுரம், சிறுவந்தாடு, சங்கீதமங்கலம், அன்னியூர் ஆகிய இடங்களில் ஏராளமான நெசவாளிகள் இருக்கிறார்கள். வளவனூர் பகுதியிலுள்ள சிறுவந்தாட்டில் பட்டு உற்பத்தி ஆகிறது அந்தப் பகுதி நெசவாளிகளை ஏன் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திலே சேர்க்கக்கூடாது என்று கேட்கிறேன். அவர்கள் புறக்கணிக்கப்பட்டதற்குத் தகுந்த காரணம் சொல்லவேண்டும், சமாதானம் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, பாக்கி 140 வீடுகளை வேறு எங்கும் கட்டாமல் தென்னாற்காடு மாவட்டத்தில் கட்டுவதற்காக தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்,

25th April 1960]

SRI S. NAGARAJA MONIGAR: ஐயா, அரசாங்கத்தின் திட்டத்திலே நம்பிக்கை இல்லாதவர்கள் சரிவர ஒத்துழைக்கவில்லை என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட பகுதியில் வீடு கட்டாமல் விடப்பட்டதா? அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் விடப்பட்டதா?

SRI A. GOVINDASAMY : கனம் அங்கத்தினருக்கு நெசவாளர் விஷயத்தில் எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அதைவிட ஆயிரம் மடங்கு அக்கறை எனக்கு இருக்கிறது என்ற காரணத்தால்தான் பேசுகிறேன் என்பதை கனம் அங்கத்தினர் உணரவேண்டும். சேலத்திலே இத்தனை வீடுகள் கட்டியிருக்கும்போது ஏன் தென்னாற்காடு மாவட்டத்தில் கட்டவில்லை என்று அந்த மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் என்ற முறையில், கேட்க எனக்கு உரிமை இருக்கிறது.

கதரைப் போட்டுக்கொண்டு கைத்தறி நெசவாளிகளுக்காகக் கண்ணீர் வடிப்பதாகச் சொல்கிறார்களே, அதிலே இருக்கும் குறைபாட்டை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆண்டு தோறும் நான் கேட்கிறேன், கதருக்குக் காட்டும் சலுகையை ஏன் கைத்தறிக்குக் காட்டவில்லை என்று. 6 நயே பைசே கைத்தறிக்கு ரிபேட் என்றால், 18 நயே பைசே கதருக்கு சலுகை காட்டப்படுகிறதைப்பற்றிக் கேட்ட நேரத்தில், இதுவரையிலும் சொல்லாத சமாதானத்தை இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகையால், உண்மையிலேயே எங்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை என்றுதான் மீண்டும் கூறிக் கொள்ளுகின்றேன். கதருக்கு ரிப்பேட்டில் மட்டும் அல்ல, சலுகைகளும் காட்டுகிறார்கள். அரசாங்கம் தங்களுடைய தேவைகளுக்கும், அரசாங்க ஊழியர்களுக்குச் சட்டை தைத்துக்கொடுப்பதற்கும், போலிசாருக்கு உடை தைத்துக் கொடுப்பதற்கும் கதர்த் துணிகளை வாங்குதவன் மூலம் சலுகை காட்டிவிட்டு, கைத்தறிக்கு ஏதோ பெயரளவுக்குத்தான் இங்கே நிதி ஒதுக்கி, அதற்கு வேண்டிய சலுகை காட்டப்படுகிறதே தவிர, உண்மையில் கைத்தறி நெசவாளிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற நம்பிக்கைக்கு இடம் இல்லாத முறையில் தான் அமைச்சர்கள் மீண்டும் மீண்டும் அவர்களை உள்ளாக்குகிறார்கள். கதர் மீதிருக்கும் வெறுப்பினால் நான் பேசுவதாகவோ, கதருக்குப் புறம்பானவன் என்றோ என்னை யாரும் நினைத்துக்கொள்ளவேண்டாம். முப்பது ஆண்டு காலமாக கதர் கட்டியவன் என்பதை இந்த அவையிலே சொல்லிக்கொள்வதிலே பெருமைப் படுகிறேன். ஆனால், கைத்தறி நெசவாளிகளுடைய நிலைமை என்ன என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காக இதையெல்லாம் குறிப்பிட்டேன்.

அடுத்தாற்போல், 'மெட்ராஸ் ப்ளீடிங்' வகையான துணிகள் பாதிக்கப்பட்டதற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். வடநாட்டு ஷேட்கள் தான் அதற்குத் காரணம். அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அத்தகைய வியாபாரிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கப்படவில்லை. அதையும் ஒரு புறம் விட்டுவிடுகிறார்கள். இன்றைய தினம் துணி தேங்கியிருக்கிறது. அதை வாங்குங்கள் என்பதற்கு விளம்பர இலாகா சரியான விளம்பரத்தைக் கொடுத்தார்கள். அதற்காக நெசவாளி சார்பில் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மெட்ராஸ் ப்ளீடிங் வகைத் துணிகளின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டதால், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள என்னுடைய தொகுதி மக்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும் தேங்கியிருக்கும் கைத்தறித் துணிகளை விற்பதிலே பங்குகொள்ள நாங்கள் தயாராயிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணி தேங்கியிருந்த போது நாங்களாக வீடு வீடாக ஊர் ஊராகச் சென்று விற்றிருக்கிறோம் என்பதைத் சொல்லிக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் உண்மையிலேயே கைத்தறித் துணி தேங்கியிருப்பதை விற்க முன்வருவார்களானால் அவர்கள் பின்னால் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு வர நான் தயாராக

[Sri A. Govindasamy] [25th April 1960

இருக்கிறேன். என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகின்றேன். அப்படி விற்கும்போது நாளைக்கே நான் கைத்தறி துணி வாங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். வெளியிலே நீங்கள் கதர் போட்டுக்கொண்டாலும், வீட்டில் இருப்பவர்களுக்கு நீங்கள் வாங்கிக்கொடுக்க உங்களுக்கு நல்ல எண்ணம் இருந்தால் போதும். கைத்தறி வாரம் கொண்டாடுகிறார்கள். அதை வரவேற்கிறேன். ஆனால், பொதுமக்களுக்கு மட்டும் உபதேசம் செய்கிறீர்களே தவிர, வீட்டிலே ஒரு கெஜம் துணி வாங்கிக் கொடுத்தது உண்டா? நாங்கள் வாங்கத் தயாராயிருக்கிறோம். கதர் நீங்கள் கட்டிக் கொள்ளத்தான் வேண்டும். அது உங்கள் ட்ரேட் மார்க் வெள்ளைக்காரனை ஓட்டுவதற்குக் கதர் அன்று பயன்பட்டது. வெள்ளைக்காரன் போய்விட்ட பின் அந்தத் துணியைப் போட்டுத்தான் காங்கிரஸ்காரர் என்று காட்டவேண்டிய அவசியம் இல்லை. பாதிக்கப்பட்டிருக்கும் கைத்தறித் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வாருங்கள் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு உண்மையிலேயே நெசவாளிகளின் பேரில் கொஞ்சம் பற்றும் பாசமும் இருக்கும். ஆனால், கட்சித் தொடர்போடு, கட்சிக் கண்ணோட்டத்தோடு கதருக்கு ஆதரவு அளித்தாலும், நெசவாளர்களுடைய ஏழ்மை நிலையைக் கருதி, அவர்களுக்கும் ஆதரவு தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன். ரிபேட் தொகை குறைவாக இருப்பதால் கைத்தறி துணி எவ்வளவு தேங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sri M. R. KANDASWAMY MUDALIAR : **On a point of Order, Sir.** கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, காங்கிரஸ்காரர்கள் வீட்டிலே கதர்த்துணி வாங்கிக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார். அந்த அங்கத்தினருடைய குடும்பத்திலே கைத்தறி துணி வாங்கிக்கொடுக்கப்படுகிறதா என்றும், இங்கே இருக்கக்கூடிய அவர்கள் கைத்தறித் துணியைக் கட்டுகிறார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : **It is not a point of order.**

Sri A. GOVINDASAMY : நானும் என்னுடைய வீட்டிலும் கைத்தறித் துணி கட்டுகிறோம். எங்களுக்கு வேறு துணி வாங்க வசதிகூட கிடையாது. உண்மையில் ஏழைகள் நாங்கள். ஏழைகள் கைத்தறித் துணிதான் கட்டுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ராஜபாளையத்தில் 11 சொஸைட்டிகள் வரையில் இருக்கின்றன. அவைகளுக்கு 7 லட்சம் 34 ஆயிரம் ரூபாய் சொச்சம் ரிபேட் தொகை கொடுக்கப்படவேண்டியது பாக்கியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில்......

The Hon. Sri R. VENKATARAMAN : அவைகளெல்லாம் தவறான ரிபேட் க்ளெயிம் போட்ட சொஸைட்டிகளாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

Sri A. GOVINDASAMY : ரிபேட் தொகை கொடுக்கப்படவேண்டியது பாக்கியிருப்பதினால், அவைகளைத் தவறான சொஸைட்டிகள் என்று அமைச்சர் அவர்கள் முடிவு செய்துவிடக் கூடாது.

The Hon. Sri R. VENKATARAMAN கனம் அங்கத்தினர் அவர்கள் 11 சொஸைட்டிகள் என்று சொன்னார்கள். 11 சொஸைட்டிகளைப் பற்றி நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் கணக்குச் சொல்லுகிறபோது விவரம் கொடுத்தேன். அதனால், நான் குறிப்பிட்ட அந்த 11 சொஸைட்டிகளைப்பற்றிதான் கனம் அங்கத்தினர் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

Sri A. GOVINDASAMY : தவறான சொஸைட்டிகளாக இருந்தால் அவைகளுக்குக் கொடுக்கவேண்டாம் சரியான க்ளெயிம் ஆக இருந்தால் கொடுங்கள் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

25th April 1960] [Sri A. Govindasamy]

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சங்கத்தில் ஒரு லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், சத்திபேடு சங்கத்திற்கு ரூபாய் 6 லட்சம் ரிபேட்டு பாக்கி என்றும் சொல்கிறார்கள். அவற்றைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். யார் சொல்கிறார்கள் என்பதை விட்டுவிட்டு, விஷயத்தைக் கவனிக்க வேண்டும். எரிச்சல் பட்டு, பரிகாரம் தேடுவதை விட்டு, தவறான முறையிலே என் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ் பவானி மீனவர் கூட்டுறவு சங்கத்தின் கோரிக்கைகளைக் கவனிக்க வேண்டும் என்று . . . (குறுக்கீடு) கூட்டுறவு என்ற முறையில் இங்கே சொல்ல வந்தேன் : மீன் இலாகாவில் தெரிவிக்க வேண்டும் என்றால், அப்படிச் சொல்லுகிறேன். கூட்டுறவு ஆடிட் பயிற்சி பெறுகிறவர்களுக்கு, ஸ்டைபெண்ட் கொடுக்கப்படவில்லை. மற்ற பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப் படுகிறது. அந்த நிலையை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியிலே, கிராமாந்தர வீடு கட்டும் துறையில் சிந்தாமணிக் கிராமத்தில் உண்மையிலே வீடு இல்லாதவர்களுக்கு வசதிகள் கிடைப்ப தில்லை. வீடு கட்டும் அமைப்பில் நாட்டில் வீடில்லாப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டும். இன்றைக்கு பணக்காரர்கள், சொத்துள்ளவர்கள், உள்ளே புகுந்து, நன்மையடைகிறார்களே தவிர, ஏழை மக்களுக்கு வசதிகள் கிடைக்கவில்லை. வீடு இருப்பவர்களுக்கு மேலும் மேலும் அதிகமாக வீடுகள் கொடுக்கப்படுகின்றன. அதற்குக் காரணமும் விளக்கமாகச் சொல்வ தில்லை.

சர்க்கரை ஆலைகளை கூட்டுறவு முறையில் நிறுவுவதில் மத்திய சர்க்கார் ஏன் தடையாக இருக்கிறது என்பது புரியவில்லை. எங்கள் பகுதியில் ரூபாய் 10 லட்சம் மக்கள் தந்தால் ஆரம்பிக்கலாம் என்று சொல்லி, இப்பொழுது ரூபாய் 20 இலட்சம் கேட்கிறார்கள். அப்படிக் கொடுத்தாலும் லைசென்ஸ் கிடைக்குமா என்பது சந்தேகம். மெஷினரி கிடைக்குமா என்பது சந்தேகம். பெண்ணாடத்திலும், வளவனூரிலும், கொஞ்சம் இடையூறு இருக்கிறது. ஆதலால் தனியாருக்கு லைசென்ஸ் கொடுப்பதாகத் தெரிகிறது. தனியாருக்கு ஏன் கொடுக்க வேண்டும் ? இதை மத்திய சர்க்காரில் அனுபவம் உள்ள ஸ்ரீமான் வெங்கட்டராமன் அவர்கள் முயற்சி செய்து, கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்காததற்குக் காரணம் என்ன என்று தீவிரமாக அங்கு வாதாடி ஆவன செய்ய வேண்டும். அவர்கள் அப்படித்தான் அங்கு பேசுகிறார்கள் ; ஆனால் அதை அப்படி இங்கே சொல்வதில்லை. உத்தரப் பிரதேசத்தில் 66 ஆலைகள் இருக்கின்றன. ஆனால், கனம் காமராஜ் இருக்கும் நம் ராஜ்யத்தில் ஆறே ஆலைகள். இதற்கு என்ன காரணம் ? இங்கே வசதியும், வாய்ப்பும் இல்லையா ? அல்லது யாராவது தடைசெய்கிறார்களா ?

கைத்தறிக்கு ரிபேட்டு கொடுத்துத்தான் அது வாழ வேண்டுமா என்று கேட்கப்பட்டது. அது வாழவேண்டுமா அல்லது வாழக்கூடாதா என்பதே தான் பிரச்சினை. இங்கே, நம் மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்கள் அதிகம். அப்படி அதிகம் என்ற காரணத்தினால்தான் ராஜாஜி ஆட்சி காலத்தில் கரைபோட்ட வேஷ்டியும், கலர் புடவைகளும் கைத்தறிக்கு என்று ஒதுக்க வேண்டும் என்ற தீர்மானம், இந்த சட்ட சபையிலே, சர்வ கட்சி எம்.எல்.ஏ.-க்களும் ஏக மனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்று என்றால், இது ஒன்றுதான், என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தத் தீர்மானத்தின் பேரில் மத்திய சர்க்காரின் முடிவு என்ன ? நாற்பது பர்சென்ட் கைத்தறிக்கும், 60 பர்சென்ட் மில்லுக்கும் என்று செய்தார்கள். மில் முதலாளிகளுக்குத்தான் சலுகை காட்டப்பட்டது ; மில் முதலாளிகளின் தயவை நாடியிருப்பதால் தான் அப்படிச் செய்யப்பட்டது.

இந்த மதராஸ் ப்ளீடிங் விலையை மாற்றி விடுகிறார்கள். அதனால், நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்ட ஈட்டை சப்சிடியாகக் கொடுத்து அவர்கள் பிரச்னையை தீர்க்க வேண்டும். இந்த விஷயத்திலே கவனம் செலுத்தினால், அவர்கள் பிரச்சினை தீர்ந்துவிடும். சிறுவந்தாடு பட்டு உற்பத்தி செய்கிறது. அது சிறந்தது. அந்த கைத்தறித் துணிகளைப் பார்த்தாலே அவ்வளவு நன்றாக இருக்கும். அதே போல்தான் சங்கீதமங்கலத்திலும். சலுகை அளிக்கும் விஷயத்தில் கைத்தறிக்காரர்களுக்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த நேரம் இந்த அளவுக்குக் கொடுத்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, காலம் குறைவாக இருப்பதால், நான் எந்த வாதமும், விவாதமும் செய்யாமல், ஒவ்வொன்றுக்கும் புள்ளிகள் மட்டும் கொடுக்கிறேன். என்ன சென்னை ராஜ்யத்தில் ஆறு சர்க்கரை ஆலைகள் மட்டும் ; உத்தரப் பிரதேசத்தில் மட்டும் 66 ஆலைகள் என்று கேட்டார்கள். அவர்கள் ஏன் இந்த காமராஜ் இருக்கும் ராஜ்யத்தில் அப்படிக் குறைவு என்று கேட்டார்கள். கனம் காமராஜ் இருக்கும் சென்னையில் 136 நூற்பாலைகள், அங்கே 16 நூற்பாலைகள் தான் இருக்கிறது. அது ஏன் ? ஆகவே, எந்தெந்த ராஜ்யத்தில் எதை எதை அதிகமாகச் செய்ய முடியுமோ, அதைச் செய்கிறார்கள். அங்கே அதிகமாக சர்க்கரை ஆலைகள் வைக்க வசதிகள் இருக்கின்றன ; இங்கே நூற்பாலைகள் அதிகம் வைக்க நமக்கு வாய்ப்புகள் இருக்கின்றன. நமக்கு இயந்திரம் முதலியவைகளில் வசதி யிருக்கிறது, நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, அது ஒரு பெரிய குற்றச் சாட்டு இல்லை.

இரண்டாவது, கூட்டுறவு முறையில் ஏன் அதிகமாக சர்க்கரை ஆலைகள் நிறுவப்படவில்லை என்று கேட்டார்கள். 5, 6 ஆலைகளுக்கு மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறோம். பெண்ணாடம் ஆலையைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு வேண்டிய தொகையை வசூலிக்க முடியாததால், அது தனியார் துறைக்குப் போகிறது . . .

SRI A. GOVINDASAMY : அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் முதலில் 10 லட்சம் என்று சொன்னார்கள். பெண்ணாடம் மக்கள் அதைக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால், உடனே அதை 20 லட்சம் என்று சொன்னதும் (கனம் ஸ்ரீ வெங்கட்டராமன் : இப்பொழுது 25 லட்சம்) இன்னும் சங்கடம் அதிகமாகிவிடுகிறது.

THE HON. SRI R. VENKATARAMAN: ஆனால், இன்றைக்கு விலைவாசிகள் உயர்ந்துக் கொண்டே போகும்போது, இயந்திரங்களின் விலையும் உயர்ந்து விட்டது. இயந்திரங்கள் கொடுப்பவர்கள் முன் நாம் எதிர் பார்த்த விலைக்குக் கொடுப்பார்களா ? இதைக் கனம் கோவிந்தசாமி நன்றாக அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இன்னொன்று சொன்னார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஏகமனதாகத் தீர்மானம் செய்தோம், கைத்தறிக்குக் கரைபோட்ட வேஷ்டியையும் கலர் சேலையையும் ரிசர்வ் செய்ய வேண்டுமென்று. அதைச் சரியாகச் செய்ய வில்லை யென்றும் சொன்னார்கள். நான் கேட்கிறேன். அது இரண்டையும் செய்தால் கைத்தறிப் பிரச்னை தீர்ந்து விடுமா ? இந்த சட்டசபை தீர்மானம் நிறைவேற்றிய காலத்தில், நான் பார்லிமெண்டில் இருந்தேன். எனக்கு இன்றைக்கும் சரி, அன்றைக்கும் சரி, இந்த இரண்டு ரகங்களையும் கைத்தறிக்கு ஒதுக்குவதால், நெசவாளர்களின் பிரச்சினை தீராது என்பது தீர்மானமான நம்பிக்கை. பார்லிமெண்டில் அப்படித்தான் சொன்னேன் அதே அபிப்பிராயத்தை மீண்டும் சொல்லுகிறேன். காரணம் என்னவென்றால், கரை போட்ட வேஷ்டி கைத்தறிக்கு என்று சொல்லி விட்டால், இன்றைக்கு வங்காளத்திலும், பம்பாயிலும், கரைபோடாத வேஷ்டிகளையே வாங்கி உடுத்துகிறார்கள். வட்டசேரி கூட்டுறவு சங்கத்திலிருந்து வங்காளத்

துக்கும், பம்பாயிக்கும் அம்மாதிரிக் கரையில்லாத வேஷ்டிகளே போகின்றன. ஆகவே, அப்படி நாம் வைத்துவிட்டால், நம் துணிகளுக்கு ஏற்று மதியே இல்லாமல் போய்விடும். சென்னை ராஜ்யத்தின் டிமாண்டை மாத்திரம்தான் பூர்த்தி செய்ய முடியும்.

இரண்டாவதாக நாம் கலர் சேலையையும் வேஷ்டியையும் மில்லில் உற்பத்தி செய்யக்கூடாது என்று சொல்லி விட்டால் மில்காரர்கள் வெள்ளைத் துணியில் உற்பத்தி செய்து அதன் மேல் ஸ்க்ரீன் ப்ரிண்டிங்கை அழகாக அதில் அச்சடித்து அதை விற்று விடுவார்கள். அதனுல் நம்முடைய சேலைகள் எல்லாம் நம்முடைய ராஜ்யத்திலேயேதான் விற்பனைக்கு அனுப்ப முடியும். வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பவே முடியாது என்பதை கைத்தறி நெசவாளர்கள் மனதில் எடுத்துச் சொல்லி வற்புறுத்தும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதை எடுத்துச் சொல்லி அப்படித் தான் கட்டுப்படுத்த வேண்டும் என்று அவர்கள் சொன்னுல் அதன் மேற் கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள எனக்கு ஆட்சேபனை கிடையாது. எல்லா துணிகளும் வெள்ளையிலேயே வெளியாகி அச்சடிக்கும் வகையில் வந்து விடும். அதனுல் அவர்கள் கடுமையான அளவில் பாதிக்கப்படுவார் கள் என்பதை எச்சரித்துச் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றி நெச வாளர்களுக்கு எடுத்துச் சொன்னுல் இது நன்மை பயக்கும் என்று அவர் கள் நினைக்க மாட்டார்கள். இவைகளை யெல்லாம் அலசிப் பார்த்து ஒரு முடிவுக்கு வரக்கூடிய சக்தி அவர்களுக்குக் கிடையாது. அரசியல் கண் ணுேட்டத்துடன் அவர்களிடம் போய் சொல்லாமல் அவர்களுக்கு திட்டவட்ட மாகப் பயன் அளிக்குமா என்று பார்த்துச் சொன்னுல் தான் அவர்களுக்கு விளங்கும். நாம் சொல்வதை வைத்துக்கொண்டு தான் அவர்கள் தங்க ளுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளுகிருர்கள். ஆகவே இதைப்பற்றி நன்ருகப் பரிசீலனை செய்து பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த இரண்டு ரகங்களை மாத்திரம் ஒதுக்குவதன் மூலமும் கைத்தறிக்கு ரிபேட் கொடுப்பதன் மூலமும் கைத்தறியாளர்களுடைய பிரச்னையைத் தீர்க்க முடியாது. இன்னும் வட நாட்டில் இருக்கிறவர்களுக்கு.......... 1-00 p.m.

Sri A. GOVINDASAMY : இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது என்ற காரணத்தால் தான் மத்திய அரசாங்கம் இதை மறுத்ததா அல்லது முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்கிற காரணத் தால் தான் 60 பர்செண்ட் அவர்களுக்கும், 40 பர் செண்ட் நமக்கும் என்றும் நிர்ணயம் செய்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் வட நாடு தென்னுடு என்று சொல்வார் என்று தான், நான் வடநாடு என்று ஆரம்பித்தேன். அந்த விதத்தில் பதில் சொல்வதாக இருந்தேன். இந்தியா நாட்டில் இருக்கக்கூடிய மொத்த மில்களில் காம்போசிட் மில்கள், மில்களில் நெய்தலும் நூற்றலும் அதிகமாக இருக்கக்கூடியது பம்பாய், அகமதாபாத், ஷோலாப்பூர் மில்கள் தான். சென்னையிலுள்ள 136 மில் களில் பத்து அல்லது பதினைந்து தான் இந்த முறையில் இருக்கின்றன. மற்ற மாகாணங்களில் நெய்யக்கூடியதுதான் சென்னை ராஜ்ய கைத்தறி யாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஏதோ சென்னை ராஜ்ய சர்க்கார் தான் ஏமாற்றப்படுகிருர்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட குற்றம் சாட்டுவதற்கு இல்லை. இதைப்பற்றி மற்ற மாகாண மந்திரியுடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் சொன்னுர் அங்கு உற்பத்தியாகக்கூடிய நூல்களுக்கு வரி போட்டு விட்டு அவற்றை இங்கு அனுப்புகிருர்கள் என்று. பம்பாய், அகமதாபாத், ஷோலாப்பூர் மில்களில் உற்பத்தியாகக்கூடிய நூல்களுக்கு வரி விதித்து விட்டு மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுக்கிருர்கள் என்று சொல்லுகிருர். இதைப்பற்றி சற்று ஆலோசனை செய்து பார்க்கும் போது இந்த ராஜ்யம் எந்த விதமான தவறும் செய்ய வில்லை. இந்த ராஜ்யத்தில் எந்த விதமான தவறும் ஏற்படவில்லை. எந்த விதத்திலும் இந்த ராஜ்யத்திற்கும் குந்தகம் ஏற்படாத வகையில்தான் நடந்து வருகிறது.

ரிபேட் கொடுக்கவில்லை என்று சொன்னுர்கள். ஒரு சொசைட்டி ஆறு லட்சம் ரூபாய் ரிபேட் கேட்டது ; அந்த சொசைட்டிக்குக் கொடுக்கவில்லை

என்று சொன்னார்கள். ஆறு லட்சம் ரூபாய் ரிபேட் கொடுக்க வேண்டுமானால் ஒரு கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்திருக்க வேண்டும். ஆறு நயேபைசா என்றால் ஒரு கோடி ரூபாய் அளவுக்கு அங்கே நூல் இருக்க வேண்டும். அப்படி இருக்க முடியுமா ? இதை யாராவது நம்புவார்களா ? அந்த அளவுக்கு இருக்க முடியாது. அவர்கள் கொடுக்கிற கணக்குப்படி அவ்வளவு கொடுக்க வேண்டியதுதான். ஆனால் அந்த அளவுக்கு அங்கே நூல் இல்லை. அது பொய்க் கணக்கு என்று கண்டு பிடிக்கப்பட்டது. அந்த சொஸைட்டியின் கணக்கைப் புரட்டிப் பார்க்கும் போதுதான் அது பொய் கணக்கு என்று தெரிய வந்தது. அதன் பிறகு தான் இதைக் கண்டு பிடித்தோம். இப்படிப் பொய்க் கணக்கு காண்பித்து ரிபேட் க்ளேயிம் பண்ணியதால் ரிபேட் கொடுப்பதையே நிறுத்தி விட்டோம். ஒரு சொஸைட்டிக்கு ஐம்பது லட்சம் ரூபாய் என்று வந்தவுடன் சந்தேகம் ஏற்பட்டு அதன் கணக்கைப் பார்த்தோம். அது பொய் என்று கண்டு பிடித்து எல்லாவற்றையுமே நிறுத்தி விட்டோம். தவறாக நடந்து கொள்ளுகிறவர்களுக்கு எப்படி ரிபேட் கொடுக்க முடியும். நியாயமாக இருந்தால் நிச்சயமாக ரிபேட் கொடுக்க வேண்டியதுதான். டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் கொடுக்க வேண்டியவைகளையெல்லாம் கொடுத்து விட்டோம். கற்பனை அளவில் விற்பனை செய்ததாகச் சொன்னவைகளுக்கு ரிபேட் கொடுக்கவில்லை. அவைகளுக்கு கொடுக்க சர்க்காரால் இயலாது. ஒரு வருஷமாக இருந்தாலும் இரண்டு வருஷங்களாக இருந்தாலும் சரி அல்லது மூன்று வருஷங்களாக இருந்தாலும் சரி அது உண்மையாக இருந்தால் தெளிவான கணக்குக் காண்பித்தால்தான் கொடுக்க முடியும். இந்த சமயத்தில் எதிர்கட்சி அங்கத்தினர்களுக்கு ஒன்றை மட்டும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விதமாக எங்களிடத்தில் புகார் சொல்லுகிறவர்கள் இந்த மாதிரியான ஆதாரம் அற்ற புகார்களை மட்டும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒருவர் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக சொல்லக்கூடாது. புகார் சொல்லும் போது உண்மையைத் தெரிந்து கொண்டு புகார் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்வதில் உண்மை இருக்கிறதா என்று பார்த்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அப்படிப்பட்ட சொஸைட்டிகள், இவ்விதம் பொய் கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப் படுவார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இவற்றையெல்லாம் அவர்கள் ப்ரூவ் பண்ண வேண்டும். இவ்வளவு விற்றோம், இவ்வளவு நூல் வாங்கினோம், இவ்வளவு நெய்தோம் என்று எல்லாம் பலவிதமான கணக்குகளைக் காண்பிக்க வேண்டும். ஆனால் புகார் சொன்னவர்களிடத்தில் இப்படிப்பட்ட கணக்குகள் இல்லை. இவைகள் எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்யவில்லை என்று சொல்லவில்லை. பரிசீலனை எப்பொழுதும் இருந்து கொண்டேதான் இருக்கிறது. உண்மையாக இருக்கிறவர்களிடமிருந்து எந்த விதமான புகாரும் வரவில்லை. டிசம்பர் மாதம் முடிய நாங்கள் கொடுத்து விட்டோம்.

ரிபேட் தொகை விஷயமாக கனம் அண்ணாமலை அவர்கள் சொன்னார்கள். ரிபேட் தொகை மத்திய சர்க்காரிடமிருந்து மாகாண சர்க்காருக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அது காலா காலத்தில் வருவது இல்லை. அதனால் ராஜ்ய சர்க்கார் தங்கள் நிதியிலிருந்து முதலில் கொடுத்து விடுகிறார்கள். அந்தத் தொகைக்கு ஈடுகட்டி விட்டுப் பின்னால் அது வரும் போது ஈடு செய்து கொள்ளப்படுகிறது. பணத்தைச் செலவு செய்துவிட்டுப் பின்னால் வருகிறபோது அதை அட்ஜெஸ்ட் செய்கிறோம். சப்ளிமெண்டரி டிமாண்டில் 18 அல்லது 20 லட்சம் என்று கேட்டு வாங்கிக் கொடுத்துவிட்டு பின்னாடி அதைச் சரி செய்து கொள்ளுகிறோம். அப்படி வரக்கூடிய தொகை போக பாக்கியை இந்த ராஜ்ய சர்க்கார் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ப்ரோகிராமில் 60 ஆவது பக்கத்தில் பார்த்தால் இதைப் பற்றி தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய கணக்கு அங்கே இருக்கிறது. 1956–57-ல் 82 லட்சம் ரூபாயும், 1957–58-ல் 69 லட்சம் ரூபாயும், இன்னும் அடுத்தபடியாக 1958–59-ம் வருஷத்தில் 84 லட்சம் ரூபாயும், 1959–60-ல் 99 லட்சம்

25th April 1960] [Sri R. Venkataraman]

ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் சற்று கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பட்டுவாடா செய்யப் பட்ட தொகை 19 லட்ச ரூபாய். எற்கெனவே நான் விளக்கியதுபோல் எவ்வளவு தொகை வரவேண்டுமோ அது வந்தது போக பாக்கி இருக்கக் கூடிய தொகையை டிமாண்டில் போட்டுக்கொண்டிருக்கிறோம். நமது ராஜ் யத்தில் கொடுக்க வேண்டியதையும் சேர்த்து டிமாண்டாகப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் சொல்வது தவறான கணக்கு என்பதற் காக அவர்களுக்கு இந்தக் கணக்கைத் தெரியப்படுத்துகிறேன்.

SRI S. M. ANNAMALAI: சப்ளிமெண்டரி டிமாண்டில்

'A sum of Rs. 81.01 lakhs was provided in the Budget Estimate for 1959-60 under rebate on sale of handloom cloth. Out of this grant, a sum of Rs. 64·20 lakhs had to be utilized to meet the back log of arrear claims for rebate up to 31st March 1959 and the remaining provision of Rs. 16.81 lakhs alone could be utilized for sanctioning the rebate claims for the months April to July 1959. An additional expenditure of Rs. 18 lakhs from the State Funds had been sanctioned with a view to settling the outstanding claims of the co-operative societies under the rebate scheme for the remaining months up to 31st March 1960 . . .'

THE HON. SRI R. VENKATARAMAN: அது தான் பட்ஜட் முறை. இந்த வருஷம் 1959-60-ம் வருஷத்திற்கு 81 லட்சம் ஒதுக்கினாலும் அதுபோத வில்லை என்று மேற்கொண்டு 18 லட்சம் ரூபாய் வேண்டும் என்று சட்ட சபைக்கு வந்து கேட்டோம். சட்டசபையும் அனுமதித்தது. இந்த 99 லட் சம் ரூபாயைச் செலவழித்திருக்கிறோம். இந்தக் கணக்கிற்கு வராததற்குக் காலதாமதம் ஆனதுதான் காரணம். 1958–59-ம் வருஷக் கணக்கை பரிசீலனை செய்து ஆடிட் செய்து இங்கே அப்ரூவலுக்கு வந்தது. அகில இந்திய நிலைமை சரிப்படுத்தி மத்திய சர்க்காரிலிருந்து வரவேண்டிய பணம் வர வேண்டியதாக இருந்தது. அறுபது லட்சம் ரூபாய் என்பது பழைய பணம். நமக்கு வரவேண்டிய தொகை வரவில்லை. அது வந் தால் 18 லட்சம். அது இப்பொழுது மானிய கோரிக்கையாக வைத்து இருப்பது எல்லாம் சேர்ந்து 81 லட்சமும் 18 லட்சமும் ஆக 99 லட்சம் என்று சொன்னேன்.

அடுத்தபடியாக கனம் சின்னதுரை அவர்களுக்கு எப்பொழுதும் இந்த ராஜ்ய சர்க்கார் மீது ரொம்ப கோபம். அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே நான் ஒரு கணக்கு போட்டேன். அவர் என்ன சொன்னார்? இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய 5 லட்சம் தறிக்காரர்களுக்கு நீங்கள் எவ்வளவு வீடு கட்டினீர்கள். 1,400 வீடுகள். இவ்வளவுதானா? இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய மூன்று கோடி மக்களுக்கு, கிராமங்களிலே இருக்கின்றவர்களுக்கு எவ்வளவு வீடுகள் கட்டினீர்கள். 180. இவ்வளவு தானா. அவர் சொல்கிறபடி இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய 3 கோடி மக்களில் 5 பேர் ஒரு குடும்பத்துக்கு என்றால், 60 லட்சம் பேருக்கு 3,000 வீடுகள் கட்ட வேண்டும். அதற்கு 1,800 கோடி ரூபாய் வேண்டும். வீடு இல்லாதவர்கள் பாதிபேர்தான் என்றாலும், 900 கோடி ரூபாய் வேண்டும். இதைச் செய்ய நிதி எங்கே இருக்கிறது என்று அவர்கள் சொல்லிவிடுவார் களானால், அவர்களைவிட வேகமாக நான் வீடு கட்டுவேன். நாட்டிலே விவசாயம் செய்ய வேண்டும். தொழில்களை வைக்க வேண்டும். கல்விக்கு பள்ளிக்கூடங்கள் அமைக்க வேண்டும். வீடுகள் கட்டினால் மட்டும் போதுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 150 கோடி ரூபாய்க் குள் இவ்வளவு ரூபாய்தான் இன்னின்னதற்கு என்று ஒதுக்கி செய்ய முடிகின்றது. ஒவ்வொன்றையும் தனியாக எடுத்துக் கொண்டு இவ்வளவு தான் கட்டினீர்களா என்றால், நீங்கள் சொல்கிற எல்லாவற்றையும் சேர்த் துக் கணக்குப் போட்டால், சென்னை ராஜ்யத்துக்கு மட்டும், 10 ஆயிரம் கோடி ரூபாயாவது செலவழித்தால்தான் பாதியையாவது நாங்கள்

நிறைவேற்ற முடியும். ஆகவே இவ்வளவு தானு செய்கிறீர்கள் என்பது குற்றச்சாட்டு ஆகாது. ராஜ்யத்தின் நிதி நிலைமை என்ன, எவ்வளவு நிதி வசூல் செய்ய முடியும், அதை வைத்து எவ்வளவு சிக்கனமாக செலவு செய்ய முடியும், எதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும், என்பதையெல் லாம் பார்த்துத்தான் இதைச் செய்கின்ருேம். ஆகவே இன்றைக்கு இதை விட வேகமாக செய்யவில்லை என்கின்ற குற்றச் சாட்டானது, நமது ராஜ் யத்தின் நிதி நிலைமை இதைவிட இன்னும் அதிகமாக இல்லை என்பதைத் தான் எடுத்துக் காட்டுகின்றதே அல்லாமல், அதனுல் சர்க்கார் தவறு செய்துவிட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது.

நாங்கள் பெருமை அடித்துக் கொள்கிருேம் என்ருர்கள். இந்த ஜனநாயகத்திலே என்ன கஷ்டம் வந்து விட்டது என்ருல், எதிர்க்கட்சிக் காரர்கள் எல்லாம் "நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை, செய்யவில்லை" என்று கத்துகிருர்கள். ஆகவே, நாங்கள் "செய்கிருேம், செய்கிருேம்" என்று கத்துகிருேம். நீங்கள் கத்தாமல் இருந்தால், நாங்களும் கத்த மாட்டோம். ஆனுல் இரண்டு பேர் சொல்வதிலேயும் உண்மை இருக்கிறது. எப்படி என்ருல் செய்யாததை எல்லாம் கணக்குப்போட்டு, செய்யவில்லை என்ருல், அதுவும் உண்மைதான். செய்ததை மாத்திரம் வைத்துக் கொண்டு நாங்கள் செய்கிருேம் என்பதும் உண்மைதான்.

Credit Survey Committee roport ஆனது 1956–57-வது வருஷத் திலே யிருந்து கடன் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதன் அடிப்படை யிலே தயாரிக்கப்பட்டது. அதைத் தான் நான் ஆரம்பத்திலேயே சொன் னேன். 1956--57-லே சென்னை ராஜ்யத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கடன் கொடுக்கப்பட்டது 6 கோடி ரூபாய். ஆனுல் இன்றைக்கு 20 கோடி ரூபாய் கொடுக்கிருேம். அதுதான் மூன்று மடங்காக வளர்ந்திருக்கிறது என்று கூறினேன். **Credit Survey Committee** நாங்கள் கொடுத்த 6 கோடி ரூபாயை வைத்துக் கொண்டுதான் இவ்வளவு கொடுத்தோம் என்ருர்கள். இரண்டாவது **Credit Survey** ராமநாதபுரம், கோயமுத்தூர் மிகமிகக் குறைவான இடத்தையும், அதிகமாக இருக்கிற இடத்தையும் கொண்ட ஜில்லாக்களில் செய்தபோது, 6.6 பெர்சண்ட் வரை **Credit Needs** அன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்பதை **Credit Survey Committee** வளர்ச்சி அடைந்த பிரதேசத்திலேயுள்ள நிலைமையை காட்டிற்று. **Credit Needs** என்று சொல்லும்போது, கனம் சின்னதுரை அவர்கள், மனிதத் தேவை எல்லாவற்றையும் கணக்கிட்டு விட்டு பேசினுர்கள். கல்யாணம் செய்தல், கருமாதி செய்தல் எல்லாம் மனிதத்தேவைதான். ஆனுல் இன்றைக்கு நாம் விவசாயம் செய்வதற்கு எவ்வளவு வேண்டும் என்று கணக்கு போட வேண்டும். சென்னை ராஜ்யத்தில் விவசாயம் செய்ய 60 கோடி ரூபாய் வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இன் றைக்கு 20 கோடி ரூபாய் கடன் கொடுக்கின்ருேம் என்று சொல்லும் போது, விவசாயத்துக்கு தேவையான கடனில் மூன்றில் ஒரு பங்கு கொடுக் கப்படுகிறதைக் குறித்து, நாம் மகிழ்ச்சி அடையத்தான் வேண்டும். அதை நான் சொல்லக் கூடாது. கனம் சின்னதுரை அவர்களையே சொல்லும்படி யாக கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்துக்கு தேவைப்படும் 60 கோடி ரூபாய் கடனில், 20 கோடி ரூபாய் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக கொடுக் கின்ருேம் என்று சொன்னுல், அது எதிர்க் கட்சிக்காரர்களுக்கு கஷ்டமாகத் தான் இருக்கிறது. ஆனுல் உண்மை. என்ன செய்வது ?

அடுத்தபடியாக குறைபாடுகள் அந்த சொஸைடி சரியாக நடக்கவில்லை. இந்த சொஸைடி சரியாக நடக்க வில்லை, என்றெல்லாம் சொன்னுர்கள். சொஸைடிகளை சர்க்கார் நடத்தவில்லை. அங்கத்தினர்கள் சேர்ந்துகொண்டு, நடத்துகிற இயக்கம். ஆகவே, மனித வாழ்க்கையிலே என்னென்ன தவறுகள் இருக்குமோ, அவை அந்த சொஸைடிகளிலேயும் இருக்கும். சர்க்கார் மீது எப்பொழுது குற்றம் சொல்ல முடியும் என்ருல் தவறுகள் நடந்தால், நடக்கட்டும் என்று விட்டுவிட்டு, நடவடிக்கை எடுக்கவில்லை யென்ருல், அப்பொழுதுதான் சொல்லலாம். மற்றப்படி தவறுகள்

நடக்கிறது என்று சொல்வது, குற்றமல்ல. அது மனித இயல்பு. பெரும் அளவுக்கு இன்றைக்கு சொஸைடிகளில் குறைபாடுகள் குறைந்து விட்டன. எப்படியும், 8, 10 சொஸைடிகளுக்குமேல் குற்றம் சொல்ல முடியவில்லை என்ற உயர்ந்த நிலைமைக்கு நமது ராஜ்ய கூட்டுறவு இயக்கம் வளர்ந்து வருகிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அதே மாதிரி கூட்டுப் பண்ணை அதிலே சர்க்காருக்கு ஊக்கம் இருக்கிறது. ஒரு எக்கருக்கு குறைந்தது 250 ரூபாயிலேயிருந்து 300 ரூபாய் வரையில் செலவழித்தால்தான் கூட்டுப் பண்ணை வெற்றிகரமாக இருக்கும். அப்படிச் செய்யாமல், கூட்டுப் பண்ணை என்று சேர்த்து வைத்துவிட்டு, இது தானய்யா பண்ணை என்றால், உடனே எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வார்கள், கூட்டுப் பண்ணை வைத்தீர்கள், அதிலே லாபம் வரவில்லை என்று. ஆகவே, நம்மிடத்தில் இப்போது எந்த அளவுக்கு நிதி இருக்கிறது, அதை எந்த அளவுக்கு உபயோகப்படுத்தி அதிகமாக கூட்டுப்பண்ணை வைக்க முடியும் என்று பார்த்து தான் வைக்கின்றோம். அதிருஷ்ட வசமாக சென்ற ஆண்டிலே 20 கூட்டுப்பண்ணைகள் வைக்க வேண்டும் என்று இருந்த போதிலும், 80 பண்ணைகள் வைத்தோம். அந்த விதமாக மக்கள் ஊக்கமாக வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, கூட்டுப் பண்ணை வேண்டாம் என்று சொல்கிறவர்கள் மக்களை புரிந்து கொள்ளாதவர்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படி மக்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கும் போது, எவ்வளவு சீக்கிரத்திலே இதைச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறோம்.

கனம் சுப்பையா அவர்கள், **Land Mortgage Bank**-ஐப் பற்றி பேசுகையில், இனம், ஜமீன் ஏரியாவில் அதை வைக்கவில்லை, அங்கே சர்வே அண்ட் செட்டில்மெண்ட் ஆகவில்லை என்றார். இதில் அவை யாருக்குச் சொந்தம் என்ற தகராறு இருக்கிறது. அப்படி இருந்தாலும், இப்பொழுது மூன்று இடங்களில், ஜமீன் ஏரியாக்களில்—(1) சிவகெங்கை, (2) போடி, (3) ராமநாதபுரம்— **Land Mortgage Bank** வைப்பதாக சர்க்கார் முடிவு செய்து இருக்கிறது. அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ஒரு தாலுகாவிற்கு குறைந்தது ஒரு **Land Mortgage Bank** இருந்தால்தான் அங்கே உள்ளவர்களின் தேவையை பூர்த்தி செய்ய முடியும். அது தான் சர்க்காரின் லட்சியமும் கூட. இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் ஒவ்வொரு தாலுகாவிலேயும் **Land Mortgage Bank** வைக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம் என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கடன் கொடுப்பதிலே மிகக் குறைவாகக் கொடுக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். யுத்தத்திற்கு முன்னால் இருந்த நிலைமை என்னவென்றால், நிலத்தின் மதிப்பீட்டில் 25 பர்செண்ட் தான் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது திருத்தி அமைக்கப்பட்ட முறையில் பழைய மதிப்பீட்டில் 40 பர்செண்ட் கடன் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது . . .

இன்னும் நல்ல முறையில் கடன் திரும்பி வந்து கொண்டிருந்தால், அதை மாற்றியமைப்பதற்கு வழிகள் இருக்கின்றன. ஆனால் திடீரென்று கடனை அவர்கள் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால், இயக்கம் பலகீனம் அடைந்து விடும் என்ற காரணத்துக்காக இதில் மெதுவாக செய்ய வேண்டியிருக்கிறது. ஸ்ரீமதி லக்ஷ்மிகாந்தம் அம்மாள் அவர்கள் சொன்னார்கள் மதுரையிலே இருக்கிற சொஸைடிகள் 150 ரூபாய்தான் கடன் கொடுக்கிறார்கள் என்று. அது அவர்களுடைய ஒரு சிறப்பானபிரச்னை, அங்கே இருக்கிற **District Bank** மிக **Conservative** ஆக இருக்கிறது. பிற்போக்கு என்று சொல்லக்கூடாது. அதனால்தான் 150 ரூபாய்க்கு மேலே தரமுன் வரவில்லை. ஆனால் அதையும் அவர்கள் பார்த்து சரிவர செய்வார்கள் என்றுநினைக்கிறேன். அம்மாப்பேட்டை சொசைடியிலே நெசவாளர்களுக்காக கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் யார் யாரையோ வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கனம் **M. P.** சுப்ரமணியம் அவர்கள்

சொன்னார்கள். நெசவாளர்கள் குடும்பத்தில் பிறந்தவர்கள் என்ற காரணத்தால்—அவர்களுக்கு வீடு கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள் அப்படியொன்றும் பல பேர்களுக்கு கொடுக்கவில்லை. ஒரே ஒரு நபருக்கு தான் நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர்களாக—இருந்தாலும், நெசவு வேலை செய்யாதவர் என்ற காரணத்துக்காக வீடுகள் கொடுக்கப்பட்டது. அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அந்த வீட்டை இப்போது ஒரு நெசவாளிக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுவிட்டது.

கனம் கோதண்டராமன் அவர்கள் பேச்சுக்கு கொஞ்சம் தனியாக அவகாசம் கொடுக்க வேண்டும். அவர்கள் பேசும் போது எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. அவர் கூட்டுறவு இயக்கத்தை ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க்கிறாரா என்று புரியவில்லை. அவர் எப்போது பேச ஆரம்பித்தாலும் "இந்த விதமான ஊழல் எல்லாவற்றையும்" என்று தான் பேச ஆரம்பிப்பார். (சிரிப்பு) அப்படி அவர்கள் சொல்லுகிறபடி ஊழல்கள் இருக்குமானால் அவைகளை நாம் எதிர்த்தாக வேண்டும். கூட்டுறவு இயக்கமே ஊழல் நிறைந்ததாக இருந்தால் அதை நாம் விட்டு விடலாம். எங்கேயாவது ஊழல் இருக்கிறதா என்று துருவித் துருவிபார்த்தாலும் ஒரு சதவிகிதம் கூட அகப்படவில்லை. தனியார் கம்பெனிகள் வைத்திருக்கிறார்களே, அங்கேயெல்லாம் எவ்வளவு தவறுகள் நடக்கிறது என்று பார்த்தால், கூட்டுறவு இயக்கத்தில் அதைவிட குறைவாக தவறுகள்தான் இருக்கிறது. வேண்டுமென்றால் **Company Law Administration Report**-ஐப் பார்த்தால் இதன் உண்மை தெரியும். ஆகவே எடுக்கும்போதே கூட்டுறவு இயக்கத்தில் ஊழல்கள் மலிந்திருக்கின்றன என்று ஆரம்பித்தால், அது மக்களுக்கு தவறான அபிப்பிராயத்தை உண்டாக்கிவிடும். இப்படிப் பேசுவது அந்தக் கட்சியைப் பற்றி நமக்குத் தவறான அபிப்பிராயத்தை உண்டாக்குகிறது. ஒரு வேளை கூட்டுறவு இயக்கத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லையோ என்னவோ. அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் நாம் கட்சிகளாக பிரிந்திருக்கிறோம். இப்படிக் கட்சிகளாகப் பிரிந்து இருப்பது ஒரு இடத்தில் மட்டுமில்லை. அது எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டிருக்கிறது. சட்டசபையிலே கட்சிகளாகப் பிரிகிறோம். நகர சபைகளில் பிரிகிறோம். கிராமப் பஞ்சாயத்துகளில் பிரிகிறோம். அடுத்தபடி கூட்டுறவு இயக்கத்தில் பிரிகிறோம். அதனால் காங்கிரஸ்காரர் செய்வது ஊழலாகவே மற்றவர்களுக்கு தோன்றுகிறது. அது போலவே கம்யூனிஸ்டு ஒருவர் ஏதாவது செய்தால் அது காங்கிரஸ்காரர்களுக்கு ஊழலாக தோன்றுகிறது. இவர்கள் மாறிமாறி ஒருவரை ஒருவர் குற்றச்சாட்டு சொல்லி வருகிறார்கள். இப்படிச் செய்வதை இரண்டு பேரும் தவிர்த்துக் கொள்ளுவது நல்லதென்று நினைக்கிறேன். எப்படியாவது இந்த கூட்டுறவு சொஸைடிகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். அதன் மூலமாகத்தான் அரசியல் பலம் ஏற்படும் என்ற கண்ணோட்டத்துடன் சில பகுதிகளிலே நாம் வேலை செய்யக்கூடாது—அதில் ஒதுக்கப்பட வேண்டியது கூட்டுறவு இயக்கம் கூட்டுறவு இயக்கத்தில் யார் இருந்தாலும் எல்லோரும் ஒன்றாக இருந்து செய்ய வேண்டியகடமைகளை ஒழுங்காகச் செய்யக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். இந்த நிலைமையை நாம் நாட்டில் ஏற்படுத்த முடியும் என்று காட்டுவதற்கு நாம் ஒரு இடத்திலாவது கூடி வேலை செய்யவேண்டும். இப்போது போகிற வழியிலேயே நாம் போனால் அரசியல் பிரிவினை பல இடங்களிலும் பரவி அதன் காரணமாக பல வேலைகள் பாதிக்கப்படும் என்ற சூழ்நிலை ஏற்படுத்தக் கூடாது.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு முக்கியமான விஷயம்.

DEPUTY SPEAKER: Let the Hon. Minister finish his reply. I shall give an opportunity to the hon. Member to speak later on.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: Order, Order.

SRI V. K. KOTHANDARAMAN: : குறிப்பாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: The Hon'ble Minister is not yielding. Let the hon. Member resume his seat.

25th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : இது சபையின் உரிமை. இதை நான் இன்று உபயோகப்படுத்துகிறேன்.

காலதாமதம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். அதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் அவசரப்பட்டுத் தவறாக செய்து விடுவது நல்லதா. முக்கியமாக 38-வது செக்ஷனில் அடிக்கடி Enquiry செய்ய Petitionகள் வருகின்றன. அது வந்தவுடனே நான் உத்திரவு போட்டு எதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டால் 15 நாட்களுக்குப் பிறகு பாதிக்கப் பட்டவர்களிடமிருந்து இன்னொரு Petition வருகிறது. அதில் நிலைமை வேறு, சொல்லியிருக்கிற விவரங்கள் வேறு என்றெல்லாம் கண்டிருக்கும். ஆகவே, நான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, திடீர் உத்திரவு போடுவது இல்லை என்று முடிவு செய்துவிட்டேன். கட்டாயமாக பரிசீலனை செய்யும் அதிகாரிகளிடமிருந்து வருகிற ரிப்போர்ட்டை வைத்து தான் முடிவு செய்யவேண்டுமென்று நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். 38-வது செக்ஷன்படி Enquiry செய்ய வேண்டு மென்றால் மூன்று மாத தவணை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவசர அவசரமாக ஒரு மாதத்திலே Enquiry நடத்திவிட்டால் நியாயம் தவறாகப் போய்விடும். நியாயம் தவறிபோகக்கூடாது என்ற காரணத்துக்காகத் தான் கால தாமதம் ஆனாலும் கூட அதை நாம் சரியாக செய்ய முன் வந்துள்ளோம். ரெஜிஸ்டிரேஷன் போன்ற விஷயங்களில் அவைகளில் இருக்கின்ற காலதாமதத்தை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும். அதற்கான முயற்சியெல்லாம் நாம் புதிதாக கொண்டு வர இருக்கின்ற சட்டத்தின் கீழ் செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள் கிறேன். ஸ்ரீ சுப்பிரமணிய கௌண்டர் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் நிபுணர். அவர் மத்திய பாங்கு ஒன்று நடத்துவதுமல்லாமல், நுட்பமான பல விஷயங்கள் அவருக்கு நேரிடையாகத் தெரியும். அவர்சொல்லுவதில் முக்கியமான விஷயம் ஒன்று என்ன வென்றால், இடைக்கால கடன், மத்திய கால கடன் சரியாகக் கிடைப்பது இல்லைஎன்பது அது சர்க்காருக்கு நன்றாகத் தெரியும். குறுகிய காலக் கடன் 20 கோடிரூபாய் கொடுக்கிறோம் என்றால். குறைந்தது 5 கோடி ரூபாயாவது மத்திய கால கடன் கொடுக்கவேண்டும். ஆராய்ச்சி செய்தவர்கள் எல்லோரும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் நான்கில் ஒரு பங்கு மத்திய கால கடனாகத்தான் இருக்க வேண்டும்மென்று, இன்றைக்கு என்ன நடைமுறையில் இருக்கிறது என்றால், குறுகியகால கடன் கிடைக்கிறது என்ற காரணத்தால், அதை வாங்கி, மத்திய காலக் கடன் உதவிக்கு உபயோகப் படுத்தி, கிணறு வெட்டுவது, மாடு வாங்குவது போன்றதற்கு வருஷா வருஷம் இந்த Loanஐ Renew பண்ணுகிறார்கள். அது முறையல்ல. சரியல்ல. அந்த மத்திய காலக் கடன் கிடைப்பதற்கு Reserve Bankகுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதற்காக ராஜ்ய சர்க்கார் அதிகமாக பங்குத் தொகைபோட வேண்டி இருந்தாலும், போடத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த சந்தர்ப் பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக கதரைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். கனம் சின்னதுரை அவர்கள் பேசும் போது, கதர் ஒரு உன்னதமான கொள்கை என்கிறதை திருத்திக் கொள்ளவேண்டும் என்றார். கைத்தறி சம்பந்தமாக கைத்தறி நெசவாளர்கள் 18வது நூற்றாண்டில்தான் மில் நூலை எடுத்து, கைத்தறி நெய்ய ஆரம்பித்தார்கள். அதற்குமுன்னால் கையினால் நூற்ற நூலைத்தான் உபயோகப்படுத்தினார்கள். கைத்தறி நெசவு வேறு, கதர் நெசவு வேறு,என்று பிரிப்பது சரியல்ல. ஏனென்றால் இருவரும் ஒரே விதமான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள் நீண்ட காலமாக அந்த தொழிலை தொடர்ந்து நடத்துகிறார்கள். ஆகவே அவர்களை நாம் ஏமாற்றி, இவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும் அவர்களுக்கு கூடாது என்று கேட்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடுகட்டும் திட்டம் பற்றி கனம் கோவிந்தசாமி அவர்கள் குறிப்பிட்டு தங்கள் ஊருக்கு ஒரு திட்டம் வேண்டுமென்று சொன்னார்கள். அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் கவனித்துக் கொண்டு இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

Bleeding Madras-ஐப் பற்றி ஒரு வார்த்தை, இது தனி நபர் சுதந்திரத்தால் ஏற்பட்ட தவறு. அதை யார் வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும் எற்றுமதி செய்யலாம். ராஜ்ய சர்க்காரின் தூண்டுதல் பேரில் மத்திய சர்க்காரின் செலவில் அதற்கு என்று ஒரு officer-ஐ அனுப்பி அமெரிக்காவில் பேச்சு வார்த்தை நடத்தி 30 லட்சம் கெஜம் துணிக்கு ஆர்டர் வாங்கிக் கொண்டு வந்ததும் உடனே தனி நபர் சுதந்திரம் வந்து விடுகிறது. எல்லோரும் அந்த ரகமில்லாத துணிகளை வாங்கி அவசர அவசரமாக
தனிப்பட்ட நபர்கள் விஷயத்தில் வேண்டுமானால், டெபாசிட் கட்டியே ஆக வேண்டுமென்ற கட்டாயம் இருந்தால், எத்தனை தொகைக்குச் சீட்டு நடத்துகிறார்களோ அதிலே பத்தில் ஒரு பங்குத் தொகையை டெபாசிட்டாகக் கட்டவேண்டுமென்று சொன்னால் போதுமானது என்று தான் நான் கருதுகிறேன். ஒருவன் ஆயிரம் ரூபாய்க்கு சீட்டு நடத்தினால் நூறு ரூபாய் கட்டினால் போதும். சீட்டு எடுத்தவர்கள் மாதா மாதம் திருப்பித் தராதவர்கள் இருப்பவர்கள் பத்து சத விகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கும். அந்தப் பத்து சதவிகிதத்தினர் திருப்பிக் கொடுக்காதவர் இருந்தால், சீட்டு நடத்துகிறவன் தாங்கமாட்டான். பத்து சத விகிதம் அளவுக்குப் பணம் திருப்பித் தராதவர்களின் எண்ணிக்கை ஒருபொழுதும் வராது. நூற்றுக்கு ஒருவர் பணம் கொடுக்காத நிலைமை வருவது அரிது. பத்து சத விகிதம் டிபாசிட்டாக கட்டுவது என்று மாற்றியமைத்தால் அது பொருத்தமாக இருக்கும், போதுமானதாக இருக்கும், அதுவே போதிய பாதுகாப்பாக இருக்கும்.

ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி, பப்ளிக் லிமிடெட் கம்பெனி இருந்து நடத்துவதாக இருந்தால், அவர்களுடைய செலுத்தப்பட்ட மூலதனம் என்ன இருக்கிறதோ அந்த அளவு அவர்கள் சீட்டு நடத்தலாம் என்று வைக்கலாம். அதுவே போதுமான நம்பிக்கைக்கு உரியதாக இருக்கும். அவர்கள் பத்தாயிரம் ரூபாய் வரையில் சீட்டு நடத்துவதற்கு முடியும். அதற்குக் குறைவான அளவுக்கு சீட்டு நடத்துவதற்கு அனுமதி கொடுப்பதிலே தவறு இல்லை. ப்ரைவேட் லிமிடெட் கம்பெனி, அல்லது பப்ளிக் லிமிடெட் கம்பெனி விஷயத்தில் இப்படிப்பட்ட முறையைக் கையாளுவது பொருத்தமாக இருக்கும்.

பணம் எடுத்துக்கொண்டவர்கள் செலுத்தாமல் தவறுகிறவர்கள் 1 சத விகிதம் இருக்கலாம். அப்படி அவர்கள் பணம் செலுத்தாமல் இருந்தால், அந்தப் பணத்தைப் எப்படித் திரும்பப் பெறுவது என்பதற்கு இந்த மசோதாவிலே சொல்லப்பட்டிருக்கும் முறை நியாயமானதல்ல. இதன்படி பார்த்தால், சீட்டு நடத்துகிறவர்கள் சாதாரணமாக கடன் கொடுத்தவர்கள் கடனைத் திருப்பி பெறுவதற்கு சிவில் கோர்ட்டுக்குப் போய் டிக்ரி பெற்று நிறைவேற்றுவதைப் போல, இவர்களும் வழக்காடி டிக்ரி பெற்று நிறைவேற்றக்கூடிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்குப் பதிலாக, இந்த மசோதாவின்படி நாம் நியமிக்க இருக்கும் டைரெக்டரோ ரிஜிஸ்திராரோ இதை முடிவு செய்வதற்கான ஒரு முறையை வகுப்பது, அந்த முறையிலே ஷரத்தை மாற்றியமைப்பது அவசியம் என்று நான் கருதுகிறேன். கூட்டுறவு சட்டத்திலே கூட அப்படிப்பட்ட முறை தான் வகுக்கப்பட்டிருக்கிறது. யாராவது கூட்டுறவு சங்கத்திலே பணம் பெற்றுக்கொண்டு அவர்கள் திரும்பிக் கொடுக்காமற் போனால், அவன் கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசியம் இல்லை, டெபுடி ரிஜிஸ்திரார் பார்த்து தீர்மானிக்கலாம் என்று இருக்கிறது. தனியாக ஸ்டாம்ப் கட்டணம், வக்கீல் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ரிஜிஸ்திராரோ டைரெக்டரோ அவரே பார்த்துத் தீர்ப்புக் கொடுப்பதற்கு வசதியை இந்த மசோதாவிலே செய்து விடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். அதைச் செய்வதற்கு நாம் தயங்கக் கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சீட்டு நடத்துகிறதில் அடிக்கடி கணக்குகளை சீட்டு போடுகிறவர்களுக்கு விவரமாக எப்பொழுது கேட்டாலும் காட்டவேண்டுமென்றும், அதோடு மட்டுமல்லாமல், சர்க்கார் அதிகாரிகளுக்கு வாரா வாரம் காட்டவேண்டுமென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொல்லை கொடுக்கக் கூடாது. சீட்டு நடத்துகிறவர்கள் ஒன்றும் பெரிய அளவிலே குமஸ்தாக்களை வைத்து நடத்தி அதற்குரிய ஐந்தொகைக் கணக்குகளை அனுப்பிக்கொண்டிருக்கும் வசதிகளைப் பெற்றிருக்க முடியாது. இம்மாதிரி ஏலச் சீட்டு நடத்துகிறவர்கள் அவ்வளவு வசதி உள்ளவர்களாக இருக்க முடியாது. இவ்வளவு செலவுகளை ஏற்றுக்கொண்டால், அந்தச் சீட்டு கம்பெனி லாபகரமாக நடைபெறுவது என்பது துர்லபம். மூன்றுவது மாதங்களுக்கு ஒருமுறை கணக்கு கொடுப்பது என்பதற்குப் பதிலாக அதிகமாகப் போனால் மாதத்திற்கு ஒரு முறை ஐந்தொகைக் கணக்கு அனுப்புவது என்று ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த யோசனைகளையெல்லாம் பொறுக்குக் கமிட்டியானது ஆலோசிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இன்னும் கூட ஒரு யோசனை இருக்கத்தான் செய்கிறது. சர்க்கார் இந்த மசோதா இப்பொழுது கொண்டு வரத் தேவை இல்லை, இதை ஒத்திவைத்துவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். குதிரைப் பந்தயச் சட்டத்தை நிறைவேற்றியும் அமுலுக்குக் கொண்டுவராமல் இருந்ததுபோல் இல்லாமல், இந்த மசோதாவைக் கொஞ்ச காலம் கழித்து ஆலோசனை செய்வது மிகவும் நன்றாக இருக்கும். ஏதோ நாங்கள் நிறைவேற்றத்தான் செய்வோம் என்ற அளவிலே கனம் அமைச்சர் அவர்கள் பிடிவாதமாக இருந்தால், நான் சொல்லிய ஆலோசனை

25th April 1960] [Sri P. S. Chinnadurai]

களைப் பற்றி பரிசீலனை செய்யவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: This morning in the Business Advisory Committee meeting it was agreed that one hour would be sufficient for discussion of this Bill. But I find the Leader of the Opposition and many more members wanting to speak. The Hon. Minister will have to reply to the debate. Though the hon. Member Sri Chinnadurai was a party to this agreement, he has taken such a long time. Is the House willing to sit for the whole day for this Bill?

SRI P. S. CHINNADURAI: கட்சித் தலைவர் என்ற முறையில்.

MR. SPEAKER: The hon. Member cannot presume that. Having been a party to the agreement, he cannot speak for fifteen minutes. Does not the House want anybody else to speak?

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, so far as I am concerned I am of opinion that some kind of control is essential over these chit fund organizations. At the same time, I feel that there should not be undue or too much of interference by the Government. This kind of chit fund organizations serves an important purpose in the rural parts. It encourages thrift among the rural folk. These organizations have been doing very good work. At the same time I must admit the fact that there has been mismanagement in certain areas. Therefore a certain amount of control is absolutely essential. How far can we interfere with these chit fund organizations without bringing much hardship on the public who are keen on subscribing to them? I find that a slab of Rs. 100 has been fixed. My humble submission is that this Bill should cover all subscribers—even those people who subscribe Rs. 5 or even smaller amounts. Because, from my recent tours in rural areas I have come to know that so many poor people have fallen a victim to these chit organizations. We find people who are organizing these chit funds running away from this field one fine morning for good. Therefore there should be no slab system and there should be control over all subscribers to chit funds. They should all be brought under the purview of this Bill. We must see that there is not too much of interference on the part of the Government. The rules must be very elastic. Well, Sir, I am sure that the Joint Select Committee will go in detail into all these questions. I propose to speak at length only after the Bill comes to the Joint Select Committee. This is all my submission, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, before I start replying to the debate, I want to move an amendment to the original motion, because I find we have to include two more members. So, for the words '21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) the words '24 members (16 member sof the Legislative Assembly and 8 members of the Legislative Council)' have to be substituted. The two new members are—

(1) Sri S. Pakkirisami Pillai.
(2) Srimathi Savithri Shanmugham.

The Mover of the Bill has also to be a member of the Joint Select Committee, though he will not be counted as one to constitute the 16 members of the Assembly.

[Sri R. Venkataraman] [25th April 1960

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சம்பந்தமாக இவ்வளவு கருத்து வேற்றுமை இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அதுவும் எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களுக்குள்ளேயே இப்படி ஒரே மாறுபட்ட அபிப்பிராயம், **diametrically opposite views** என்று சொல்வார்களே அம்மாதிரி இருப்பது சற்று ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

இதிலே இன்னும் விசேஷம் இருக்கிறது. கட்டுப்பாடு உள்ள சமுதாயம் வேண்டும் என்று சொல்லக்கூடிய சோஷலிஸ்டு கட்சி, இது வேண்டாம் என்று சொல்லுகிறது; கட்டுப்பாடு வேண்டாம் என்று சொல்லக் கூடிய சுதந்திராக் கட்சி இது வேண்டும் என்று சொல்லுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் ரூ. 100-க்கு விதிவிலக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். இது நீண்டகாலமாக சர்ச்சையில் இருந்துவந்திருக்கிற விஷயம். 1946-லேயே பெடரல் கோர்ட்டில் அட்வகேட்டாக இருந்தார் இது சம்மந்தமான ரிப்போர்ட்டைத் தயாரித்து, அதில் நாடு எங்கும் சிட் பண்ட்ஸ் என்று சொல்லிக்கொண்டு பலபேர் மக்களை ஏமாற்றி வருகிறார்கள், கட்டுப்பாடில்லை, நிச்சயமாக கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அடுததப்படியாக ரெஜிஸ்ட்ரார் ஆப் கம்பெனிஸ், ஆபீஸில் பலர் தவறுகள் செய்கிறார்கள், பலவித ஏமாற்றங்கள் நடைபெறுகின்றன. திடீர் திடீர் என்று சிட் பண்டுகள் தோன்றுகின்றன, உடனே மறைந்துவிடுகின்றன, அதனால் பலருக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று எடுத்து காட்டினார்கள். மேலும், ரிசர்வ் பாங்கி ஒரு அறிக்கை விட்டார்கள்; அதிலே நிச்சயமாக இதற்குக் கட்டுப்பாடு செய்யவேண்டும் என்றும், அப்படிக் கட்டுப்பாடு செய்வதன் மூலமாகத் தான் ஏமாற்றுதல்களைத் தடுக்க முடியும்; மக்கள் பணத்தை அபகரிப்பதை தடுக்க முடியும் என்று அபிப்பிராயம் கூறினார்கள். ஆகவே, இப்பொழுது இந்தச் சட்டம் தேவையா, இல்லையா என்பதைப் பற்றிச் சர்ச்சை செய்ய வேண்டிய அவசியமில்லை.

சமுதாயத்தில் ஒருவர் சொத்தை பிறர் வசூலித்துப் பரிபாலனம் செய்கிறார் என்றால், அதற்கு நிச்சயமாக கட்டுப்பாடுகள் கொண்டுவர வேண்டும். சொந்த சொத்து, பணம், என்றால் அதற்கு ஏதாவது விலக்குக் கொடுக்கலாம் என்று சொல்லுவதில் அர்த்தம் உண்டு. அநேகம் பேர் சிட் பண்டை வைத்துக் கொண்டு, பிறர் பணத்தை வசூலித்து, வசூல் செய்த பணத்தோடு மறைந்துவிடுகிறார்கள். அது சமூகத் துரோகம் ஆகும். அந்த நிலையில், கட்டுப்பாடு செய்ய வேண்டியது என்ற நிலை ஏற்படுகிறது. கட்டுப்பாடு எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று யோசிக்கும்போது, கனம் எதிர்க் கட்சித் தலைவர்கள் சொன்னார்கள், 100 ரூபாய்க்கு விதிவிலக்குக் கொடுத்தது தவறு, எல்லாச் சிட்டுகளையும் இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று. இதே கருத்து, சர்ச்சை சர்க்கார் பரிசீலனையில் இருந்து வந்திருக்கிறது. கனம் சபாநாயகர் அவர்கள் இந்த இலாகாவைப் பரிபாலித்து வந்த காலத்தில், 100 ரூபாய்க்குக் குறைந்த சீட்டுகளுக்கு வேண்டுமா, வேண்டாமா என்று யோசனை செய்தார்கள். அப்பொழுது ரூ. 100-க்கு குறைவானதற்கெல்லாம் விதிவிலக்குக் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், திடீரென்று யோசனையில்லாமல் இதைக் கொண்டுவரவில்லை. இது சம்பந்தமாக நன்றாக பரிசீலனை செய்த பிறகே, விலக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது; எல்லா சிட்டுகளையும் கொண்டுவருவது என்று சொன்னால், சிறு சிறு சிட்டுகள் நடத்துகிறவர்கள் இருக்கிறார்கள். ஒரு ரூபா சிட்டு, இரண்டு ரூபா சிட்டு, என்று ஐந்து ரூபாய் வரையில் நடத்துகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் இந்த சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டியிருக்கும். அப்படிச் செய்து அமல் நடத்த முடியாது. பெரிய சிட்டுக்காரர்கள், அவர்களுக்கு மட்டும் சட்டம் அமல் நடத்தினால் போதும், அதுதான் நியாயம் என்று செய்கிறோம். இப்பொழுது தொழிலாளிகள் சீட்டில் ரூ. 400, ரூ. 500 என்று போட்டுச் செய்கிறார்கள் என்று கனம் சின்னதுரை

சொன்னார்கள். அது தொழிலாளிகள் எவ்வளவு உயர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதற்கு அறிகுறியைக் காட்டுகிறது. அவர்கள் சிறு சேமிப்புகளாக இல்லாமல், 400, 500 என்று சேமிப்பு செய்யக் கூடிய சிட்டுகளில் சேர்ந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு நடக்கும் சிட்டுகள் இந்த சட்டப்படி, சட்டத்தின் கீழ் இருக்கும் விதிகளை அனுஷ்டித்துத்தான் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் நன்றாக நடைபெறும். அதில் தவறு ஒன்றும் இல்லை. அம்மாதிரிப் பல சிட்டுகளையும் விட்டுவிட முடியாது.

அடுத்தபடியாக, எவ்வளவு அவர்கள் ஜாமீன் தொகை கொடுப்பது என்பது பற்றியது. அது ஒரு பெரிய பிரச்சினை. சிலர் சொல்லுகிறார்கள். கனம் சின்னதுரை சொன்னார்கள், பத்தில் ஒரு பங்குகொடுத்தால் போதும் என்று. அது போதாது ஏனென்றால், ஒரு சிட்டு 500, 1,000, 5,000 என்று இருந்தால், பத்து மாதம், இருபது மாதம் என்று நடந்தால், எவ்வளவு தொகை மாதம் என்று குறிக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஜாமீன் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. அப்பொழுது தான் போதுமான ஸெக்யூரிடி இருக்கும். அப்பொழுதுதான் ஏதாவது நஷ்டம் வந்தால், போட்டவர்களுக்கு போட்ட பணம் திரும்பி வரமுடியும். இல்லாவிட்டால், ரேடபிள் டிவிடெண்டாகத்தான், ரூபாய்க்கு நாலு அணா என்று இன்ஸால்வென்ஸியில் போல் கிடைக்கக் கூடும். ஆகவே தான் பணமாகக் கட்டினால் இவ்வளவு என்றும், சொத்து ஜாமீன் கொடுத்தால், இரட்டிப்பு மடங்கு என்றும் அமைத்திருக்கிறோம். சப்ஸ்க்ரைபர்கள் பணம் போடுகிறார்கள்; அந்தப் பணத்திற்குத் தக்க பாதுகாப்பு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் பணத்திற்கு பந்தோபஸ்து செய்ய முடியும். ஆகவே தான் சொத்து ஜாமீனுக்கு இரட்டிப்பு மடங்கு என்று அமைத்திருக்கிறோம். கம்பெனிகளாக இருந்தால், இதற்கு அவர்கள் தனியாக டெபாசிட் செய்துதான் ஆகவேண்டும். கம்பெனி யென்றாலே ஏதோ பெரிய ஸ்தாபனம் என்று ஒரு எண்ணம் இருக்கிறது. கம்பெனி சட்டத்தின்படி, ஒரு ஏழு பேர் சேர்ந்து தலைக்கு ரூ. 1 போட்டு, ரெஜிஸ்டர் செய்து விட்டால் போதும். மூலதனம் எதுவும் வேண்டாம். இண்டியன் கம்பெனிஸ் ஆக்ட் பிரகாரம், ரெஜிஸ்ட்ரேஷன் தொகை கொடுத்துவிட்டால், போதும். ஆகவே, அதுவும் சட்டத்தின் கீழ் வந்துதான் ஆகவேண்டும்.

இன்னும் சில பண்டங்களை சிட்டுகளாக நடத்துகிறார்கள். இந்த விஷயத்தை கனம் ஸ்ரீனிவாச அய்யர் எழுப்பினார்கள். ரூ. 100-க்கு மேற்பட்டது என்றால், அதுவும் இந்த அடிப்படையில்தான் வருவார்கள்.

SRI R. SRINIVASA IYER : சிட் எமௌண்ட் டெபனிஷனிலே,

"'chit amount' means the sum total of the subscriptions payable by all the subscribers for any instalment of a chit without any deduction for discount or otherwise;"

'The provisions of this Act shall not apply in respect of any chit, the chit amount of which does not exceed one hundred rupees or in respect of any chit started before the commencement of this Act.'

ஒரு மாதத்திற்கு ரூ. 100 என்று வைத்தால், 10 மாதம், 30 மாதம் என்று சொல்லும்போது ரூ, 1 சிட்டாக இருந்தால், அது பல நூறு ரூபாய் சிட்டு ஒருவர் நடத்துவதாகுமே . . .

THE HON. SRI R. VENKATARAMAN : "சிட்" என்று சொல்லும் போது, ஒவ்வொரு சிட்டும் தனித்தனியாகக் கருதப்படும். ஒருவர், ரூ. 5 சிட்டு, பத்து ரூபாய்ச் சிட்டு, ரூ. 100 சிட்டு என்று போட்டால், அவர் மூன்று சிட்டுகள் நடத்துகிறார் என்றாகும். ஒவ்வொரு சிட்டுக்கும் எவ்வளவு தொகை வருகிறதோ, அதுதான் கணக்கு. மேற்கொண்டு

[Sri R. Venkataraman] [25th April 1960

விவரமாக தெளிவாக செலக்ட் கமிட்டியிலே பிரிசீலனை செய்துகொள்ளலாம். சிட்டின் மதிப்பு ரூ. 100-க்குக் குறைவுமானால், அது சட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் வரவேண்டாம் என்பதுதான் சர்க்காரின் நோக்கம். ஒருவர் 10 சிட்டுகள் நடத்தினால், அவர் ஒவ்வொரு சிட்டுக்கும் டெபாசிட் கட்ட வேண்டும்.

இந்த மசோதாவிலே சிக்கலான ஒரு ஷரத்தும் இல்லை. ஆனால், ஏன் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறோம் என்றால், இந்த மசோதாவைப் பற்றிய அபிப்பிராயங்களைக் கேட்டு, அப்படி நடத்துகிறவர்களுக்கு என்ன குறைகள் இருக்கின்றன என்பதை விசாரணை செய்து, நாம் செய்யும் சட்டம் "பூல் ப்ரூப்" ஆக இருக்கவேண்டும் என்ற காரணத்திற்காக செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறோம். பக்கத்து ராஜ்யங்கள் எல்லாவற்றிலும் இப்படிப்பட்ட சட்டம் இருக்கிறது. புதிதாக நாம் மாத்திரம் செய்வதாக எண்ணவேண்டாம். ஆகவே, இந்த பிரேரேபணையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: Now I will put the Motion, as amended, to the vote of the House.

The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members of the Legislative Assembly and 8 members of the Legislative Council) to consider the Madras Chit Funds Bill, 1960 (L.A. Bill No. 5 of 1960) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee:—

The Hon. Sri M. Bhaktavatsalam.

Sri C. Muthiah Pillai.

Sri S. Ranganatha Mudaliar.

Sri V. Sankaran.

Sri D. Dasarathan.

Sri N. S. Sundararajan.

Sri K. Vinayakam.

Sri M. P. Sarathi.

Sri C. Natarajan.

Sri N. K. Palanisami.

Sri C. R. Ramaswami.

Sri T. S. Ramaswami.

Sri S. A. M. Annamalai Odayar.

Sri V. Subbiah.

Sri S. Pakkirisami Pillai.

Srimathi Savithri Shanmugham.

The Hon. Sri R. Venkataraman.

The motion was put and carried.

25th April 1960]

(4) THE INDIAN PENAL CODE AND THE CODE OF CRIMINAL PROCEDURE (MADRAS AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 7 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, in the place of the motion set down in the agenda, I would like to move the following motion :—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri Sowdi S. Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது இப்பொழுது பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகிற பல ஆட்சேபகரமான விஷயங் களைப் பிரசுரிக்காமல் தடை செய்வதற்காக. இதற்கு முன்பு "ப்ரஸ் அப்ஜெக்ஷனபிள் மேட்டர் ஆக்ட், 1951" என்று ஒரு மத்திய அரசாங்கச் சட்டம் அமுலில் இருந்து வந்தது. அதன் கீழ் இவ்வாறு ஆட்சேபகரமான விஷயங்கள் பிரசுரிக்கக்கூடிய பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுப்ப தற்கு வழி இருந்தது. 1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ம் தேதி யிலிருந்து அந்தச் சட்டம் அமுலில் இல்லை. அந்தச் சட்டம் ரத்தாகிவிட்டது. ஆகையினால் இன்றைக்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் இந்தியன் பினல் கோட்டின் கீழ்தான் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதில் முக்கியமான நடவடிக்கை, யார் எழுதப்பட்டாலும் அதனால் பாதிக்கப்படுகிறவர்களில் பலர் பத்திரிகை களில் வந்தது போதும் இனிமேல் கோர்ட்டில் ஒரு தடவை அவமானப் படுத்துவதற்கு இல்லை என்பதற்காக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கா மல் விட்டு விடுகின்றனர். இதனால் அந்தப் பத்திரிகைகளைப் பிரசுரிக்கக் கூடியவர்களுக்கு இன்னும் கொஞ்சம் தூண்டுதலாக ஆகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம்.

அதை விட்டு இன்னும் இரண்டு விதமான பிரசுரங்கள் இருக்கின்றன. அதே மாதிரி பெண்கள் விஷயமாகவும் மற்ற விஷயமாகவும் எழுதுவதின் மூலமாக அதிக பத்திரிகைகள் அதிகமாக விற்கவேண்டும் என்று ஒரு

பக்கம், இன்னொரு பக்கம் மற்றவர்களைப்பற்றி அவதூறாக எழுதுவதும் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எழுத முயற்சிப்பதும். இன்றைய தினம் இந்த இரண்டையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் இப்படிப்பட்ட திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. முதன் முதலில் இந்தியன் பினல் கோட் 292-ஆவது செக்ஷன் இருக்கிறது. அதில் கொடுத்திருக்கக்கூடிய தண்டனையை அதிகப்படுத்தி இருக்கிறது. அதில் மூன்று மாதங்கள் சிறைவாசம் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பதிலாக இரண்டு வருஷ தண்டனை இதன் கிழ் கொடுக்கலாம் என்று தண்டனையை அதிகப்படுத்தியிருக்கிறது. இது ஒன்று.

இன்னும் புதிய செக்ஷன் ஒன்றும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது செக்ஷன் 292(ஏ). இது ரொம்பவும் முக்கியமானது. அதாவது பத்திரிகைகள் என்று பேசும்போது அவைகளில் எழுதக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்கவும், அதற்கு மேல் போஸ்டர்கள் போடுகிறார்கள். அது இன்னும் மோசமானது. ஆகவே போஸ்டர்கள் போடுகிறவர்கள், எழுதுகிறவர்கள் இவர்கள் எல்லோரையும் சேர்த்து இந்தச் சட்டத்தின் கிழ் கொண்டு வந்தால்தான் இந்த ஆபத்தைத் தடுக்க முடியும் என்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல இடங்களில் பல குடும்பங்களைப்பற்றியும் பல குடும்ப ஸ்திரீகளைப்பற்றியும் சிறிய பெண்களைப்பற்றியும் தாறுமாருக எழுதக்கூடிய நிலைமையில் பத்திரிகைகளில் பார்க்கிறோம். அவைகளை எப்படித் தடுப்பது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. பல சமயங்களில் அதைப் பயன்படுத்திக்கொண்டு அந்தப் பத்திரிகைகளில் முதலில் பிரசுரித்துவிட்டு மற்ற விவரங்கள் அடுத்த இதழில் வருகிறது என்று எழுதிவிடுகிறார்கள். அப்படி அடுத்த இதழில் வராமல் இருப்பதற்காக பணத்தைக் கொடுத்தாவது தடுத்து விடலாம், சரி செய்து விடலாம் என்று இருக்கிறார்கள். இந்த முறையில் பல பத்திரிகைகள் பணம் சம்பாதித்து வருகின்றன. இப்படிப்பட்ட போஸ்டர்கள் சாதாரணமாக வெற்றிலை பாக்குக் கடைகளில்தான் அதிகமாகத் தொங்கவிடப்படுகிறது. இதன் மூலம் விளம்பரப்படுத்தப்படுகிறது. அதையெல்லாம் தடுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குக் கண்டிப்பான சட்டம் இருக்க வேண்டியது அவசியம் என்கிற முறையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு புதிய செக்ஷனை அதாவது 292(ஏ) என்று அதற்கு வழி செய்யக்கூடிய அளவில் எல்லா விஷயங்களையும் கட்டுப்படுத்தக்கூடிய முறையில் இந்த செக்ஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்தபடியாக இருப்பது 293-வது செக்ஷனைப்பற்றியது. செக்ஷன் 292(ஏ)-யில் சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதில் தண்டனையை அதிகப்படுத்தி இருக்கிறோம். ஆறு மாதங்கள் என்று இருப்பதற்குப் பதிலாக மூன்று வருஷங்கள் என்று போடப்பட்டிருக்கிறது. அதை அனுசரித்து கிரிமினல் ப்ரொஸீஜர் கோடைத் திருத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். எல்லா பொது மக்களும் இது நியாயமானது என்று கருதி இதை வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். இந்தச் சட்டம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதற்காக செலெக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறோம். அங்கே இதைப்பற்றி நன்ருகப் பரிசீலனை செய்ய வேண்டும். இதைப் போலவே இன்னொரு மசோதாவையும் நாளைக்கு கொண்டு வரப்போகிறோம். அதையும் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்போகிறோம். அதாவது கோர்ட் நடவடிக்கை, கோர்ட்டில் நடக்கக்கூடிய நடவடிக்கைகளைப்பற்றியும் ஆபாசமாக பிரசுரிக்கிறார்கள். அதையும் தடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்கு மசோதா வருகிறது. ஆகவே இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு சீக்கிரத்தில் செலெக்ட் கமிட்டி அவைகளைப் பரிசீலனை செய்து இன்னும் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமானல் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு செலெக்ட் கமிட்டி நன்ருக பரிசீலனை

25th April 1960] [Sri C. Subramaniam]

செய்து. வேண்டிய திருத்தங்களைச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளு கிறேன். நல்ல முறையில் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் செலெக்ட் கமிட்டி திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்த அளவில் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri Sowdi S. Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

I have allowed half an hour for this Bill.

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இது போன்ற ஒரு மசோதா பல காலத்திற்கு முன்பாகவே இந்த சபையில் கொண்டு வரவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வந்தது. அந்த ஒரு கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் ஏற்கனவே இருக்கக்கூடிய ஐ.பி.சி. 292-வது செக்ஷனில் இருக்கிறது அப்சீன் லிடரேசர் இருந்தாலுங்கூட அதற்குத் தண்டனை கொடுக்க ப்ரொவிஷன் இருக்கிறது. அதைத் தவிர இப்பொழுது 292(ஏ) என்பதில் இரண்டு மூன்று விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது

'Literature which is grossly indecent, or is scurrilous or intended for blackmail . . .'

என்று மூன்று நான்கு அட்ஜெக்டிவ்ஸ் இருக்கின்றன. அதே போன்று லிடரேசர் இது சம்பந்தமாக டாகுமெண்ட் பிக்சர் இது எல்லாம் அதே மாதிரி இல்லாமல் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த மாதிரியான சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

(Sri M. Jagannathan in the Chair.)

இப்படி பத்திரிகைகளில் ஆபாசமாக விளம்பரப்படுத்துவதை தடை செய்வதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்ட நபர்களை குறிப்பிடாமல், பொதுவாக கீழ்த்தர உணர்ச்சியை கிளப்பக்கூடிய விஷயத்தை தூண்டி விட்டால், அது இதிலே வருமா என்பது ஓரளவிற்கு சந்தேகமாக இருக்கிறது. Section 292-ல் **obscene** என்று போடப்பட்டு இருக்கிறது. **grossly indecent, or is scurrilous or intended for blackmail** என்றுதான் இருக்கிறதே தவிர, இது போன்ற கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும்படியான விஷயங்களையோ, சமாசாரங்களையோ, தடுப்பதற்கு முடியுமா ? ஒரு பத்திரிகையிலே வரும்படியான ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பல நடிகைகளுடைய படங்கள் போடப்படுகின்றன, பலவித கோணங்களில் இவைகளுக்கு இளைஞர்களிடையே கீழ்த்தர உணர்ச்சியை தூண்டும்படியான தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. இதை **"obscene"** என்று சொல்வதில் அபிப்ராய பேதம் ஏற்படலாம். அந்த வார்த்தை பொருத்தம் இல்லாமலும் இருக்கலாம். **Which is calculated to injure public morals** எனவே அப்படிப் படம் போட்டு எழுதுவதையும் தடுப்பதற்கு வகை செய்ய வேண்டும்.

மற்றொரு பிரிவை எடுத்துக்கொள்ளும்போது **Madras Judicial Proceedings. Regulation of Reports) Bill** அதையும் சேர்த்தால் நன்றாக இருக்கும்.

இன்னும் திட்டவட்டமாக சொல்ல வேண்டுமானால் **'excite low, vulgar or immoral or sensual taste'** இந்தமாதிரி இருந்தால் நன்றாக இருக்கும். எனவே அதையும் இதிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். **Explanation**-லே **For the purposes of this section, the word, 'scurrilous' shall be deemed to include any matter which is likely to be injurious to morality is calculated to injure any person.** என்று பொதுவாகப் போடப்பட்டிருக்கிறதே தவிர குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. ஆகவே அதுவும் வரும்படியாக **broad based**-ஆக இருந்தால் நன்றாக இருக்கும் என்று கூறி, பொறுக்குக் கமிட்டியிலே இதுவெல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, பத்திரிகைக்குமட்டும் என்று சொன்னார்கள். ஆனால் இதைப் படித்து பார்க்கின்றபோது, மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு ஒரு **(atom bomb)** போல் இருக்குமோ என்று சந்தேகப்படும் அளவிற்கு இருக்கிறது. ஏறத்தாழ 5 **(clause)**-கள்தான் இருக்கின்றது என்றாலும்கூட. இது பத்திரிகைகளை மட்டுமல்ல. மேடைப் பேச்சுகளையும் பாதிக்கும். இப்பொழுது மாற்றுக் கட்சிக்காரர்களுக்குத்தான் சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர்களுக்கு, எந்த சுருக்கெழுத்தாளரையும் அனுப்புவதில்லை. அவர்கள் ஏதாவது ஆபாசமாகப் பேசுகிறார்களா, அல்லது கண்ணியமற்ற முறையிலே பேசுகின்றார்களா என்பதை சர்க்கார் கவனிப்பதே கிடையாது. ஆனால் இந்த செக்ஷன்படி, பூராவையும் படித்துப் பார்த்தால், ஆபாசம், ஸ்கரிலஸ் என்பதற்கு **(definition-ஏ)** கிடையாது. கடைசியிலே **(Explanation)** என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் கூட சரியாக சொல்லப்படவில்லை. அது போலவே **(indecent)** என்ற வார்த்தைக்கும் சரியாக **definition-ஏ** கிடையாது. வேண்டுமென்றே மாற்றுக் கட்சிக்காரர்களை ஒழிக்க வேண்டும் என்ற திட்டத்தில் இந்த மசோதா கொண்டுவரப்படுகின்றதே ஒழிய வேறு அல்ல என்றுகூட

நினைக்கிறேன். அரசியல் நிர்ணயச் சட்டம் 19-வது பிரிவுபடி பேச்சு சுதந்தரத்தைக்கூட பறிக்கக்கூடிய அளவிற்கு இந்த மசோதா அமைந் திருக்கிறது.

நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வரவேற்கிறேன். ஆனால் ஒரு சட்டம் இரண்டு கட்சிக்காரர்களுக்கும் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதை விட்டு விட்டு மாற்றுக் கட்சிக்காரர்களை மட்டும் அடக்க வேண்டும் என்று நினைவிலே இது வருமேயானால், உண்மையிலேயே இதைவிட கேவலமான நிலைமை வேறு எந்த மாநிலத்திலேயும், எந்த நாட்டிலேயும், இருக்க முடியாது. இதில் ஒவ்வொரு கிளாசாக படிக்கும் போது உண்மையிலே அமைச்சர் அவர்கள் இதை வேண்டுமென்றே கொண்டுவந்திருக்கின்றார் என்றுகூட நினைக்கிறேன்.

அடுத்தபடியாக எல்லா மசோதாக்களிலும், விதிகளை நிர்ணயிக்கும் பொழுது அந்த விதிகள் சட்ட மன்றத்தின் மேசையின் மீது வைக்கப்படும். ஆனால் இதிலே அதுமாதிரி செய்ய முடியாது.

அதுமட்டுமல்ல. மற்ற **Clause**-களை படித்துப் பார்க்கும்போது **'Whoever offers or attempts to do any act which is an offence under this section'** என்று இருக்கிறது. அதாவது சாதாரணமாக வேஷம் போட்டுக்கொண்டு ஆபாசமாக நடிக்கப் போகிறான் என்று சந்தேகித்தால்கூட அவர்களை கைது செய்து விடலாம் என்ற பிரிவு இதிலே இருக்கிறது **'by signs or by visible representation'** என்று இந்த மசோதாவில் சொல்லி இருப்பது ஒரே பயங்கரமாக இருக்கிறது. கிராமப்புரங்களிலே துரௌபதி அம்மனை துயில் உரிவார்கள். அதுகூட ஆபாசமாக இருக்கும் சிலருக்கு. இதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் ஒரு சட்ட நிபுணன் அல்ல. இருந்தாலும், அவ்வளவு பயங்கரமான விதிகள் இருக்கிறது என்றால், இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதைப் போலவே **'conveys any picture or any printed or written document which is grossly indecent or, is scurrilous or intended for blackmail'** என்று சொல்லப்பட்டிருக்கிறது. நானே சாதாரணமாக ஆபாசப் படம் போடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட படத்தை பிரின்ட் செய்து பண்டல் கட்டி என்னுடைய நண்பர் இடத்திலே கொடுத் தால், அவரும் நண்பர் என்ற முறையிலே எடுத்துச் செல்வாரேயானால் அவரை கைது செய்துவிடலாம் என்று இந்தக் குறிப்பு சொல்கின்றது. **Indian Penal Code**-ல் 292 செக்ஷன்படி பார்த்தால் ஏதோ ஒரு அளவிற்கு பேச்சு சுதந்திரம் தரப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு **Amendment**-ஐக் கொண்டுவந்து, அதன் மூலமாக மறைமுகமாக மாற்றுக் கட்சிக்காரர்களை நசுக்க வேண்டும் என்ற எண்ணம் சர்க்காருடைய மனதிலே இருக்கிறது என்பது தெரிகிறது. சுருக்கெழுத்தாளர்களை மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு மட்டும் அனுப்பக்கூடாது. அவர்கள் கட்சிக்காரர்கள் பேசும் போதும் அனுப்ப வேண்டும். எந்தக் கட்சிக் காரர்கள் பேசினாலும் **Tape record** செய்து, அவர்கள் இன்னின்ன வகையில் ஆபாசமாக பேசுகிறார்கள், இன்னின்ன வகையில் பண்பற்ற முறையிலே பேசுகிறார்கள், ஆகையினாலே வழக்குத் தொடரப் போகிறோம் என்றுகூட சொல்லலாம். இதை அனைத்தையும் பொறுக்கு குழுவில் நல்ல முறையிலே பரிசீலனை செய்து, எதிர்க் கட்சியும் ஜனநாயக ரீதியில் இயங்க வேண்டும், ஜன நாயகம் தழைத்தோங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இதற்கு ½ மணி நேரம் போதும் என்று நினைக் கிறேன். ஒவ்வொருவரும் இரண்டு நிமிஷங்கள் பேசினால் நன்றாக இருக்கும். இன்னும் இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. பேச வேண்டு

மென்றால் பேசிக்கொண்டே போகலாம். இன்னும் இரண்டு அங்கத்தினர்கள் பேசி இதை முடித்து விடலாம் என்று இருக்கிறேன்.

Sri T. T. DANIEL : Mr. Speaker, Sir, I support this motion. I would say that this Bill is a very noble piece of legislation, which has been introduced at the most appropriate time when yellow journalism is slowly increasing in our State. The object of the Bill is really very noble. Nobody need feel that this Bill will be used against any particular political party. But one thing I desire to bring to the notice of the Hon. Minister, that is, whether the offences should be made cognizable or non-cognizable, bailable or non-bailable, or compoundable or non-compoundable. These are points which should engage the serious attention of the Joint Select Committee.

* Sri D. S. AUTHIMOOLAM : Mr. Speaker, பொதுவாக இப்போது தமிழ் நாட்டில் பத்திரிகை தொழில் வெகு வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. ஆனால் வளர்ந்துகொண்டு இருக்கின்ற முறையை பார்த்தால் மிகவும் வேதனைப்பட வேண்டி இருக்கிறது. தமிழ் நாடுதான் இந்தியாவிலேயே நாகரீகத்தில் சிறந்த பிரதேசம். இங்குதான் இப்போது ஆபாச பத்திரிகைகள் ஏராளமாகிவிட்டன. கனம் மந்திரி அவர்கள் பேசும்போது இந்த பக்கம் திரும்பி Smile பண்ணூர். இந்த மாதிரி பெரிய மனிதர்கள் எல்லாம் Yellow பத்திரிகைகள் நடத்தி பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டார்கள். எனக்கு முன்பு பேசிய எஸ். எம். அண்ணாமலை அவர்கள் D. M. K. பார்டியை நசுக்க இந்த மசோதா வந்திருக்கிறது என்று கவலைப்பட்டார்கள். அப்படி ஒன்றும் அவர்கள் விசேஷமாக கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. மந்திரி அவர்கள் அவர் தெரிவித்த அச்சத்திற்கு லகுவாக பதில் சொல்லி விடுவார். கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக எல்லா பத்திரிகைகளின் தரமும் கெட்டுவிட்டது. இப்படிப்பட்ட பத்திரிகைகளை அரசியல் கட்சிகளும் ஆரம்பித்துவிட்டன. ஆகவே தமிழ் நாட்டின் பண்பாட்டை காப்பாற்ற இப்படிப்பட்ட ஒரு நல்ல சட்டத்தை இயற்ற வேண்டியது அவசியம் ஆகிறது. தனிப்பட்ட மனிதர்களுக்கு I.P.C. செக்ஷன் 500 இருக்கிறது. செக்ஷன் 193-ல் பாதுகாப்பு இருக்கிறது. இப்போது திருநெல்வேலியில் மூன்று பத்திரிகைகளை ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் பல பெண் பிள்ளைகளின் படத்தைபோட்டு நாளைக்கு இவர்களைப்பற்றி மற்ற தகவல்கள் வரும் என்று Announcement வருகிறது. இப்படிப்பட்ட பத்திரிகைகள் நிறைய சிலவாகிறது. இந்த மாதிரி பத்திரிகை தொழில் ரொம்ப லாபகரமாகிவிட்டது. பேப்பர் Black market-ல் நிறைய கிடைக்கிறது. வாங்கி போட்டு இப்படிப்பட்ட பத்திரிகைகளை அச்சடித்து பொது மக்கள், வாலிபர்கள் இவர்களின் கவனத்தை Attract பண்ணி அவர்களை கெடுக்கிறார்கள். ஆகவே இந்த சட்டம் வந்ததை நான் மனப் பூர்வமாக வரவேற்கிறேன். இந்த சட்டத்தை கொண்டுவந்த மந்திரி அவர்களை வாழ்த்துகிறேன். நல்ல முறையில் இதை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த சட்டத்தை வரவேற்கிறேன். சமுதாயத்தில் இது போன்ற Yellow பத்திரிகைகள் இருக்கக் கூடாது என்பதில் கருத்துவேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நண்பர் அண்ணாமலையின் சந்தேகத்திற்கு இந்த Section 3-B, Clause காரணமாய் இருக்கலாம் என்று நினைக்கிறேன். 'Whoever by words, either spoken or intended to be read, or by signs or by visibe representations. makes any imputation which is grossly indecent or is scurrilous or intended for blackmail . . . என்று இருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டை பொருத்தவரை அரசியல்

கட்சிகள் ஒன்றை ஒன்று தாக்கியும் அவைகளுக்குள் ஒரு சுமுகமான நிலைமை இல்லாத காரணத்தால் அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் தவறான முறையில் இதை உபயோகித்துக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் இருக்கலாம். பொதுக்கூட்டங்களில் **indecent scurrilous** ஆக பேசினால் அதை கண்டு பிடிப்பது கடினம். செய்தித் தாள்களில் வருவதை நேரில் பார்க்கிறோம். ஆகவே தவறாக புரிந்துகொள்ள சந்தர்ப்பம் இல்லை. ஆனால் கூட்டத்தில் பேசுவதை எழுத்தின் மூலம் தவறாக எழுதிக்கொண்டுவந்து கொடுத்தால் உண்மையை தெரிந்துகொள்வது கஷ்டம். இது போன்ற அரசியல் காரியங்களுக்கு இதை பயன்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: சபாநாயகர் அவர்களே, இந்த சட்டம் பொதுவாக மக்களுக்கு இருக்கக்கூடிய சுதந்திரத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற முறையில்தான் இந்த சட்டம் வருகிறது. பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் இது எல்லாம் ஒரு அடிப்படையான உரிமையாக நம்முடைய அரசியல் சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதன் காரணத்தாலேயே இந்த உரிமைகளை நாம் கொண் டாடும்போது மற்றவர்களுடைய உரிமைகள் எவ்விதத்திலும் பாதிக்கப் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். நம்முடைய உரிமைகளை நாம் நிறைவேற்றுவதின் மூலம் மற்றவர்களுக்கு எவ்வித மான தீங்கோ, அல்லது வேறுவிதமான தொல்லையோ ஏற்படாமலும் அவைகளை தவிர்க்க வேண்டுமென்றும் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக் கிறது. அதன் காரணத்தால்தான் இதில் இன்னும் எத்தனையோ சேர்க்க லாம் என்று சங்கரன் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி செய்தால் பேசவோ எழுதவோ இடமே இல்லாமல் போய்விடும். ஆகவே எந்த அளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு கொண்டுவந்திருக்கிறோம். உரி மைகளை கட்டுப்படுத்துவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இன்னொரு கோடிக்கு போய்விடக்கூடாது. ஆகையினால் யோசித்து இந்த அளவுக்கு செய்யவேண்டுமென்று இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மறுபடி **Select** கமிட்டியில் இதுபற்றி பரிசீலனை செய்யும்போது எங்களுக்கு தோன்றாதது, அவசியமானது ஏதாவது விட்டுப்போய் இருந்தால் அவைகளை சேர்க்கவேண்டுமே தவிர நமக்கு மனதில் தோன்றுவதை எல்லாம் சேர்த்துக்கொள்வது சரியல்ல. இதில் முக்கியமாக நாம் கவனிக்கவேண்டி யது ஆதிமூலம் அவர்கள் சொன்னது. நமக்குள் எதை எழுதுகிறோம், பேசுகிறோம் என்பதல்ல. வெளிநாடுகளில் இருந்து யாராவது வந்து தமிழ னுடைய பண்பாடு என்ன என்பதை தெரிந்துகொள்ள இங்கே இருக்கின்ற பத்திரிகைகளை பார்த்தால் அல்லது பிறர் மூலமாக அவைகளில் இருக் கிறதை தெரிந்துகொண்டால் என்ன ஆவது. போஸ்டர்களை பார்க்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள். இன்று இருக்கின்ற நிலைமையில் தமிழ்நாட்டில் வரக் கூடிய பத்திரிகைகளைப் பார்த்தால் உண்மையிலேயே நாம் எல்லோரும் வெட்கப்படக்கூடிய ஒரு நிலைமைதான் ஏற்படும் என்று நான் நினைக் கிறேன். ஆனால் இந்த தமிழர்களுடைய பண்பாடு எவ்வகையிலும் சீர ழிந்துபோகாமல் பாதுகாக்கக்கூடிய முறையில் நாம் எல்லோரும் நட வடிக்கை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியம். பத்திரிகை தொழிலில் இன்றைக்கு எந்த முறையை அனுசரித்தால் எந்த விதமான தலையங்கம் கொடுத்தால் அதிகமான பத்திரிகைகளை விற்கலாம் என்று இதை ஒரு கலையாக வைத்துக்கொண்டு இதில் ஆராய்ச்சி செய்வதுபோல் தோன்று கிறது. இந்த முறையில் பல பத்திரிகைகள் தலைப்புகளை கொடுத்து அதன் காரணமாக அதிகமாக விற்கும்படியான நிலைமை வரும்போது எல்லோ ரும், குறிப்பாக இளைஞர்கள் இந்தப் பத்திரிகைகளை அதிகமாக வாங்கு கிறார்கள். ஆகையினால் மற்றவர்கள் பார்த்து நம்முடைய தரம் இவ்வளவு தானா, தமிழ்நாட்டின் பண்பாடு இவ்வளவுதானா என்று அவர்கள் குறைவாக நினைக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதே மாதிரிதான் இன் றைக்கு எழுதுவதில் மட்டும் இல்லை, படங்கள் போடுவதில் மட்டும் இல்லை, பேசுவதிலும் தமிழர்களுடைய பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு

பேசவேண்டும். அதற்காகத்தான் **Section 292-B** கொண்டுவரப் பட்டிருக்கிறது. அதை என் அண்ணாமலை தங்களை தாக்குவதற்கென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைத்தார் என்று தெரியவில்லை. அவருடைய கட்சியாருடைய பேச்சை மனதில் வைத்துக்கொண்டு சொன்னாரோ என்று சொல்ல நான் தயாராய் இல்லை. அவர் அப்படி நினைத்ததற்கு என்ன காரணம் ஏற்பட்டது என்று அவர் தன் மனதை ஆராய்ந்து பார்த்தால் ஒரு சமயம் உண்மை வெளிப்பட்டாலும் வெளிப்படலாம். **'By words, either spoken or intended to be read or by signs or by visible representations, makes any imputation which is grossly'.** இப்போது வேறு யாராவது பொதுவாக இங்கே இருக்கின்ற நிலைமை தெரியாது இருந்து அப்படிப்பட்டவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு இருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இந்த முறையில்தான் பேசுகிறார்கள்போல் தெரிகிறது. அதை வைத்துக்கொண்டுதான் சர்க்கார் இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்று எண்ணும்படியாகத்தான் அண்ணாமலை அவர்களின் பேச்சு இருக்கிறது. அந்த எண்ணத்தை மாற்றும் வகையில் **M. P.** சுப்ரமணியம் அவர்கள் பேசினார்கள். ஆனால் அதை மாற்றுவது கஷ்டம். சட்ட சபைகளில் பேசும்போதுகூட நாம் கொஞ்சம் யோசித்து பேசவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நாம் தமிழன் என்ற முறையில் நாம் சரிவர பேசவேண்டும் என்பது என் கருத்து. இதுமாதிரி அரசியல் கட்சிகள் பேசினாலும் கூட இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "நாங்கள் திராவிட முன்னேற்றக் கட்சியை சேர்ந்தவர்கள். நீங்கள் காங்கிரஸ்காரர்கள். அதன் காரணமாக எங்களை ஒழிக்கவேண்டும் என்றே இந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறீர்கள்," என்று நாளைக்குச் சொல்வார்களே என்பதற்காக இதில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கப் போவதில்லை. அதேமாதிரி யார் பேசினாலும் அப்படித்தான். கனம் அண்ணாமலை அவர்கள் இந்தச் சட்டம் அவர்கள் கட்சிக்கு ஆட்டம்பாம் போல வந்திருக்கிறது என்று சொல்வதில் இருந்து அவர்கள்தான் அப்படிப் பேசுகிறார்களே, அவர்களுக்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறதோ என்று கூட இங்கே அவர் பேச்சைக் கேட்டவர்கள் பலர் எண்ணக் கூடும். இப்படி எதையும் யோசிக்காமல் அவர் பேசக்கூடாது.

SRI M. P. SUBRAMANIAM: சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஸ்ரீ அண்ணாமலை அவர்கள் பேசிய பேச்சை வைத்துக்கொண்டு தவறான முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் பேசுகிறது என்று கருத்துப்பட அமைச்சர் அவர்கள் பேசுவது டீசென்சி ஆகாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: டீசென்சி இல்லாமல் பேசிவிட்டார்கள் என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. உண்மையில் திராவிட முன்னேற்றக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் அவர் அப்படிப் பேசியிருக்கக்கூடாது என்றுதான் நான் விளக்க விரும்புகிறேன். என் பேச்சு இன்டீசன்ட் என்றால் (ஸ்ரீ எம். பி. சுப்பிரமண்யம்: நான் இன்டீசன்ட் என்று சொல்லவில்லை). இன்டீசன்ட் என்று சொல்லாவிட்டாலும், டீசென்சி இல்லை என்றால், நான் சொல்வது இந்தச் சபைக்கு விரோதமாக—இன்டீசன்ட் ஆக இருந்தால் சபைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தச் சட்டம் எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்தத் தனிப்பட்ட மனிதராக இருந்தாலும்—கண்டபடி பேசுவதைத் தடுக்கக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தக் குல்லாவை ஸ்ரீ அண்ணாமலை அவர்கள் தூக்கிப் போட்டுக்கொள்ள வேண்டாம் என்பது எனது தாழ்மையான கருத்து. அதுவும் திராவிட முன்னேற்றக் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் போட்டுக் கொள்ள வேண்டாம், தனிப்பட்ட முறையில் போட்டுக்கொண்டாலும் பரவாயில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்து நல்லதொரு சட்டமாகக் கொண்டுவரவேண்டும். சீக்கிரமாகக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடுதான்

நான் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புகிற தீர்மானத்தைக் கொண்டு வரவில்லை. கனம் அங்கத்தினர்கள் யோசனைபடி இப்போது பொறுக்கு கமிட்டிக்கு அனுப்புகிற தீர்மானத்தை ஒப்புக்கொள்கிறேன். எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Indian Penal Code and the Code of Criminal Procedure (Madras Amendment) Bill, 1960 (L.A. Bill No. 7 of 1960), and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri C. Subramaniam.
The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri T. T. Daniel.
Sri T. Sampath.
Sri V. S. Manickasundaram.
Sri P. Ramachandran.
Srimathi T. N. Anandanayaki.
Sri A. P. C. Veerabahu.
Sri V. Vedayyan.
Sri M. P. Subramaniam.
Sri P. S. Chinnadurai.
Sri S. Sowdi Sundara Bharathi.
Sri D. S. Authimoolam.
Sri M. Kalyanasundaram.

The motion was put and carried.

MR. SPEAKER : There are two more Bills. I do not know if the House likes to sit till these two Bills are disposed of.

THE HON. SRI C. SUBRAMANIAM : We can dispose of these two Bills. There may not be much discussion on them.

(5) THE MADRAS ANATOMY (AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 10 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be taken into consideration.

This is a non-controversial Bill, and the various provisions are well known. I move that the Bill be taken into consideration.

MR. SPEAKER: The question is—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3, 4 and 5 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be passed.

MR. SPEAKER: The question is—

That the Madras Anatomy (Amendment) Bill, 1960 (L.A. Bill No. 10 of 1960) be passed.

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS CORNEAL GRAFTING BILL, 1960 (L.A. BILL NO. 11 OF 1960).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras Corneal Grafting Bill, 1960 (L.A. Bill No. 11 of 1960) be taken into consideration.

Sir, this is also a similar Bill.

MR. SPEAKER : The question is—

That the Madras Corneal Grafting Bill, 1960 (L.A. Bill No. 11 of 1960) be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2, 3, 4 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

That the Madras Corneal Grafting Bill, 1960 (L.A. Bill No. 11 of 1960) be passed.

MR. SPEAKER : The question is—

That the Madras Corneal Grafting Bill, 1960 (L.A. Bill No. 11 of 1960) be passed.

The motion was put and carried and the Bill was passed.

II.—ANNOUNCEMENT—*cont.*

Sittings of the House.

MR. SPEAKER : Before we adjourn, I have to announce that the Business Advisory Committee this morning decided to have an afternoon session on the 27th April 1960 from 3 o'clock and to take the following Bills into consideration :—

(1) The Madras District Collectors Powers (Delegation) Amendment Bill, 1960.

25th April 1960] [Mr. Speaker]

(2) The Legal Practitioners (Madras Amendment) Bill, 1960.

(3) The Madras Coinage (Alteration of References) Bill, 1960.

(4) The Madras Judicial Proceedings (Regulation of Reports) Bill, 1960, to be referred to the same Select Committee as that of the Indian Penal Code Bill.

(5) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 as amended by the Select Committee.

The Committee also decided that the Electricity Board Budget may be taken up for discussion at the next session of the Assembly.

The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 5 p.m.

The House then adjourned.

X.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

Nil.

B.—Reports; Notifications and other papers.

* 79. *Review of progress made during* 1959-60 *and programme for* 1960-61 *on handloom industry development schemes (Demand XXI—Co-operation.)*

* 80. *Speech by the Hon. the Minister for Works on Civil Works (Demand XXVI) and Civil Works Establishment Tools and Plant (Demand XXVII).*

* 81. *Speech of Hon. Srimathi Lourdhammal Simon, Minister for Local Administration while moving the Demand XXVIII—Civil Works—Grants-in-Aid.*

* 82. *Minutes of Proceedings of the Select Committee on the Madras City Tenants' Protection (Amendment) Bill,* 1959 *(L.A. Bill No.* 26 *of* 1959).

83. *List of Unstarred Questions for 25th April* 1960 *(Question Nos.* 361 *to* 453) *together with separate statements for Question Nos.* 1090, 1905, 1906, 1907, 1908, 1909, 1910, 1931 *and* 1932 *(New Nos.* 391, 445, 446, 447, 449, 450, 451 *and* 452).

---

* Circulated on 24th April 1960.

APPENDIX I.

[Vide answer to clause (*a*) of the starred question No. 801 asked by Sri S. Pakkirisami Pillai and Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on 25th April 1960, page 187 supra.]

The following measures have been taken by the Corporation of Madras for eradicating the mosquito nuisance in the City as they are mainly responsible for eradicating this nuisance: —

(1) Six special gangs consisting of 24 thozhilalies have been appointed for the intensification of the anti-larval measures in the City.

(2) Deweeding and edging of the rivers and the Canal. Oiling of the breeding places along the waterways.

(3) Staff for the proper maintenance and oiling of the storm water drains has been strengthened.

(4) With the help of the Conservancy staff, the removal of silt and sullage water from cess pits is being attended to before oiling is done. There are about 9,000 cess pits and 8,000 cess pools in the City which receive constant attention.

(5) Wells, tanks, overhead tanks and cisterns have been taken up under the 'National Malaria Eradication Programme' for the intensification of anti-larval measures.

(6) Instructions have been issued to the Senior Entomologist, Malaria Eradication Programme to carry out a check survey of the City and submit a report on the prevention of the mosquito nuisance.

(7) Mechanical sprayers have been ordered for, to supplement the existing hand sprayers.

(8) Proposals have been placed before the Standing Committee and the Council of the Corporation for sanction of additional staff consisting of 10 maistries and 100 thozhilalies for anti-mosquito campaign. Fifty thozhilalies are also proposed to be appointed for cleansing the main drains and storm water drains.

APPENDIX II.

[Vide answer to unstarred question No. 391 asked by **Sri A. Vedarathnam** at the meeting of the Legislative Assembly held on 25th April 1960, page 234 supra.]

A.—(*a*) 20,620 acres.

(*b*), (*c*) & (*d*) The following schemes have been sanctioned to provide irrigtion facilities to these lands :—

Name of the scheme.	*Extent of lands to be benefited,* ACS.
1 Mulliar Pumping Scheme (Thagattur)	1,500
2 Devambalpatnam Pumping Scheme	350
3 Ayakkarambalam Pumping Scheme	700
4 Pumping Scheme in Aymoor village	500
5 Valavanur Pumping Scheme	1,970
6 Thennadar Pumping Scheme	1,040

Of the above schemes, the first four have already been completed and put to use. The schemes referred to under items (5) and (6) are under execution by the Public Works Department. Further, another pumping scheme, namely, the Oradiambalam Pumping Scheme expected to benefit an extent of 113 acres is under consideration.

(*e*) 9,404·36 acres.

(*f*) Out of 9,404·36 acres, an extent of 54·81 acres has been assigned to landless poor persons up to 31st December 1959. A special staff consisting of one Deputy Tahsildar, two Revenue Inspectors and one special Deputy Surveyor has been appointed to dispose of the applications for assignment of the lands.

